விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 10 ஞாயிற்றுக்கிழமை (22.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# வடக்கில் இன்னமும் யுத்த சூழ்நிலை

## ஓய்வு பெற்றார் தயா ரத்நாயக்க!




(கொழும்பு)

நேற்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் படைத்தளபதி லெப்.ஜெனரல் தயா ரத்நாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதனிடையே ஜெனரல் தயா ரத்நாயக்கவுக்கு கொழும்பில் அமைந்துள்ள பாதுகாப்புத்துறை அமைச்சின் மைதானத்தில் நேற்று சனிக்கிழமை 15 ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் அச்சம் தொடர்கிறது - பிரிட்டன்



(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் அங்கு வடக்கு மாகாணத்தில் யுத்த அச்சம் இன்னமும் நீங்கவில்லை என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானி பிரதி உயர்ஸ்தானிகர் வோரா டேவிஸ் வெளியிட்டுள்ள ஊடக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தமிழர்கள் உள்நாட்டுப் போரி 15 ஆம் பக்கம் பார்க்க....

## குற்றவாளிகளே நீதிபதிகளா?

## சுஷ்மா விரைவில் இலங்கை வருவார்



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் இந்த மாத இறுதியில் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜின் இலங்கைக்கான பயணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப் 15 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற சாட்சியாளர்களின் தகவல்களை வெளியிட ஐ.நா தடை

(கொழும்பு)

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஜெனிவா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் வெளியிடப்பட்டாலும், சாட்சியாளர்கள் தொடர்பான தகவல்களை 2035 ஆம் ஆண்டு வரை வெளியிடக் கூடாது என தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு இந்த தடையை விதித்துள்ளது.

அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளின் பெயர் விபரங்களை விசாரணைக் குழு உறைக்குள் இட்டு சீல் வைத்துள்ளதாக ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்குற்ற விசாரணைக்குழுவின் முன் சாட்சியாளர்கள் சாட்சியமளித்துள்ளதுடன் 4 ஆயிரம் எழுத்து மூலமான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதனைத்தவிர இரண்டு வெளிநாட்டு ஊடக 15 ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோரின் உறவுகள் யாழில் கண்ணீருடன் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

படையினரிடம் நாங்கள் ஒப்படைத்த பின்னர் காணாமல் போனவர்கள் எங்கே? நீதியை எதிர்பார்க்கும் தமிழர்களுக்கு மட்டும் எதற்காக நீதி மறுக்கப்படுகின்றது? சர்வதேசமே ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை மார்ச் மாதத்தில் வெளியிடு எனக் கோரி காணாமல் போனவர்களின் 15 ஆம் பக்கம் பார்க்க....

## மோட்டார் சைக்கிள் விபத்து யாழ்.பல்கலை மாணவன் பலி

### மற்றுமொரு மாணவன் உட்பட மூவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதுண்டு விபத்துக்குள்ளானதில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவன் உயிரிழந்ததுடன் மற்றுமொரு மாணவன் உட்பட மூவர்படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை நான் தோற்கடிப்பேன்-ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால், அவரை தோற்கடிக்க தாம் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவார் என தான் எந்த வகையிலும் எதிர்பார்க்கவில்லை எனவும் பிரதமர் கூறியுள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD
உலகமே திரும்பிப் பார்க்கும் எங்கள் இடம்

SMGUA32H5100 – 6000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு – ரூபா69,999
DELL-NB-I3 – வட்டியின்றிய கொடுப்பனவு – ரூபா83,299
SHT-1691P – 2000ரூபா விலைக்கழிவு – ரூபா19,299
SL-ECO72 – இலவசம் STAND FAN – ரூபா41,999
SL-SWMFR72 – 10000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு – ரூபா43,999

இல-106 கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 221 9291
இல-125 கே.கே.எஸ், வீதி, சுன்னாகம். தொ.பே:-0212242335
இல-17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே:-0212283755
இல-149 கண்டி வீதி, வவுனியா. தொ.பே:-0778561406

(C-217) (சி-9979)

நடுவுநிலை தவறா [illegible] உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எம் இன நீதிக்காய் அணி திரள்வோம்'

## மாபெரும் பேரணிக்கு மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா விசாரணை அறிக்கையை விரைவாக வெளியிடுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 24-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள மாபெரும் பேரணியில் அனைவரும் அணிதிரள வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இறுதிப் போரிலே எம் இனத்தின் மீது இலங்கை அரசாங்கம், அதன் இராணுவ இயந்திரத்தைக் கொண்டு ஈவிரக்கமின்றி நிகழ்த்திய மனிதப் பேரவலங்களுக்கு, ஆறு வருடங்களை எட்டிய நிலையிலும் நீதி கிடைக்கவில்லை.

இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் நம்பிக்கை ஊட்டும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலே இது தொடர்பான பிரேரணைகள் சர்வதேச நாடுகளின் பேராதரவுடன் நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆனால் அதற்கெல்லாம் கடுகளவும் அசையா நிலையிலேயே மகிந்த தலைமையிலான இலங்கை அரசாங்கம் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் இவ்வருட மார்ச் மாதமளவில் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை திட்டமிடப்பட்டபடி சமர்ப்பிக்கப்பட இருந்தது. எனினும் இலங்கையின் புதிய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளிற்கு இணங்க விசாரணை அறிக்கை செப்டெம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் ஆனது ஈழத்தமிழர்களாகிய எமக்கு வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போன்ற மிகப் பெரிய வேதனையுடனான ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் வடக்கு-கிழக்கு இராணுவ கட்டமைப்பில் எதுவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. இராணுவத்தினரின் தலையீடுகள் தமிழர் பிரதேசம் எங்கும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அச்சுறுத்தல், பின்தொடர்வது, கண்காணிப்புக்கள் என இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும் இச்சூழ்நிலையை சர்வதேசம் பராமுகப்படுத்துவதாகவே இவ் விசாரணை அறிக்கை பின்போடப்பட்டமையை நாம் நோக்குகிறோம்.

இந்நிலையில் தற்போதைய புதிய அரசாங்கத்தினால் கூறப்படுகின்ற உள்ளக விசாரணையானது குற்றவாளிகளை காப்பாற்ற முற்படுவதோடு, ஈழத் தமிழர்களாகிய எமக்கு அடிப்படை மனித உரிமை பிரச்சினைகளை நீர்த்துப் போகச் செய்வதற்கான முன்னேற்பாடுகளே அன்றி வேறல்ல.

இலங்கையின் புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினது உள்ளக விசாரணையில் எமக்கு துளியளவேனும் நம்பிக்கை இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு எமது வாழ்நிலைப் பிரச்சினைக்குரிய நீதி கிடைக்க இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேசம் போதிய அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

இதன் மூலமாக தமிழருக்குரிய நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழி கிடைக்கும் என நாம் நம்புகிறோம். மேலும் ஈழத்தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலை, போர்க குற்றங்கள் தொடர்பில் சர்வதேச தரத்திலான விசாரணை அறிக்கையை விரைவாக வெளியிட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்துகின்றோம்.

எனவே தமிழ் மக்களின் உரிமைக் குரலாக விளங்கும் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் எமது நீதிக்கான ஒருமித்த குரலை சர்வதேசத்திற்கு அமைதி வழியில் முரசறைய அன்றைய தினம் பல்கலை முன்றலில் ஆரம்பமாகும் பேராட்டத்தில் அனைவரும் அணிதிரளுமாறு கோரிக்கை விடுக்கிறோம் என்றுள்ளது. (எ-11)


**வேலையாள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு:-0779498308**

(9586)

**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்





T.P.: 0719315664 , 0777569205

27.02.2015 முதல் 02.03.2015 வரை 4 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**மீண்டும் யாழில்**

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-9908)

**விற்பனைக்கு**

தரமான வைக்கோல் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

**T.P:0772566941**

(9580)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-219)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

**தேவை**

உணவு, சிற்றுண்டி தயாரிக்கக் கூடிய(வடை, றோல், பற்றிஸ்) பெண்கள் தேவை.

**தொ.பே:-0772367848**

(சி-237)

**வாடகைக்கு**

யாழ்.மாநகர எல்லைக்குள் அலுவலகம், வியாபாரம், வீடு இவற்றிலொன்றுக்கு ஏற்ற கட்டிடம் வாடகைக்குண்டு


தொடர்புகளுக்கு:

**0714797357, 0714408794**

(9584)


## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி கிரியை நிகழ்வும்

### செல்வி சு.மதுஷிகா



அன்னை மடியில் 17 - 08 - 2000

ஆண்டவன் அடியில் 23 - 01 - 2015

**எம் பாசமகளே! செல்லமே!**

வார்த்தைகள் மௌனமாகி கண்ணீருடன் கரையுதம்மா...
எண்ணிய வேளையெல்லாம் எமை மறந்து உனைத் தேடுகின்றோம்
உன் கனிமுகத்தை காணாது மாதம் ஒன்று போகுதம்மா... மது...
மொட்டொன்று மலர்ந்த வேளை வசந்தம் இங்கே வீசியது
சற்றென்று வந்த காலன் உனை அழைத்திட சென்றாயோ செ(ா)ல்லாமல்...
முயன்றும் முடியல தேற்றியும் தேறல... ஆற்றிட நெஞ்சத்தை நீதான் வரணுமம்மா...

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

கடந்த 23.01.2015-ல் சிவபதம் அடைந்த எங்கள் அன்பு செல்வத்தின் வீட்டுக் கிரியைகள் 22.02.2015 இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதலளித்த, கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த மற்றும் இறுதி கிரியையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கச்சாய் வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்**


TCT MULTI TRADE CENTRE

# அழைப்பிதழ்

தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகர்
திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின்
மேலும் ஒரு கல்விப் பணி
அறிவை வளர்த்து அகிலத்தை வெல்லும்
அன்புக் குழந்தைகளுக்கான
எழிலூர் அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி

## திறப்பு விழா

வட மாகாண சபை பேரவைத் தலைவர்
கௌரவ சீ.வீ.கே.சிவஞானம் அவர்களால்
இன்று திறந்து வைக்கப்படவிருக்கின்றது
கடலென விரிந்த கல்வி கடலில்
கடுகளவேனும் கற்றுத்தேறுவோம்.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

இடம்:-கடற்கரை வீதி, எழிலூர் குருநகர்.
காலம்:-22.02.2015 இன்று மு.ப 11 மணி

(சி-229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



அமரர் திரு.குணரட்ணம் பற்குணராஜா
(யாழ். மாநகர சபை முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்,
மாநகர சபை முதல்வரின் செயலர்)
பற்று நிறைந்த எம்பள்ளியின் பழைய
மாணவர்
கிட்டத்துத் தண்ணீராய் ஓடி வந்து உதவும்
அயலவர்
உற்ற செயற்றுணையாகி-முன்னாள் முதல்வருடன் எந்நாளும்
மறவா பாடசாலையின் அபிவிருத்தியில் கைகொடுத்தவரின்
பிரிவுத் துயரில் நாமும் பங்கேற்று ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தனை செய்கின்றோம்.
நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம்.
(சி-227)


# உலகமுடிவில் காணாமற்போன வெளிநாட்டவர் உயிருடன் மீட்பு

நுவரெலியா, ஒட்டன் சமவெளியில் அமைந்துள்ள உலகமுடிவில் விழுந்து காணாமல் போனதாக கூறப்படும் சீனப்பிரஜை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக விமானப்படையினர் தெரிவித்தனர். மரமொன்றில் அகப்பட்டிருந்த நிலையிலேயே இவர் விமானப் படையினரால் மீட்கப்பட்டுள்ளார். உலகமுடிவை பார்வையிடு வதற்காக சென்றிருந்த போதே, குறித்த வெளிநாட்டவர் அங்கிருந்து கீழே விழுந்துள்ளார்.

விமானப்படையினரின் ஹெலிகொப்டர் மூலம் மீடக்கப்பட்டவர் அம்புலன்ஸ்மூலம்நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776
(சி 9913)

**விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?**

இது ஒரு அரிய சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:- 076 639 8366
(9579)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 25 3/4 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ கணக்காளர்<br>தொ.இ: B/4140 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4160 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம் கி.பா: 4 1/4<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4142 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 17 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: charterd acconting<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4161 |
| பிறப்பு: 1980 RC<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/4145 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 19 செவ் 7 இல்<br>உயரம்: 4'5"<br>தகைமை/தொழில்: கல்வியற் கல்லூரி<br>தொ.இ: G/4162 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 25 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4147 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62 3/4 சூரிசெவ் 8 ல்<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: G/4165 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# மரண அறிவித்தல்

## அமரர் திரு.குணரட்ணம் பற்குணராஜா



யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. குணரட்ணம் பற்குணராஜா M.A. Regional Planning (சாமஸ்ரீ தேசமான்ய, அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவி நிலை அலுவலகர் யாழ். மாநகர சபை, செயலாளர், யாழ். மாநகர முதல்வர்) அவர்கள் 18.02.2015 புதன்கிழமை அன்று மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம் (பிரதம சிறாப்பர், கார்கில்ஸ் சிலோன் லிமிற்றெட்) சிவக்கொழுந்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சோமசுந்தரம் அன்னபூரணம் தம்பதியினரின் மருமகனும் ஆவார். அன்னார் யோகேஸ்வரி (முன்னாள் முதல்வர்-யாழ். மாநகர சபை, இளைப்பாறிய ஆசிரியை யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி) அவர்களின் அன்புக் கணவரும், உபேந்திரா (மருத்துவபீட மாணவன் புதுச்சேரி பல்கலைக்கழகம், இந்தியா), சுபேந்திரா (விமானப் பொறியியல் பீட மாணவன் குஜராத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சற்குணேஸ்வரி, இராஜரட்ணம், காலஞ்சென்ற தெய்வகுணேஸ்வரி, ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாருடைய ஈமைக்கிரியைகள் 22.02.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்குப் பூதவுடன் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(9575)

365, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6917,
071 801 5696

தகவல்:
திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
(மனைவி),
முன்னாள் யாழ்.மாநகர முதல்வர்.
பிள்ளைகள்:– உபேந்திரா, சுபேந்திரா.


# இன்றைய இராசி பலன்

22.02.2015
மாசி 10, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 9.36 மணிவரை
ரேவதி பின்னிரவு 1.38 மணிவரை
இராகுகாலம் 5.01-6.31 மணிவரை
சுபநேரம் 9.31- 11.01 மணிவரை
சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்

வளவன்

**மீனம்:** திட்டமிட்ட பயணம் ஒன்றில் திருப்தி காண்பீர்கள். புத்திசாதுரியமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள். குடும்பத்தில் முன் கோபத்தை குறைப்பது நல்லது. தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள். பொழுது போக்குவிடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய பொருட்சேர்க்கை உண்டு.

**இடபம்:** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரும். செல்வாக்கு மேலோங்கும் நாள். பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்பு உண்டு. மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.

**மிதுனம்:** மனதுக்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள். வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த பயம் அகலும். கோரிக்கைகள் நிறைவேறும் நாள். பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் கூடும் நாள்.

**கடகம்:** சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்பு உண்டு. மனதில் உச்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். ரோக பயம் உண்டு. எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசம் காட்டுவீர்கள்.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம். இளைய சகோதரர் வழியில் இனிய தகவல் ஒன்று கிடைக்கும்.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம். ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும் நாள். சுபசெலவுகள் ஏற்படலாம். நாணயமும் நேர்மையும் கொண்ட நண்பர்களால் நன்மை உண்டு.

**விருச்சிகம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். தொலைபேசித் தகவல் நன்மை தரும். புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** சுக தகவல்கள் வந்து சேரும் நாள். உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படலாம். தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும். நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம். குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள். எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும். சுற்றத்தினர் வரவால் சுகம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோத்தவின் ஆதிக்கம் இனிமேல் கிடையாது

(கொழும்பு)

**கொழும்பு வாழ் மக்களுக்கு இனிமேல் கோத்தபாய ராஜபக்ஷவினுடைய ஆதிக்கம் கிடையாது என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.**

மேலும் கொழும்பு வாழ் மக்களின் உரிமையை பெற்றுக் கொள்ள ஐக்கிய தேசிய கட்சியின் யுகத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தெமட்டகொடை பொதுச்சந்தை கட்டட தொகுதியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

கொழும்பு வாழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கு குரல் கொடுத்து வந்துள்ளோம். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது கொழும்பு வாழ் மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்தனர். வீடுகள் உடைக்கப்பட்டன. பலவந்தமாக காணிகள் பறிக்கப்பட்டன.

இது தொடர்பில் பல தடவைகள் நீதிமன்ற வாசலில் வீற்றிருந்தோம். எனினும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் கொழும்பு வாழ் மக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வந்தனர். எனினும் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியானது நாடளாவிய ரீதியில் தோல்வி காணும் போது கொழும்பு மாநகரில் ஐ.தே.க. வாக்கு வங்கியை எம்மால் பாதுகாக்க முடிந்தது.எனவே கொழும்பு வாழ் மக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி நன்றிக் கடன்பட்டுள்ளது. இந்நிலையில் கொழும்பு நகரில் மக்களின் வாழ்க்கையில் இனிமேல் கோத்தபாய ராஜக்ஷவின் ஆதிக்கம் இருக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பேசும் படம் - 32

இடம்:-கண்டாவளை, கிளிநொச்சி.




தாயும் சேயும் நலம்; உரிமையாளர்.
நம்ப முடிகிறதா? ஆனால் உண்மையுங்க!

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
சி.வீரகத்தி

## இரண்டு தலைகளுடன் பிறந்தது கன்றுக்குட்டி

கிளிநொச்சி கண்டாவளை பகுதியில்,பசு ஒன்று இரண்டு தலைகளுடனான கன்றினை ஈன்றுள்ளது.

குறித்த பகுதியில் தனியார் ஒருவரின் வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த பசுவே இரு தலைகளுடனான மாட்டுக் கன்றினை அண்மையில் ஈன்றதாகவும் கன்றினை ஈன்ற பசுவும் மாட்டுக்கன்றும் ஆரோக்கியமாக காணப்படுவதாகவும் அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆச்சரியத்துடன் கன்றினை பார்வையிட்டு வருகின்றனர். பேசும் படத்தில் இக் கன்றுக்குட்டியைக் காணலாம். (அ-2)

## மகிந்த பட்ஜெட்டில் வழங்கிய நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படுமா? - டி. சில்வா



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த ஒக்டோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வழங்கிய நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுமா? என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவர்களுக்கும் நிவாரணங்களையும் சம்பளங்களையும் வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். இந்த சலுகைகளையும் சம்பள உயர்வுகளையும் புதிய அரசாங்கம் அப்படியே வழங்குமா? என்பதனை அறிந்து கொள்ள விரும்புகின்றோம்.

புதிய அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தில் ஓய்வூதியம் பெற்றுக் கொள்வோருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் எவ்வாறான சலுகைகள் வழங்கப்படும் என்பதனை பிரதமர் விளக்க வேண்டும்.

அரச ஊழியர்களின் சம்பளங்களை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிப்பதாகவும், முதல் கட்டமாக 5000 ரூபாவினால் உயர்த்துவதாகவும் அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிலையியற் கட்டளை 23/2 கீழ் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இந்தக் கேள்விகளை எழுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தமிழக மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு அளிக்க வேண்டும்!



(கொழும்பு)

தமிழக மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என மத்திய அரசுக்கு தி.மு.க.தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டில்லியில் நமது பிரதமர் நரேந்திர மோடியுடன் ஒப்பந்தம் பேசிக் கொண்டிருந்த போது கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர்களின் மீன்பிடி சாதனங்களையும் கைப்பற்றி கடலில் எறிந்துள்ளனர். இந்தத் தாக்குதலில் அந்தோணி. ஆரோக்கியசாமி. அருள். வரதராசன். நெக்லஸ். சேசு ஆகிய மீனவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதேபோல். கடந்த 13ஆம் திகதி கோடியக்கரை அருகே நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர். படகில் இருந்த மீன்களையும் அள்ளிச் சென்றுள்ளனர்.

மோடி- சிறிசேன சந்திப்புக்குப் பிறகு இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் இருக்காது என நம்பியதற்கு மாறாக இந்த இரண்டு நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. எனவே, இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு கவனம் செலுத்தி தமிழக மீனவர்களுக்கு நிரந்தர பாதுகாப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என அவர் மேலும் தெரவித்துள்ளார். (இ-5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சு.கவில் பலபேர் வேட்பு மனுத்தாக்கல் செய்ய முடியாத நிலை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் திருடர்கள், மோசடிக் காரர்கள் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு செய்தால் சுதந்திர கட்சி உறுப்பினர்களில் 80 பேருக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஹெல உறுமயவும் தான் எங்கள் கட்சியை பிளவுபடுத்த முயற்சிக்கிறார்கள்.

குறித்த இரு கட்சியினரும் நூறுக்கு எழுபத்தி ஐந்து வீதம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி குறித்து குற்றம் சுமத்துகின்றார்கள்.

மக்கள் விடு தலை முன்னணி மற்றும் ஹெல உறுமய கூறும் வகையில் தற்பொழுது உள்ள உறுப்பினர்களில் 80 பேர் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்படும். அப்படி நடந்தால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எப்படி வெற்றி பெறும். திருடர்கள் என கூறி மன ரீதியாக தோல் வியடைய செய்வதற்கே இவர்கள் முயற் சிக்கிறார்கள் என சஜின் வாஸ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல்- 28.02.2015

## புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84 அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும் தொழில் தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

84 அ (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராகவிருக்கின்ற எவ் ஆளும் அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமர்த்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்) சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம் அமய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன் அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திற்கும் அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கும் உள்ள தூரத்தைக் கருத்திற் கொண்டு தொழில் தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக் கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின் போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால். இவ்வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ் விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில் தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் 2015 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடத்தப்படும்.

05 இது தொடர்பாக சகல தொழில் தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய**
**2015.02.16**

**மஹிந்த தேசப்பிரிய**
**தேர்தல்கள் ஆணையாளர்**

(க-233)

### ஜனாதிபதி மைத்திரிபாலவின்

# இந்திய விஜயத்தின் போது இரண்டுகோடி ரூபா சேமிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயத்தின் போது சுமார் இரண்டு கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேவையற்ற செலவுகளை வரையறுத்திருந்தார்.

கடந்த 15ஆம் திகதி முதல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று நாட்கள் இந்திய விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதற்கான மொத்தச் செலவு 57 இலட்ச ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது சுமார் இரண்டு கோடியே அறுபது இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய விஜயத்தின் போது சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்ச ரூபா செலவுகளை சேமித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாதாரண பயணிகள் விமானத்தில் பயணத்தை மேற்கொண்டதுடன், அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜயங்களுக்காக பிரத்தியேக விமானங்களை பயன்படுத்தியிருந்தார்.

இவ்வாறு இந்தியாவிற்கு தனியாக விமானத்தைப் பயன்படுத்தி பயணம் செய்வதற்காக மட்டும் ஒருகோடியே பதினாறு இலட்சம் ரூபா செலவாகியுள்ளது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல்- 28.02.2015

## வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

## வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| “அ” கட்சி | | | | * | |
| “ஆ” கட்சி | | | | * | |
| “இ” கட்சி | | | | * | |
| “ஈ” கட்சி | | | | * | |
| “உ” கட்சி | | | | * | |
| சுயேச்சைக் குழு 1 | | | | * | |
| 1 | | | 9 | | |
| 2 | | | 10 | | |
| 3 | | | 11 | | |
| 4 | | | 12 | | |
| 5 | | | 13 | | |
| 6 | | | 14 | | |
| 7 | | | 15 | | |
| 8 | | | 16 | | |

✦ ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்.

1. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே .

2. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக் கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் “புள்ளடி (X)” அடையாளமிடல் வேண்டும்.

03. வாக்குச்சீட்டின் கீழேயுள்ள பகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கம் கொண்ட கூடொன்றும் அதற்கு வலது பக்கத்தில் வெற்றுக்கூடுகள் இரண்டும் உள்ளன. இலக்கத்தினைக் கொண்ட கூட்டில் போன்றே வலது பக்கத்திலுள்ள வெற்றுக் கூடுகளில் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள் “விருப்புகளுக்காக (X) என்ற புள்ளடியை” இடலாம். மூன்று விருப்புக்களையும் ஒரு வேட்பாளருக்கு அல்லது இரண்டு விருப்புக்களை ஒருவருக்கும் ஒரு விருப்பை இன்னொருவருக்கும் அல்லது மூன்று விருப்புக்களை மூன்று வெவ்வேறான வேட்பாளருக்கும் பகிர்ந்தும் அடை யாளஞ் செய்யலாம்.

4. வாக்கொன்று அடையாளமிடாது விருப்புகள் மாத்திரம் அடையாளமிட்டுள்ள வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றது. அது நிராகரிக்கவும்படும். ஆகையினால் முதலில் நீங்கள் விரும்பும் ஒரு கட்சியின் அல்லது குழுவின் சின்னத்திற்கெதிரேயுள்ள வெற்றுக் கூட்டில் (X) புள்ளடியிட்டு வாக்கை அடையாளமிட்டு அதன்பின் உங்கள் விருப்பின் பேரில் விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதே பொருத்தமானது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

**தேர்தல்கள் செயலகம்,**
**இராஜகிரிய**
**2015.02.16**

**மஹிந்த தேசப்பிரிய**
**தேர்தல்கள் ஆணையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஐ.நா அறிக்கையை வெளியிட வேண்டும்

★ காணாமற்போனவர்களை மீட்டுத் தர வேண்டும்

★ தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்



# யாழில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி







(யாழ்ப்பாணம்)

இலங்கை மீதான ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கையினை தாமதிக்காமல் வெளியிடக்கோரியும் காணாமற் போனவர்களை வெளிக்கொணரு மாறும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்ட பேரணியொன்று நேற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களின் நினைவிடத்திற்கு ஊர்வலமாகச் சென்று அங்கு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் உருவப் பொம்மையும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பலநூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், மாகாண சபை உறுப்பி னர்களான திருமதி அனந்தி சசிதரன், பா.கஜதீபன், தமிழரசுக்கட்சியின் உப தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா, வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சுஜீவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 100 | 140 |
| தக்காளி | 160 | 220 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 |
| கோவா | 100 | 80 | 70 | 100 |
| கரட் | 200 | 140 | 120 | 250 |
| பூசணி | 110 | 100 | 70 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 160 | 180 | 120 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 140 | 200 |
| பீற்றூட | 70 | 100 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 140 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 400 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 60-90 | 180 | — | 100 |

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி கணபதிப் பிள்ளை இராசம்மா

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னா ரின் பூதவுடல் நாளை திங்கட்கி ழமை சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### விஸ்வலிங்கம் சிவபாதம்

உசனைச்சேர்ந்தவரும் தற்போது சிலாபத்தில் வசித்து வந்தவருமாகிய விஸ்வலிங்கம் சிவபாதம் கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் No3, மைத்திரி உயனக்கஞ்சுகுளிய, சிலாபம் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாதம்பை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி குமாரு ரோகிணியம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு ரோகிணியம்மா கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சிதம்பரப்பிள்ளை வீரகத்தி

(ஓய்வு நிலை தபாலக ஊழியர்)

கந்தப்பவளவு, கரவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வீரகத்தி கடந்த 19ஆம் திகதி அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கரவை சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### செல்லையா இந்திரசித்து

மண்கும்பானை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இந்திரசித்து கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நடராஜா பத்மநாதன்

(மனோகரா தியேட்டர் முன்னாள் உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாக வும் கொண்ட நடராஜா பத்மநாதன் கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னா ரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை St.Marylebone Crematorium, East London N2ORZ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவப்பிரகாசம் சரஸ்வதி

போர்னியோவைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடியை வசிப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சரஸ்வதி கடந்த 18 ஆம் திகதி அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை City of London Cemetery & Crematorium (Reserve Chapel), AldersBrook Road London E12 5DQ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கு-தெற்கு இளைஞர் ஒன்றுகூடும் விசேட மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

காலமாற்றத்திற்காக இளைஞர்களின் சக்தியினூடாக வடக்கின் இளைஞர்களும் தெற்கின் இளைஞர்களும் ஒன்று கூடும் மாபெரும் யாழ்.இளைஞர் மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணி முதல் பி.ப ஒரு மணி வரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிறீன்கிறாஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் ஆசீர்வாதத்துடன் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, விளையாட்டுத்துறை அமைச்சர் சட்டத்தரணி நவீன் திஸாநாயக்க, கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், நீர்ப்பாசன அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.இராசகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பு அத்துரு கிரியவிலுள்ள மாற்றம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இம்மாநாடு தொடர்பான தகவல்களை 076 779 8899 அல்லது 071 939 8899 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் கைகளைப் பலப்படுத்த ஒன்றிணையுங்கள்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைகளை பலப்படுத்த இளைஞர்களே ஒன்றிணையுங்கள் என இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் யாழ். மாவட்ட தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான சந்திரலிங்கம் சுகிர்தன் அழைப்பு விடுத்துள்ளார்.**

நாளை மறுதினம் 24 ஆம் திகதி செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் பல்கலைக்கழக சமூகம் இணைந்து ஜெனீவா பிரேரணை பிற்போடப்பட்டத்தை கண்டித்தும் குறிப்பிட்ட திகதியில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மேற்கொள்ள இருக்கும் அமைதியான கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

எமது தமிழ் மக்களின் குறிகாட்டியாக யாழ். பல்கலைக்கழக சமூகம் இருகின்றது. இவர்கள் காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்கு முறைக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார்கள். உண்மையில் இன்று சர்வதேசம் எங்களை திரும்பிப் பார்க்கின்றது என்றால் அது பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட மிக பிரமாண்டமான பொங்கு தமிழ் நிகழ்வின் மூலமே என்பதை எவரும் மறந்து விட முடியாது.

ஆனால் ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர் பல்கலைக்கழக சமூகம் பல்வேறு வகையில் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். திட்டமிட்டு கைது செய்யப்பட்டார்கள். இதனால் மாணவ சமுதாயம் தமது இன உணர்வுகளை அடக்கி வாழ்ந்து வந்தார்கள். சர்வதேசம் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வினை தருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இன்று சர்வதேசமும் பின்னடிக்கின்ற நிலையில் மீண்டும் மாணவர்கள் பொங்கி எழுந்துள்ளார்கள்.

சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைதியான முறையில் பேரணி செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து நல்லூர் வரை நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களின் கைகளை பலப்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம் என அவர் மேலும் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

# கல்லுண்டாயில் கழிவுகள் கொட்டுவதை முதல்வர் தலையிட்டு நிறுத்த வேண்டும்

## வலி.தென்மேற்கு சபை தவிசாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் தீர்மானத்தின் பிரகாரம் யாழ்.மாநகரசபை எந்த விதமான கழிவுகளையும் கொட்டுவதற்கு சபையால் அனுமதிக்க முடியாது.

யாழ்.மாநகரசபையின் முறையற்ற-பொருத்தமற்ற திண்மக்கழிவுகளால் நவாலி-ஆனைக்கோட்டை காக்கைதீவு மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அன்றும் இன் இன்றும் அனுபவித்து வருகிறார்கள்.

எனவே வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதற்கான தடை உத்தரவினை உடன் பிறப்பித்து அமுலாக்க வேண்டும் என மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் சி.மகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாநகர சபை தினமும் 100 முதல் 110 வரையிலான மாநகர கழிவுகளை பொறிமுறையற்ற வகையில் மனிதனின் உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய கழிவுகளை கொட்டி எரியூட்டி வருவதனால் வரும் புகைமூட்டம் நவாலி-ஆனைக்கோட்டை பிரதேசத்தை முற்றாக ஆக்கிரமித்து பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது.

இதனால் அப்பிரதேச மக்களுக்கு சுவாசம் சம்பந்தமான சகல நோய்களும் உருவாக வாய்ப்புள்ளதுடன் தோல் நோய், புற்றுநோய் போன்ற மிக ஆபத்தான நோய்களும் ஏற்படவுள்ளதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் ஆனைக்கோட்டை - நவாலியில் உள்ள பொது அமைப்புக்கள் தினமும் எனக்கு தொலைபேசி மூலமும் கடிதம் மூலம் இத்திட்டத்தை உடன் நிறுத்தி எமது நிம்மதியான சுபீட்சமான வாழ்வுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர்.

அத்துடன் சாவற்கட்டு, சுதுமலை, ஆனைக்கோட்டை, காக்கை தீவு, நவாலி பிரதேச கடற்றொழில் சமாசங்கள், சம்மேளனங்கள் இக்கழிவு முறையினால் மனிதன் உண்ணும் மீன்உணவில் மலக்கழிவு- திண்மக்கழிவு கலப்பதால் அம்மீனூடாக எமது யாழ்.குடா மக்களுக்கு பேரிடர் ஏற்படவுள்ளது என அறிவித்துள்ளார்கள். (இ)

# கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு

செல்லக்குட்டி கணேசனின் ஒரு புள்ளியில் ஓடும் முட்கள் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.35 மணிக்கு யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் கலாநிதி த.கலாமணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாகித்திய ரத்னா தெணியான் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணனும் மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் த.அஜந்த குமாரும் வழங்கவுள்ளனர். (இ-5)

# விபத்துக்களைத் தவிர்க்குமாறு யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் நீராவியடி புகையிரதக் கடவையில் விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து யாழ்.வணிகர் கழகம் புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)




# சிறப்புச்சான்றிதழ் வழங்கி செந்தூரன் கௌரவிப்பு



வலிகாமம் மேற்கு தொல்புரத்தைச் சேர்ந்த சிதம்பரநாதன் செந்தூரன் யாழ்.குடாநாட்டு மண்ணியல் பற்றிய ஆய்வு அளிக்கையினைச் சிறந்த முறையில் செய்தமைக்காகச் சிறப்பு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தேசியவிஞ்ஞானமற்றும்தொழில்நுட்ப ஆணையத்தின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் சங்கம் அண்மையில் கொழும்பில் நடத்திய நான்காவது ஆய்வரங்கில் யாழ். குடாநாட்டு மணல்மண்ணில், வெவ்வேறு உள்ளூர் பொருட்களிலிருந்து பெறப்பட்ட உயிர்க்கரியின் (BIO CHAR) பயன்பாடும் பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் அதன் தாக்கமும் என்ற ஆய்வு தொடர்பான அளிக்கைக்காகவே இக் கௌரவம் வழங்கப்பட்டுள்ள து.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாய இரசாயனவியல் துறையின் தலைவர் கலாநிதி (திருமதி) என்.ஞானவேல்ராஜாவின் வழிகாட்டலில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலையின் சிறப்புப் பட்டதாரியான சி.செந்தூரன் யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் ஆவார். தற்போது அமெரிக்க அரச சார்பற்ற நிறுவனத்தின் விவசாயத் திட்டத்தில் பணியாற்றும் செந்தூரன் மூத்த மிருதங்கக்கலைஞர்தண்ணுமைவேந்தன் எம்.சிதம்பரநாதனின் புதல்வன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## அவசரக் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களிற்கான மிக முக்கியமான கலந்துரையாடல் ஒன்று நாளை 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தங்கள் கோவையுடன் வருமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (இ)

# என்னிடம் முறையிடவும்

வடமராட்சிப் பகுதியில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்றுக்கொள்ளாதவிடத்து அதுவிடயம் தொடர்பாக தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எ.எம்.ஜவ்பர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள தமது காரியாலயத்தில் இது விடயம் குறித்து முறையிடலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# 33-வது ஆண்டு நிறைவும் பொதுக் கூட்டமும் இன்று

யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 33ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலட்டியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் இந்தியத் துணைத்தூதரக அதிகாரி ஆ.இராஜமாணிக்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையகத்துக்கு சாரணியத்தை வழங்கிய

# தந்தை பேடன் பவல் பிரபுவின் 158-வது பிறந்த தினம் இன்று



***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*** என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அமைவாக சிறார்கள் 6 வயது தொடக்கம் வாழ்நாள் பூராகவும் நல்வாழ்வு வாழ்ந்து சமயத்துக்கும் தேசத்திற்கும் பிறருக்கும் உதவுபுரியக்கூடிய சாரணர் இயக்கத்தை தந்தை பேடன் பவல் பிரபு வையகத்துக்கு வழங்கியுள்ளார்.

இவ்வுலகத்தில் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான வாழ்க்கை முறைகள் அனைத்தையும் ***சாரணர் வாக்குறுதி, சாரணவிதிகள் பத்துக்குள்ளேயே*** சாரணிய தந்தை வைத்துள்ளார். சாரணர்கள் தங்கள் கௌரவத்தின் மீதே வாக்குறுதி அளிக்கின்ற மிகவும் உன்னதமானது *சாரணர் வாக்குறுதி.*

*என்னால் கூடுமான வரையில்*
*எனது சமயத்திற்கும் தேசத்திற்கும்*
*எனது கடமைகளைச் செய்வேன் என்றும்*
*எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன்*
*என்றும் சாரணர் விதிகளுக்கு அமைந்து*
*பணிந்து நடப்பேன் என்றும்*
*என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.*

இச்சாரணர் வாக்குறுதியை வையகத்துக்கு வழங்கிய தந்தை பேடன் பவல் பிரவுவை உலக்க சாரணர்கள் அனைவரும் பெரும் விழாவாக கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் நாமும் தந்தை பேடன் பவலின் வாழ்க்கை வரலாற்றை எல்லா தேச மக்களுக்கும் அறிய வைப்பது எமது கடமையாகும்.

இங்கிலாந்திலுள்ள லண்டன் மாநகரில் தாயார் அம்மிரல் வில்லியம் சிமித்தின் மகள் கென்றீற்றா கிறேசிக்கும் தந்தையார் சர்வ கலாசாலை பேராசிரியர் றொபேட் கிறேஸ் பேடக் பவலுக்கும் 1857 ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி 7ஆவது குழந்தையாகப் பிறந்தார்.

தாய் தந்தையர் சூட்டிய பெயர் றோபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் ஆகும். பேடன் பவலின் 3ஆவது வயதில் தந்தையார் இறைவனடி சேர்ந்தார். தாயாரின் அரவணைப்பில் ஆறு சகோதரர் களுடன் வாழ்ந்து வந்தார். பெரும் குடும்பமாகையால் பலமுறைகளில் கஷ்ட ஜீவனம் செய்ய வேண்டிவந்தபோதிலும் பிள்ளைகள் மீது தாயாரும் தாயார் மீது பிள்ளைகளும் கொண்டிருந்த பேரன்பானது அவர்களை அந்தக் கஷ்டங்களை எல்லாம் மறக்கச்செய்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தார்.

19ஆவது வயதில் கல்லூரியில் பட்டம்பெற்று வெளிவந்தவுடன் இராணுவத்தில் இணைந்தார். குதிரைப் படையில் உப தளபதியாக பதவிபெற்று இந்தியாவுக்குச் சென்றார். கிரிமின் யுத்தத்தில் பெரும் புகழ் பெற்று 26 ஆவது வயதில் தளபதியாக பதவியுயர்வு பெற்றார். 1887 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவிலே பேடன் பவலின் ஆண்மையையும் சுவடு தொடரும் திறமையையும் கண்டு சுதேசிகள் பேடன் பவலை ***இம்பீசா*** என்று அழைத்தனர். இதன் பொருள் ***ஒருபோதும் துயில்கொள்ளா ஓநாய்*** ஆகும்.

1907 ஆம் ஆண்டு இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள பிறவுன்ஸி தீவிலே 20 சாரணிய சிறார்களுடன் முதன்முதலாக் உலகம் கண்ட சாரணர் பாசறை வாசத்தை அமைத்து சாரணியத்தை ஆரம்பித்து வைத்தார். இப்பாசறை வாசம் பெரும் வெற்றியை சாரணிய தந்தைக்கு அளித்தது. வருங்கால யுத்தத்திற்கு சிலரை பழக்கி விடுவதிலும் பார்க்க வருங்கால சந்ததியினரை வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்பதற்காக சாரணிய பயிற்சியே சிறந்தது என உணர்ந்தார்.

முதலாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்து அம்முயற்சியை தடை செய்தது. 1912.10.30 இல் இல்லற வாழ்க்கையில் ஒலெவ் சென்கிளயர் சோம்ஸ் ஐ திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மகன் பீற்றர், மகள்மார் கீதர், பெற்றி என்பவர்கள் பிறந்தார்கள். இவ் ஆண்டிலேயே இலங்கையில் மாத்தளை கிறிஸ்தவக் கல்லூரியில் F.G. ஸ்ரீபன் என்பவரால் சாரணியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டு 59 ஆவது வயதில் பேடன் பவல் 6 தொடக்கம் 11வயதினருக்கான குருளைச் சாரணர் பிரிவை ஆரம்பித்து வைத்தார். இவ் ஆண்டிலேயே யாழ்ப்பாணத்தில் 5 கல்லூரிகளில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. யா/யாழ்ப்பாணம் மத்திய கல் லூரியில் அதிபர் ஈ.ரி. செல்பியினால் சாரணியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யா/பரியோவான் கல்லூரி, யா/சம்பத்திரிசியார் கல்லூரி, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யா/யாழ்ப்பாணக் கல்லூரிகளிலும் சாரணியம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேடன் பவல் 1918 இல் 18 தொடக்கம் 24 வயதினருக்கான ***திரி சாரணர்*** பிரிவை ஆரம்பித்தார். இவ்வாண்டிலேயே இலங்கையில் ***கடற்சாரணியம்*** ஆரம்பிக்கப்பட்டது.

தந்தை பேடன்பவல் பிரபு 84 ஆவது வயதுக்கு 45 நாட்கள் இருக்கையில் 1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். தந்தை பேடன்பவல் பிரபு அவர்கள் எழுதிய ***இளைஞர் சாரணியம்*** என்னும் நூலின் முகவுரை யிலே ஒரு உண்மையான சாரணர் மீது ஏனைய இளைஞர்களும் பெரியோரும் நம்பிக்கை கொள்ளலாம். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தன் கடமையை ஆற்ற தயங்கமாட்டான். எவ்வளவு இடரும் துன்பமும் முன்னிருந்த போதிலும் எந்நேரமும் இன்முகம் காட்டி நடப்பவன் என்றும் பெருமையாக பாராட்டி நடப்பர். இதே முறையில் நல்ல சாரணனாக உங்களை ஆக்கிக் கொள்வதற்கு இளைஞர் சாரணியம் நூலைப்படியுங்கள். நான் சாரணனாக இருந்து இன்டம் அனுபவித்த காலத்தைப் போல் நீங்களும் உங்கள் காலத்தை மகிழ்ச்சியுடன் கழிப்பீர்களென் நம்புகின்றேன். அன்று தந்தை எழுதியுள்ளதை இன்று வையகத்தில் சாரணர்கள் மெய்ப்பித்து வருகின்றனர்.

***வையத்துள் மக்கள் நல் வாழ்வு வாழ சாரணியம் வளர்க***

இ.திலைவாசன்
ஜனாதிபதி சாரணன் உதவி
மாவட்ட சாரண ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

---

02.2015
22

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1495 - பிரான்ஸ் மன்னன் எட்டாம் சார்ல்ஸ் நேப்பில்சை அடைந்து அந்நகரத்தைக் கைப்பற்றினான.
- 1658 - டச்சுக்காரரினால் மன்னார் கைப்பற்றப்பட்டது.
- 1819 - ஸ்பெயின் புளோரிடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர்களு க்கு விற்றது.
- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: புவெனா-விஸ்டா நகரில் இடம்பெற்ற போரில் 15,ஆயிரம மெக்சிக்கர்களை 5,ஆயிரம் அமெரிக்கப் படைகள் தோற்கடித்தன.
- 1848 - பாரிசில், லூயி பிலிப் மன்னனுக்கெதிராக புரட்சி வெடித்தது. இரண்டு நாட்களின் பின்னர் அவன் முடி துறந்தான்.
- 1853 - வோஷிங்டன் பல்கலைக்கழகம் எலியட் செமி னறி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவராக ஜெபர்சன் டேவிஸ் அதிகார பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1882 - சேர்பிய பேரரசு மீள உருவாக்கப்பட்டது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பிரிவானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் ஐக்கிய அமெரிக்காவின் தோல்வியைத் தொடர்ந்து அமெரிக்கத் தளபதி டக்ளஸ் மக்கார்த்தரை வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பணித்தார்.
- 1943 - நாசி ஜேர்மனியில் வைட் ரோஸ் இயக்க உறுப் பினர்கள் கொலை செய்யப்பட்டனர்.
- 1948 - செக்கோசிலவாக்கியா கம்யூனிசப் புரட்சி இடம் பெற்றது.
- 1958 - எகிப்தும் சிரியாவும் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசை அமைத்தன.
- 1961 - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்திற்கு கொங்கோவில் கொல்லப்பட்ட கறுப்பினத் தலைவர் பத்திரிசு லுமும்பாவின் நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டது.
- 1969 - பீட்டில்சின் அனைத்து அங்கத்தவர்களும் கடை சித் தடவையாக சேர்ந்து பாடல் பதிவில் ஈடுபட டனர்.
- 1974 - சாமுவேல் பிக் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.
- 1979 - சென் லூசியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2002 - அங்கோலாவின் அரசியல் தலைவர் ஜோனாஸ் சவிம்பி இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.
- 2002 - இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வவுனியாவில் கைச்சாத்திடப்பட்டது.
- 2006 - பிரித்தானியாவின் சரித்திரத்தில் மிகப் பெரும் கொள்ளை கெண்ட் நகரில் இடம்பெற்றது. 53 மில்லியன் பணத்தை அறுவர் சேர்ந்து கொள்ளையிட்டனர்.

### பிறப்புகள்


- 1732 - ஜார்ஜ் வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர (இ. 1799)
- 1824 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (இ. 1907)
- 1857 - பேடன் பவல், சாரணர் இயக்க நிறுவநர் (இ. 1941)
- 1879 - ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்ட்டெட், டென்மார்க் வேதியியலாளர் (இ. 1947)
- 1914 - ரெனாட்டோ டுல்பெக்கோ, உடலியக்கவியல் மருத் துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்
- 1932 - எட்வர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (இ. 2009)
- 1936 - மைக்கேல் பிஷப், உடலியக்கவியல் மருத்துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்
- 1938 - கோவை மகேசன், சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர், நாட்டுப்பற்றாளர் (இ. 1992)
- 1962 - ஸ்டீவ் இர்வின் ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (இ. 2006)

### இறப்புகள்

- 1556 - ஹமாயூன், மொகலாயப் பேரரசன் (பி. 1508)
- 1944 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (பி. 1869)
- 1987 - அன்டி வார்ஹால், அமெரிக்க ஓவியர் (பி. 1928)
- 2006 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (பி. 1915)

---

### ஜார்ஜ் வாஷிங்டன்



ஜார்ஜ் வாஷிங்டன் 1732 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார்.

இவர் அமெரிக்கக் கண்டத்தின் படையைத் தலைமை தாங்கி, பிரித்தானியரை அமெரிக்கப் புரட்சிப் போர் என்னும் அமெரிக்க விடுதலைப் போரில் (1775-1783) தோற்கடித்தார்.

இவர் ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் ஆவார். இவர் எட்டு ஆண்டுகள், 1789 முதல் 1797 வரையிலும், ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகத் தலைமை தாங்கினார். விடுதலை பெற்ற நாடாக ஐக்கிய அமெரிக்கா திகழ்ந்த தொடக்க ஆண்டுகளில் இவர் ஆற்றிய நாடு நிறுவும் பணிகளை நோக்கி இவரை ஐக்கிய அமெரிக்காவின் தந்தை எனப் போற்றுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசின் சம்பள உயர்வினை மகிந்த அரசு ஏன் வழங்கவில்லை

## பிரதமர் நாடாளுமன்றில் கேள்வி

(கொழும்பு)

**புதிய அரசாங்கம் ஆட்சி பீடமேறி இரண்டு வாரங்களில் அரச ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்தியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஏன் இதனை செய்ய முடியவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்ப வேண்டுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷவின் கடந்த வரவு செலவுத் திட்டத்திலோ அல்லது அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலோ அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சதமேனும்சம்பளம உயர்த்தப்படவில்லை. முதல் தடவையாக அரசாங்க ஊழியர்களுக்கு இந்த மாதம் ஐயாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துவது குறித்தும் பேசப்பட்டு வருகின்றது.

அரசாங்க ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க ஊழியர்களுக்கு சுயாதீனமான நீதிமன்றமொன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

எரிபொருள், எரிவாயு, சீனி, பால் மா, நெத்தலி உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.


ராஜபக்ஷ அரசாங்கத்தினால் செய்ய முடியாதவற்றை மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கம் இரண்டு வார காலத்தில் செய்துள்ளது.

கடந்த காலங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட காரணத்தினால இவ்வாறு சலுகைகள் நிவாரணங்களை வழங்க முடியவில்லையா?

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல புலமைப் பரிசில கொடுப்பனவு தொகை 5 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. நெல், கிழங்கு, பால் போன்றவற்றிற்கு உத்தரவாத அடிப்படையிலான விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நல்லாட்சியின் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் நன்மைகள் வழங்கப்பட்டுள்ளது என ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சோதிடத்தை நம்பவேண்டாம் என்று மகிந்த ராஜபக்ஷவிடம் கூறினேன்!

(கொழும்பு)



சோதிடக்காரர் சுமணதாஸ அபேகுணவர்த்தனவின் ஆருடத்தை நம்பி ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று தாம் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை தெரிவித்ததாக இலங்கையின் முன்னணி பேராசிரியர் கார்லோ பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தாம் மகிந்தவை சந்திக்க முடியவில்லை என்றபோதிலும் முன்னாள் அமைச்சர் டியூ. குணசேகரவின் மூலம் அவரிடம் இந்த விடயத்தை வலியுறுத்தியதாக பொன்சேகா தெரிவித்தார்.

சோதிடத்தை வைத்துக்கொண்டு அல்ல, விஞ்ஞானத்தின் அடிப்படையில் ஏனைய விடயங்களை கருத்திற்கொண்டே இந்த ஆலோசனையை மகிந்தவிடம் தாம் தெரிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ந்துவரும் மனித இனத்துக்கு இன்றும் மூடநம்பிக்கை பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஏற்கனவே மாலித் ஜெயதிலக்க என்ற ஆய்வாளர், சிங்கள பௌத்தர்களின் 47.5வீத வாக்குகளை வைத்துக்கொண்டு மகிந்தவினால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று தெரிவித்திருந்தார்.

குறித்த மாலித் என்பவர் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் நெருங்கிய நண்பராவார் என்றும் கார்லோ பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-5)

# வர்த்தக நிலையங்கள் போன்றே தூதரகங்கள் தொழிற்பட்டிருந்தன

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

மகிந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வெளிநாடுகளுக்கான பல இலங்கைத் தூதரகங்கள் வர்த்தக நிலையங்களாகவே தொழிற்பட்டன என வெளிவிவாகர அமைச்சர மங்கள சமரவீர நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்களின் வர்த்தக நிலையங்களாகவே தூதரகங்கள் தொழிற்பட்டன.

முக்கியமான தூதரகமொன்றின் தூதுவர் ஒருவர் தூதரகத்தில் இருந்து கொண்டு மற்றுமொரு தரப்பிற்கு ஆயுதங்களையும் தகவல்களையும் வழங்கியதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதரகம் கொனிபோட் ஜோன்சன் ரொபின்சன் ஜுட் என்னும் நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் எதுவுமின்றி 51 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் இன்றி வெளிவிவகார அமைச்சு பணம் செலுத்தக் கூடாது. யாருடைய அழுத்தம் காரணமாக அப்போதைய வெளி விவகார அமைச்சு இவ்வாறு பணம் செலவிட்டுள்ளது? இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தப்படும்.

இலங்கையில் மட்டுமன்றி கடந்த காலத்தில் தூதரகங்களில் கட்சி ஆட்சியே நிலவியது என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் தலைவா அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# விமல் பிரதமராக முயற்சித்தால் எங்களின் நிலை என்னவாகும்?

## சுசில் கேள்வி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வரும முயற்சியில் தொடர்ந்து விமல் வீரவன்ச இருப்பது பிரதமராகும் முயற்சியிலேயே என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் அண்மையில் இடம் பெற்ற பேரணியில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளை அழைத்து நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விட்டுக் கொடுக்காமல் பேசியதற்கான காரணம் பிரதமர் பதவியை தான் கைப்பற்றும் முயற்சியிலேயே.

அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் இவ்வளவு காலம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தாங்கிய எங்களின் நிலை என்ன என்று யோசிக்க வேண்டும் என சுசில் பிரேம ஜயந்த மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படியே தொடர்ந்து நடந்தால் எதிர் வரும் பொது தேர்தலில் தினேஷ், கம்மன்பில என வேட்பாளர் பட்டியல் பெரிதாகிக் கொண்டே செல்லும் என தெரிவித்துள்ளார்.

அதற்கு பதிலளித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள், அவ்வாறான பிரச்சினை ஒன்று ஏற்படாமல் தடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவைபிரதம வேட்பாளராக போட்டியிட வைக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ போட்டியிடவில்லை என றால் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களுக்காக வாக்குகள் கேட்டு பிரதேசங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிடும். என தெரிவித்துள்ளனர். மேலும் சுசில் பிரேம ஜயந்த உட்பட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி குழுவினர்கள் கட்சியின் தலைமைத்துவத்திற்கு யாரை நியமிப்பது என்று கலந்துரையாடல் மேற்கொண்டு உடனடியாக பதில் தர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## அடையாளம்

"சேர் உங்களுக்கு என்னை அடையாளம் தெரியுதா"

"என்னப்பா இப்படிக் கேட்கிறாய்.... என்னிடம் படித்த பையன் தானே நீ....?"

"ஆமாம் சேர்! அ.... அது.... வந்து.... ஒரு விடயம் சேர்...!"

"என்னப்பா... இது .... வார்த்தை திக்கித்திக்கி வருகுது.... உடம்பும் நடுங்குது.... நீ ஏதோ தப்பு பண்ணியிருக்கிறாய்!"

"எப்படி சேர் சொல்றீங்க?"

"நான் சொல்லவில்லை... பஞ்சதந்திரம் சொல்கிறது. ஒரு குற்றவாளி எப்படி இருப்பான் என்பதற்கு சில அடையாளம் உண்டு என்று சொல்கிறது"

"அப்படியா சேர்!"

"ஆமாம்... குற்றம் செய்துவிட்டு பயந்து போய் இருப்பவனுக்கு முகம் வெளிறுமாம்.... பேச்சுக் குளறுமாம்.... மிரண்ட பார்வை.... ஒடுங்கிய சுர்வம்..... தள்ளாடித் தள்ளாடி நடப்பான்.... முகம் வெளுத்துப் போகும்.... நெற்றியில் வியர்த்துக் கொட்டும்..... வார்த்தைகள் திக்கும்.... உடல் நடுங்கிக் கொண்டிருக்கும்.... பார்வை கீழ் நோக்கிச் செல்லும்.... இந்த வெளிப்படையான அடையாளங்களைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொல்கிறது பஞ்சதந்திரம்! இந்த அறிகுறியெல்லாம் இப்பொழுது உன்னிடம் இருக்கிறது. என்ன விடயம் சொல்... எதற்காக என்னைத் தேடி வந்தாய்?

"ப... ப... பத்திரிகை கொடுக்க..."

"என்ன பத்திரிகை?"

"கல்யாணப் பத்திரிகை!"

"யாருக்குக் கல்யாணம்!"

"எனக்குத்தான் சேர்!"

"அடப்பாவி.... அதற்காகவா இப்படி நடுங்குகிறாய்? சந்தோஷப்படவேண்டிய விடயமல்லவா இது. பத்திரிகையைக் கொண்டுவா இப்படி...! பொண்ணு யாரு?"

"உ... உங்க மகள்தான் சேர்....!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி வென்றது இலங்கை?



புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த ஐந்து வாரங்களிலேயே சர்வதேச அரங்கில் முக்கியமான இராஜதந்திர வெற்றிகளில் ஒன்றை ஈட்டியுள்ளதாக அரசாங்கத்தில் உள்ளவர்கள, வரும் நாட்களில் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், அடுத்த மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப் படவிருந்த அறிக்கையை பிற்போடச் செய்வதில் இலங்கை அரசாங்கம் ஈட்டியுள்ள வெற்றியே அது. சர்வதேச சமூகத்துடன் முரண்பாடுகளை வளர்த்து, இராஜதந்திர ரீதியான நெருக்கடிகளுக்குள் சிக்கவைத்து, நாட்டை தனிமைப்படுத்தி விட்டதொரு சூழலிலேயே முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆட்சியை விட்டு விலகிச்சென்றிருந்தது.

புதிய அரசாங்கம் பதவியேற்றதும், அதற்கு உள்நாட்டிலிருந்த பிரச்சினைகள் எல்லாவற்றையும் விட, மிக முக்கியமானதொரு பிரச்சினை தலைக்கு மேல் கத்தியாக தொடங்கிக்கொண்டிருந்தது. கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையே அந்தக கத்தி. இந்த விசாரணை அறிக்கை அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெளிவாக கூறப்பட்டிருந்தது.

அறிக்கையை திட்டமிட்ட காலப்பகுதிக்குள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் ஐ.நா. விசாரணைக் குழு மேற்கொண்டிருந்த நிலையிலேயே இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆட்சி மாற்றம், இலங்கையினது உள்நாட்டுச் சூழலை மட்டுமன்றி, இலங்கை குறித்த சர்வதேசப் பார்வையையும் மாற்றி வட்டுள்ளது. புதிதாக பதவியேற்ற அரசாங்கம், சர்வதேச சமூகத்துடன் முரண்படாத, அதனுடன் இணைந்து செயற்படும் அணுகுமுறையை கடைப்பிடிக்கத் தயாராக இருந்த நிலையில், ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கை அதற்கு முக்கியமானதொரு சவாலாக இருந்தது. இதனாலேயே, வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற நாளிலிருந்து அமைச்சர் மங்கள சமரவீர சர்வதேச ஆதரவை திரட்டும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். அவர் புதுடெல்லி, லண்டன, வோஷிங்டன், நியூயோர்க் என்று தொடர் பறப்புகளை மேற்கொண்டே, இந்த அறிக்கையை பிற்போடுவதற்கு சாதகமான முடிவை பெற்றிருக்கிறார். இது புதிய அரசாங்கத்துக்கான சவால் மிக்க விடயமாக இருந்தாலும், முன்னரே எதிர்பார்க்கப்பட்டதொன்று என்பதும் இந்த விடயத்தில் முன்னைய அரசாங்கம் எதிர்கொண்டளவுக்கு நெருக்கடிகளை எதிர்கொள்ளவில்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஜெனீவாவில், கடந்த பல ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கை அரசாங்கத்துக்கு இராஜதந்திர ரீதியானதொரு வெற்றி கிடைத்திருக்கிறது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட அடுத்த வாரமே ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், சுவ் டன் உள்ளிட்ட நாடுகளினால் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்களை கண்டித்தும் அது பற்றி விசாரணை செய்யுமாறு கோரி யும் தர்மானமொன்று முன்வைக்கப்பட்டது. அந்த தீர்மானத்தை இலங்கை தனது இராஜதந்திர நகர்வுகளின் மூலம் தோற்கடித்தது. அது மட்டுமன்றி, போரில் வெற்றியை பெற்ற இலங்கையை பாராட்டும் தீர்மானமொன்றும் அதில் நிறைவேற்றப்பட்டது. அதற்கு பின்னர், ஜெனீவா என்பது இலங்கை அரசாங்கத்துக்கு சோதனை மிக்கதொரு களமாக இருந்துவந்தது. ஒவ்வொரு முறையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு ஆரம்பிக்கப்படும்போதும் பல்வேறு தயார்ப்படுத்தல்களுடன் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஜெனீவாவுக்கு அனுப்ப வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு இருந்தது. ஜெனீவா விடயத்தில் முன்னைய அரசாங்கம் மிகக் கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டது.

ஒவ்வொரு ஆறு மாதங்களும் ஜெனீவாவில் பதிலளிக்கவேண்டிய நிலையில் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் முக்கிய அமைச்சர்களும் பல சந்தர்ப்பங்களில் வெறுப்புடன் கூறியிருக்கின்றனர். அந்தளவுக்கு முன்னைய அரசாங்கத்துக்கு ஒரு கெட்ட சொப்பனமாக ஜெனீவா கூட்டத் தொடர்கள் அமைந்திருந்தன. இம்முறை ஜெனீவா கூட்டத்தொடரும் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியது என்பதால், முன்னெப்போதும் இல்லாதளவுக்கு நெருக்கடி மிக்கதாகவே இருந்தாலும், புதிய அரசாங்கத்துக்கு அதை எதிர்கொள்வது ஒன்றும் அவ்வளவு சவாலான விடயமாக இருக்கவிலலை. அதற்கு காரணம், மேற்குலகுக்கு சாதகமாக அமைந்த புதிய அரசாங்கம் தான் என்பதில் சந்தேகமில்லை. புதிய அரசாங்கம் இலங்கையில் அமைந்தவுடனேயே, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் அணுகுமுறைகள், கண்ணோட்டங்களில் பாரிய வேறுபாடுகளை உணரமுடிகிறது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கொடுத்த தலைவலி மேற்குலகை பெரிதும் பொறுமை இழக்க வைத்துவிட்டது. அதனால், தமக்கு சாதகமான புதிய அரசாங்கத்தை காப்பாற்றுவது தமது கடப்பாடு என்றளவுக்கு மேற்குலக கரிசனையும் நிலைப்பாடும் மாறியிருக்கின்றன. இது இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு என்றே கூறலாம். அதுதான், ஜெனீவாகளத்தை எதிர்கொள்வதற்கு முன்னரே, ஒரு கால ஓய்வை பெற்றுக கொள்ளும் வாய்ப்பை இலங்கைக்கு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது.

மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றதும், வெளிநாடுகளுக்கு பறந்துதிரிந்து இந்த அறிக்கையை பிற்போட செய்தார் என்று கூறமுடியாது. இந்த விடயத்தில், இலங்கை அரசாங்கம் எந்தக் கோரிக்கையையும் விடுக்காமலிருந்தால் கூட, அறிக்கை பிற்போடப்பட்டே இருக்கும். ஏனென்றால், இது இலங்கையின் கோரிக்கையை ஏற்று எடுக்கப்பட்ட முடிபு அல்ல. இலங்கை யின் கோரிக்கை வெறும் சம்பிரதாய பூர்வமானதாகவே இருந்தது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கடந்த மாத இறுதியில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் இலங்கைக்கு வந்திருந்தார். விசாரணை அறிக்கையை பிற்போடும் செய்தியுடன் அவர் கொழும்பு வந்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்தபோது, அவர் ஐ.நா. விசாரணை அறிக்கையை வெளியிடுவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என்று வெளிப்படையாக கூறியிருந்தார். கடந்த 10 ஆம் திகதி வடக்கு மாகாணசபையில் இனபடுகொலை தீர்மானத்தை கொண்டுவந்து உரையாற்றிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந்த தகவலை வெளியிட்டிருந்தார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனேயே, இந்த விசாரணை அறிக்கையை மார்ச் மாத அமர்வில் வெளியிடுவது பொருத்தமல்ல என்ற முடிவை அமெரிக்கா எடுத்து விட்டது. அங்கிருந்து இந்த அறிக்கையை பிற்போடச் செய்யும் நகர்வு ஆரம்பிக்கப்பட்டதே தவிர, கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், அமெரிக்கா வெளிபபடையாக எதையும் கூறவில்லை. தனக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை, பிற்போடும் முடிபு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமே உள்ளது என்று கூறிக் கொண்டது. நிஷா பிஸ்வாலின் கொழும்பு பயணத்தை அடுத்து லண்டன் சென்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அறிக்கையை பிற்போட செய்வதற்கு பிரித்தானியாவின் ஆதரவை கோரத் திட்டமிட்டிருந்தார். ஆனாலும், அவரால் அங்கு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனையோ, வெளிவிவகார அமைச்சரையோ சந்திக்க முடியவில்லை. ஒரு வாரத்துக்கு முன்னர் கொழும்பு வந்திருந்தபோது, பேச்சுக்களை நடத்திய வெளி விவகார பணியக மற்றும் கொமன்வெல்த் விவகார இராஜாங்க அமைச்சர் ஹியூகோ ஸ்வயரை மங்கள சமரவீர மீண்டும் சந்தித்தார். சர்வதேச விசாரணை விடயத்தில் உறுதியான போக்கை கொண்டிருந்த பிரித்தானிய அறிக்கையை ஒத்திப் போடும் விடயத்தில் அவ்வளவாக உடன்பாடு கொண்டிருக்கவல்லை. இனனும் மூன்று மாதங்களுக்குள் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்ற கவலையும் பிரித்தானிய அரசாங்கத்துக்கு இருக்கிறது. மங்கள சமரவீரவின் பிரித்தானியப் பயணம் கைகொடுக்காத நிலையில், அமெரிக்காவுக்கு சென்றிருந்தார் அவர். அமெரிக்காவில் அவருக்கு உற்சாக மூட்டும் வகையில் சந்திப்புகள் அமைந்திருந் தன. அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் உள்ளிட்டோரை வொஷிங்டனில் சந்தித்துப் பேசியிருந்தார் மங்கள சமரவீர. இதன்போதே, ஐ.நா. விசாரணை அறிக்கையை ஒத்தி வைபபதற்கான பூர்வாங்க நகர்வுகள் மேற் கொள்ளப்பட்டன. அது குறித்து ஜோன் கெரியுடனான சந்திப்பில் விவாதிக்கப்பட்டது என்பதை மங்கள சமரவீர ஒப்புக்கொண்டிருந்தார்.

விசாரணை அறிக்கை பிற்போடப்படும் என்று தாம் உறுதியாக நம்புவதாக வொஷிங்டனில் பிரஸ் கிளப்பில் உரையாற்றியபோது அவர் தெரிவித்திருந்தார். அதேவேளை, அதற்கான உத்தரவாதத்தை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த விவகாரம் குறித்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஜென்பசாகியிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அறிக்கையை பற்போடும் தீர்மானத்தை எடுக்கவேண்டியது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரே என்று பதிலளித்திருந்தார். அதாவது அமெரி க்கா இந்த விடயத்தில் எதுவுமே தெரியாத மாதிரி இருக்கப்பார்த்தது. இதற்கிடையே, கட ந்த 13 ஆம் திகதி நியூயோர்க் சென்ற மங்கள சமரவீர, ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனையும் ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவரையும் சந்தித்திருந்தார். ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனை மங்கள சமரவீர சந்திக்க முன்னரே, ஐ.நா. வின் துணைப பொதுச்செயலரான ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோவைச் சந்தித்துப் பேசியிருந்தார் அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் நிஷா பிஸ்வால்.

இந்த சந்திப்பு பங்களாதேஷ் விவகாரம் குறித்து பேசுவதற்கானது என்று குறிப்பிட்டிருநதாலும், இலங்கை விவகாரம் குறித்தும் பேசப்பட்டது. அப்போது, ஐ.நா. அறிக்கை ஒத்திவைக்கப்பட வேண்டுமென்ற அமெரிக்க நிலைப்பாடு அவரிடம் எடுத்துக்கூறப்பட்டதாகத் தகவல். நிஷா பிஸ்வாலை சந்தித்த துணை பொதுச்செயலர் ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோ, மறுநாள் ஐ.நா. பொதுச்செயலருடன் இணைந்து மங்கள சமரவீரவை சந்தித்தார். அப்போது, அறிக்கையை பிற்போடுமாறு கோரியிருந்தார் மங்கள சமரவீர. ஆனால், அது தனது கையில் இல்லை என்றும் அது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் வேலை என்றும் அவர் கூறிவிட்டாக தகவல் வெளியானது. நியூயோர்க் சென்றிருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல்ஹுசேன் இது குறித்து அமெரிக்க அதிகாரிகளுடனும் ஐ.நா. பொதுச செயலருடனும் ஆலோசனை நடத்தியிருந்தார். மேலும், மங்கள சமர வீரவை சந்தித்த பின்னர், தனது டுவிட்டரில் எழுதியிருந்த சமந்தா பவர் தேர்தலுக்கு பின்னர் இலங்கையின் நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், இலங்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொடக்கம் ஜோன் கெரி, சூசன் ரைஸ், நிஷா பிஸ்வால், சமந்தா பவர், ஜென் பசாகி, கீத் ஹாபபர் உள்ளிட்டவர்கள் வெளியிட்ட கருத்துகள் அனைத்துமே இலங்கை அரசுக்கு சாதகமாக அமைந்திருந்தன. இத்தகைய பின்னணியிலேயே அடுத்த என்ன என்ற தீர்மானிக்கும் களம் ஜெனீவாவுக்கு மாறியது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் உள்ளக கலந்தாலோசனைகளின் முடிவில் அறிக்கையை ஒத்திவைக்க கோரினார். அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் ஒப்புதல் அளித் தது. ஆனாலும், இந்த அறிக்கையை ஒத்திவைப்பது ஐ.நா. மட்டத்தல் அவ்வளவாக உடன்பாடு இருக்கவில்லை என்று தெரிகிறது. தாம் நியாயமற்ற ஒரு காரியத்தை செய்கிறோம் என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உணர்ந்திருக்கிறார். ஒரேயொரு தடவை மாத்திரம் ஒத்தி வைப்பதாகவும் இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏமாற்றம் அளிக்கு மொன்றாக இருக்கும் என்பதை தான் அறிவேன் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவின் கோரிக்கைகளுக்காக அறிக்கை வெளியிடுவதை பிற்போட்டுள்ளோம என்று அவரால் காரணம் கூற முடியாது. அதனாலேயே, இன்னமும் வலுவான அறிக்கையை தயாரிக்க வாய்ப்பு கிடைக்கலாம் என்று அவர் ஒரு நியாயத்தை முன்வைத்திருக்கிறார். அது எந்தளவுக்கு உண்மையானது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். இது இலங்கைக்கு ஒரு தற்காலிக வெற்றியே தவிர, நிரந்தரமானது அல்ல. ஆனாலும், இதனை நிரந்தரமான வெற்றி யாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்காமல்விடாது. அதற்கு அமெரிக்கா திறந்துள்ள புதிய கதவுகளின் மூலம் இலங்கை அரசாங் கம் முயற்சிக்கலாம். அது வெற்றி அளிக்குமேயானால், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை எதிர்பார்க்கின்றவர்களுக்கும் பெருத்த அடியாக இருக்கும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பிள்ளையினை மீட்டுத்தாருங்கள் இல்லையேல் என்னைச் சுட்டுவிடுங்கள்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் தாயொருவர் கதறல்**

**எனது பிள்ளையினைத் தாருங்கள் அல்லது என்னைச் சுட்டு விடுங்கள் என தாயொருவர் நேற்று யாழ்.நகரில் கதறி அழுதுள்ளார். ஐ.நா. விசாரணையை வலியுறுத்தியும் காணாமற் போகச் செய்யப்பட்டோரினை மீட்டுத் தரக்கோரியும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் யாழ்.நகரில் நேற்றைய தினம் பெண்கள் அமைப்புக்களி னால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.**

இவ்வார்ப்பாட்டத்தில் கல ந்து கொண்டிருந்த தாயொ ருவர் காணாமற் போன தனது பிள்ளையை மீட்டுத்தருமாறு மேற்கண்டவாறு கதறியழு துள்ளார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போது எமது பிள் ளைகளினை இராணுவத்தி னரிடம் கட்டாயத்தின் நிமிர்த் தம் ஒப்படைத்தோம்.

ஆனால் எமது பிள்ளைகள் தற்போது வரை எங்கே இருக் கிறார்கள் என தெரியவில்லை.

எமது பிள்ளைகளினை மீட்டுத் தருமாறு ஐ.நாவின் முன்னால் மனிதவுரிமை யாளர் நவநீதம்பிள்ளை அம் மையாரினை கட்டியணைத்து கதறினோம், ஐ.நாவிடம் கதறி னோம், அரசிடம் கதறினோம் ஒரு பயனுமில்லை. எமக்கு நம்பிக்கை தந்த ஐ.நா. விசா ரணை அறிக்கையும் ஏமாற்றம் தந்துள்ளது.

மைத்திரியின் ஆட்சியிலா வது தீர்வு கிடைக்காதா? என்ற ஏக்கத்திலேயே வாக்களித்தோம். ஆனால் எல்லோரும் எம்மை ஏமாற்ற முயற்சிக்கின்றார்கள்.

எனது கணவன், பிள்ளை களினை இராணுவம் கடத்தி சென்றுள்ளது. நான் தனியே வீட்டில் இருக்கின்றேன்.

எனது பிள்ளை எனக்கு வேண்டும். அவனோடு நான் உணவருந்த வேண்டும். அவ னோடு நான் உறங்க வேண் டும் என அந்தத்தாய் கண்ணீ ருடனும் ஏக்கத்துடனும் கதறி யழுதார்.

மேலுமொரு குடும்பப் பெண் தெரிவிக்கையில், வட்டுவாக லில் எனது கணவனை அரச பேருந்தொன்றில் இரா ணுவ த்தினர் அழைத்து சென் றனர்.

ஆனால் இதுவரை எனது கணவனை காணவில்லை. நானொரு இதயநோயாளி. எனக்கு இரு பிள்ளைகளு முண்டு. நான் வெளியேபோகும் போதெல்லாம் அப்பா இன்று வருவரா? என என்னிடம் பிள் ளைகள் கேட்கின்றனர்.

என் கணவனோடு நானும் பிள்ளைகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும். இந்த அர சாவது கண்திறக்க வேண்டும்.

எம்மவர்களை விடுவிக்கா விட்டாலும் முதலில் எமது கண் களிலாவது காட்டுங்கள் என அவ் இளம் குடும்பப் பெண் மேலும் கதறியழுதாள். (இ-4)

# ஹிருணிக்காவிற்கு ஊ சத்தமிட்டது யார்?



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி யின் நிறைவேற்று குழு கூட் டத்தின் போது ஒரு குழுவி னர் தமக்கு எதிராக ஊ சத்தம் இட்டதாக ஹிருணிக்கா குற் றம் சுமத்தியுள்ளார்.

அவர் சிங்கள செய்தித் தாள் ஒன்றுக்கு கருத்து தெரி விக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சுற்றி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவாளர் களே இருக்கின்றார்கள் என மேல் மாகாணசபை உறுப்பி னர் ஹிருணிக்கா பிரேமச் சந்திர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால விற்கு எதிராக செயற்பட்ட வர்களே அண்மையில் ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சி நிறை வேற்றுக் குழுக் கூட்டத்தின் போது தமக்கு எதிராக ஊ சத் தம் இட்டதாக குற்றம் சுமத் தியுள்ளார். பிரதமர் புதிதாக அதிகாரிகளை நியமித்துள்ள போதிலும் ஜனாதிபதி மைத் திரியின் அதிகாரிகளாக இரு ப்பவர்களில் அநேகர் முன் னாள் ஜனாதிபதிக்கு கடைசி நேரம் வரையில் ஆதரவ ளித்து வந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் போன்றவர்களை அருகில் வைத்துக்கொள்வது ஆபத்தானது எனவும் அவர் தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபட் டவர்களை கைது செய்ய விமான நிலையங்களை மூடுவதாக முன்னர் அறிவித்த போதிலும் குற்றச் செயல்களில ஈடுபட்ட ஐந்து, ஆறு பேர் தற்போது வெளி நாட்டுக்கு தப்பிச் சென் றுள்ளனர் என ஹிருணிக்கா பிரேமச்சந்திர மேலும் தெரி வித்துள்ளார். (இ-5)

# சாரணர் தந்தை பேடன் பவல் தினவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட இலங்கை சாரணர் சங்கம் நட த்தும் பேடன் பவல் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புத் தூர் யாழ். சோமஸ்கந்தா கல் லூரியில் மாவட்ட சாரண ஆணையாளர் வே.சண்முக லிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையின் முகாமை யாளர் திருமதி றொசற் தவநாய கமும் சிறப்பு விருந்தினராக புத்தூர் சோமஸ்கந்தா கல் லூரி அதிபர் இ.இராஜமகேந் திரனும் கலந்து கொள்ளவுள் ளனர் என்பது குறிப்பிடத்தக் கது. (இ-5)

## புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல்- 2015.02.28 வாக்காளர்களினால் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்கப்பட வேண்டியமைக்கான விசேட அறிவித்தல்

01.2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் சிறப்பேற்பாடுகள் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கிணங்க வேறேதேனும் சட்டமொன்றில் முரண்பாடான முறையில் எத்தகைய ஏற்பாடொன்று காணப்பட்ட போதிலும் "இச் சட்டம் செயற்படுத்தப்பட ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் வாக்காளர் ஒருவர் என்ற வகையில் தமக்கு வாக்குச் சீட்டொன்று கையளிக்கப்படுவதற்கு முன்னர் உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயற்படுகின்ற ஒருவருக்கு செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றைப் பரிசீலிப்பதற்காக சமர்ப்பித்தல் வேண்டும்"

02. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 176/2006 ஆம் இலக்க வழக்குத் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க உள்ளூர் அதிகார சபை வாக்கெடுப்பொன்றில் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்படல் வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

03.எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல்களுக்குரிய வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்கின்ற போது வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப் படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைக்கு மேலதிகமாக கீழ்வரும் ஆள் அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஓர் ஆவணத்தை எடுத்துச் செல்வது இன்றியமையததாகும்.

1.ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை.

2.செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு.

3.செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

4.அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை.

5.முதியோர் அடையாள அட்டை.

6.ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்காக விநி யோக்கப்பட்டுள்ள அடையாள அட்டை.

7.தேர்தல் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை

04. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர்ந்த வேறு எந்தவோர் ஆவணமும் வாக்குச் சீட்டொன்று வழங்கப்படுவதற்கு செல்லுபடியான அடையாள அட்டையொன்றாக வாக்கெ டுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடந்த தேர்தல்களுக்காக விநியோகிக் கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் எதுவும் இதற்குச் செல்லுபடியாகாது.

05.வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்து வதற்காக மேலே 1-6 வரையான அடையாள அட்டைகளில் ஏதேனுமொன்று இல்லாத அல்லது இருக்கின்ற அடையாள அட்டை நிறம் மாறியதால் தெளிவற்று அல்லது நபரை அடையாள அட்டையில் ஆளடையாளம் காணமுடியாதுவிடின் அவ்வாறான வாக்காளர்கள் தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை யைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

06.தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் தற்காலிக அடையாள அட்டை களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 21.02.2015 வரையாகும். எனவே தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் உடனடியாக அடையாள அட்டை தேவைப்படும் நபர் தனது மேற்பகுதியின் 11/4 X 1 அளவுடையதான (தேசிய அடையாள அட்டையின் அளவு) இரண்டு புகைப்படங்களுடன் பிரிவின் கிராம அலுவலரைச் சந்தித்தல் வேண்டும். தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களை கிராம அலுவலரிடம் பெற்றுக் கொள்ள முடிவதோடு அதைப் பூர்த்தி செய்து இரண்டு புகைப்படங்களுடன் கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும். அவர் மூலம் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய,**
**2015.02.16**

APOLLO TYRES

இந்தியாவில் முதல் தர வரிசையில் இடம் பிடித்துள்ள Apollo Tyre மீண்டும் யாழ். மண்ணில் நம்ப முடியாத விலைக் கழிவுடன் நீண்ட தூர பாவனைக்கு km உத்தர வாதத்துடன்




ஏக விநியோகத்தர்,
சன்சு மோட்டோர்ஸ்
விற்பனை முகவர் அப்பலோ ரயர்
No.77, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
021 221 9113, 077 505 2085,
077 505 9148
(ஜி-206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் போராளி குடும்பங்களை பதிவு செய்ய படிவங்கள் போதாது

(கிளிநொச்சி-1)

**வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் மாவீரர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள் ஆகிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு மேற்படி குடும்பங்களின் விபரங்கள் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.**

இந்நடவடிக்கை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய குடும்பங்களின் விபரங்களை சேகரிப்பதற்கான விபரப்படிவத்தினை கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அடுத்த வாரமளவில் அந்தந்த பகுதி கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஊடாகவும் பிரதேச செயலக பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இது குறித்த மாதிரிப்படிவங்கள் ஒன்று தமக்கு வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள போதிலும் அதை உரியவர்களுக்கு விநியோகிப்பதற்கு போதுமானதாக இல்லை.

குறித்த திணைக்களத்தினருக்கு மாவட்டத்திற்கு தேவையான படிவங்களை வழங்குமாறு கேட்டுள்ளேன்.

இன்னும் ஒரு வார காலத்தில் அவை அனுப்பி வைக்கப்படும் என அவர்கள் கூறியுள்ளனர்.

எனவே படிவங்கள் போதுமானதாக கிடைக்கப் பெற்றதும் அவற்றினை உரியவர்களுக்கு வழங்க ஏற்பா டுகள் மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-277)








வள்ளுவர்புரம் யோ.புரட்சி எழுதிய ஆஷா நாயும் அவளும் சிறுகதை நூல் கடந்த 19ஆம் திகதி இளங்கோபுரம் காட்டில் வைத்து வெளியிட்ட போது.... (படங்கள் :- கிளிநொச்சி செய்தியாளர் -1)

# வீதியின் இருமருங்கிலும் நெல் காயவிடப்படுகிறது

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(முக்கொம்பன்)

பரந்தன் - பூநகரி வீதியின் இருமங்கிலும் விவசாயிகள் அறுவடை கால நெல்லினை பரவி காய விடுவதனால் மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இச்செயற்பாட்டினை கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதம பொறியியலாளர் த.க இளங்கரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், பரந்தன் பூநகரி வீதியில் காலபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை காயப்போடுவதற்கு உரிய வசதியில்லாத விவசாயிகள் பிரதான வீதியின் இருமருங்கிலும் பரவி காய விடுவதனால், விபத்து ஒன்று அண்மையில் ஏற்பட்டது.

பரந்தன் பூநகரி வீதியானது மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் முக்கியமானதும் பிரதானமுமான வீதியாகும். இவ்வீதியின் இருமருங்கிலும் அறுவடை கால நெல்லினை பரவி காய விடுவதனால் மக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. இதனால் சென்ற வாரம் மோட்டார் வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் நெற்குவியல் மீது மோதி காயத்திற்குள்ளாகி யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். ஆகவே இவ்வாறான வீதி விபத்தை தவிர்த்துக் கொள்வதற்காக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கும் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளேன். அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், விவசாயிகளிடம் இது தொடர்பில் தெரியப் படுத்தியும் அவர்கள் கவனத்தில் எடுப்பதாக தெரியவில்லை.

இச்செயற்பாட்டினை கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கைவிடுத்துள்ளார்.(அ-2-283)

# அனுபவ பகிர்வும் தொலைநோக்கும் கருத்தரங்கு



(கிளிநொச்சி-1)

பெண்களின் மாற்றத்திற்கான செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் **ஒன்றிணைந்து எழுந்து குரல் கொடுப்போம்** எனும் தலைப்பில் **அனுபவ பகிர்வும் தொலைநோக்கும்** என்ற கருத்தரங்கானது நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் இவ்வலையமைப்பின் தலைவர் திருமதி.சேயந்தினி சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வாழ்வாதார நெருக்கடிகள், பெண்கள் மாற்றத்திற்கு செயற்பாட்டு ரீதியில் ஒன்றிணைந்துசெயற்படவேண்டியதன் முக்கியத்துவம் இவ்வலையமைப்பின் குழுக்களின் தொலைநோக்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் பெண்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் இவ்வலையமைப்பு தொடர்ந்து குரல் கொடுக்கும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ-2-277)

# மாணவர்களுக்கான விசேட செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த.உயர்தரம், க.பொ.த.சாதாரண தரம் ஆகியவற்றில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான பாட ரீதியான விசேட செயலமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் துணுக்காய் கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதன் பணிப்பாளர் திருமதி. எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், க.பொ.த (உ/த) பிரிவில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் க.பொ.த (சா/த) அனைத்துபாடங்களுக்குமான செயலமர்வு துறை சார் ந்த வளவாளர்களினால், நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்வி) க.சக்திதரனுடன் 021 206 0055 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

# 28மில்லியன் ரூபாவில் இரு மாடி கட்டடங்கள்

(மல்லாவி)

ஜப்பான் அரசின் 28 மில்லியன் ரூபா நிதி அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டின் கீழ் மு/உடையார் கட்டு மகா வித்தியாலயத்திற்கு 160X25 அடி கொண்ட இருமாடிக்கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் அமிர்தநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களும் மற்றும் துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களின் ஆவணங்களை பாதுகாக்கும் இடமாகவும் எமது பாடசாலை செயற்பட்டிருந்தது.

எறிகணை தாக்குதல்களினால் பாடசாலைக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்த நிலையில், மீள்குடியேற்றத்தை அடுத்து வளப்பற்றாக்குறையுடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு, அதன் பின்னர் படிப்படியாக கல்வி நிலையிலும் பௌதீக வளத் தேவைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

தற்போது ஜப்பான் அரசாங்கத்தின் 28 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் அமைக்கப்படும் வகுப்பறைக் கட்டடத்தில் 13 வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் மூலம் 560 மாணவர்கள் பயனடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

# சிறிதரன் எம்.பியின் நூல் வெளியீடு இன்று

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தொகுத்த "ஜெனீவா தீர்மானமும் மெய்ந்நிலை அரசியலும் ஒரு நோக்கு" எனும் நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிரேஷ்ட சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையின் தலைவருமான கே.வி.தவராசா தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விருந்தினர்களாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன், கிழக்கு மாகாண எதிர்க்கட்சி முதல்வர் சி.தண்டாயுதபாணி, தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராசசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின்வெளியீட்டுரையை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் ஆற்ற ஆய்வுரைகளையும் உரைகளையும் ஆய்வாளர் நிலாந்தன், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி வி.ரி.தமிழ் மாறன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.(அ-2-254)

# கமக்கார அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள மாங்குளம் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 19ஆம் திகதி மாங்குளம் மீரான் முன்பள்ளியில் முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் முன்னிலையில் நடைபெற்றது. இதன் தலைவராக செ.விக்னேஸ்வரன், உப தலைவராக சொ.சித்திரவேல், செயலாளராக பு.நாகேந்திரன், உப செயலாளராக கு.விநாயகமூர்த்தி, பொருளாளராக ஆனந்தராஜா சகிலா ஆகியோர் தெரிவாகினர். நிகழ்வில் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீணாளன் மற்றும் மாங்குளம் கிராம சேவையாளர் கே.சண்முகராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலும்
காட்டும் விலாங்கு மீன்போல...
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ரணில் விக்கிரமசிங்க சீற்றம் கொள்ளாத சிங்கநரி

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய பெருமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையே சாரும் என்று உரைப்போர் உளர். எனினும் மைத்திரி ஜனாதிபதியாக வருவதில் ரணில் விக்கிரமசிங்க கொண்டிருந்த வகிபாகம் மிகவும் காத்திரமானது.

மைத்திரி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர். ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர். ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் போட்டியிட்டிருக்க முடியும். தேர்தல் முடிவு ரணிலுக்கு சாதகமாக அமையாது என்ற கருத்து இருக்குமாயின்; சஜித் பிரேமதாச, கரு ஜெயசூரிய போன்றவர்களில் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் கௌரவத்தைக் காப்பாற்றி இருக்கலாம்.

எனினும் ரணில் விக்கிரமசிங்க இதை எல்லாம் தியாகம் செய்து மைத்திரிக்கு இடம் கொடுத்தார். ரணிலின் முடிவை ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றுக் கொண்டது.

இதுதவிர, மேற்குலக நாடுகளுடன் ரணில் கொண்டுள்ள உறவு காத்திரமானது. மேற்குலகத்துடன் ரணில் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பும் மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதில் பெரும் பங்களிப்புச் செய்தது. எனினும் மைத்திரியை ஜனாதிபதி ஆக்குவதில் பின்புலமாக இருந்த ரணில் பற்றி நாம் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ரணிலின் இராஜதந்திரம் வெளியில் தெரியாத தாழமுக்கம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ரணில் விக்கிரமசிங்கவை புரிந்து கொள்வதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தவறிழைத்து விட்டார். ரணிலை ஒரு சாது என்று மகிந்த நினைத்ததுதான் மகிந்தவின் தோல்விக்கு முதற் காரணம்.

மகிந்த ஜனாதிபதியாக இருந்த போது ரணிலை அடிக்கடி அலரிமாளிகைக்கு அழைப்பார். மகிந்தவின் அழைப்பை ரணில் ஒருபோதும் நிராகரித்ததில்லை. மகிந்தவின் ஒவ்வொரு அழைப்பின் போதும் அலரிமாளிகைக்குச் சென்ற ரணில், மகிந்தவின் பலம் எது? பலவீனம் எது? என்பதை நன்றாகக் கற்றுக் கொண்டார்.

எனினும் இதனைப் புரிந்து கொள்ளாத மகிந்த, ஒரு கோப்பை தேநீருடன் ரணிலைத் தன்னால் மடக்க முடியும் என்று நம்பியிருந்தார்.

ஆனால், ரணில் சாதுவாக இருந்தாலும் அவர் ஒரு சீற்றம் கொள்ளாத **சிங்கநரி** என்பதை எவரும் புரிந்து கொள்ளவில்லை. ரணில் ஒரு சிங்கநரி என்று கூறும்போது, அதன்பொருள் கொள்வதில் இடர்பாடு ஏற்படலாம்.

சிங்கங்களிலும் நரிகள் உண்டு. நரிகளிலும் சிங்கங்கள் உள்ளன என்பதன் அடிப்படையில் எது பொருந்துமோ அதனை நீங்கள் துணிந்து கொள்ளலாம். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ரணில் விக்கிரமசிங்கவுடனான தொடர்பாடலில் தமிழ் அரசியல் தலைமைகள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஏனெனில் ஜனவரி 8ந் திகதி ஜனாதிபதித் தேர்தல் முடிந்த மறுநாள் வைகறைப் பொழுதில் ரணில், மகிந்த இருக்கும் அலரிமாளிகைக்குச் சென்றார். பதவியை விட்டுக் கொடுக்குமாறும் ஆபத்து ஏற்படாமல் தான் பாதுகாப்பதாகவும் மகிந்தவுக்கு உறுதி வழங்கினார். ரணில் மீது கொண்ட நம்பிக்கையால் மகிந்த அலரிமாளிகையில் இருந்து வெளியேறினார்.

அட! இது எப்படி உங்களுக்குத் தெரியும் என்று நீங்கள் யாரேனும் கேட்டால், ரணிலை மகிந்த நம்பியிராவிட்டால்; அலரிமாளிகைக்கு ரணில் வருவதற்கு முன்னதாக பிரதம நீதியரசர் மொகான் பீரிஸை அவரின் வீட்டுக்கு ஓடுமாறு மகிந்த கூறியிருப்பாரல்லவா?

இதுதான் சொல்கிறோம் ரணிலுடன் தமிழ் அரசியல் தலைமைகள் மிக அவதானத்துடன்-எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் நிலைமை கவலைக்கிடமாகும்.

# தவறு செய்தவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும்- ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

தவறு செய்தவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் மீது பாரபட்சமின்றி விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை அறிக்கையை பின்போடுவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற சகல அரசியல் படுகொலைகளும் விசாரணை செய்யப்பட வேண்டும்.

அந்தவகையில் தவறுகள் செய்தவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் மீது பாரபட்சமின்றி விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர்களான தியாகராசா மகேஸ்வரன், ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே, லக்ஸ்மன் கதிர்காமர், பாராளுமன்ற உறுப்பினர்களான அம்பாறை சந்திரநேரு, திருமலை தங்கத்துரை, நீலன் திருச்செல்வம், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினரும், இலங்கை சமாதான செயலகத்தின் உத்தியோகத்தருமான லோகநாதன் கேதீஸ்வரன், பத்திரிகையாளர்களான அற்புதராஜா நடராஜா, பாலநடராஜா ஐயர், தராகி சிவராம், நிமலராஜன், ஈ.பி.ஆர்.எல்.எப்.நாபா அணியின் தலைவர் சுபத்திரன், மனித உரிமைகள் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் உள்ளிட்ட ஏனையோரது கொலைகள் தொடர்பிலும் பாரபட்சமின்றிய விசாரணைகள் நடத்தப்படல் வேண்டும்.

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையினால் மார்ச் மாதம் அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில் தற்போது ஆறுமாதகாலத்திற்கு பிற்போடப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை கூறி வருகின்றமை மட்டுமல்லாது ஐ.நாவின் அறிக்கையை பின்போடும் இந்தக் கூற்றை கூட்டமைப்புக்குள்ளேயே சிலர் ஆதரித்தும் எதிர்த்தும் வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதுமட்டுமன்றி கூட்டமைப்பினர் புதிய அரசுடன் பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென்று கூறினார்கள்.

ஆனாலும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் இதுவரையில் அவர்களால் எவ்விதமான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்தகாலங்களில் எமது மக்கள் எதிர்கொண்ட அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் கூட்டமைப்பினரே பொறுப்பு கூற வேண்டியவர்களாக உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே பிரச்சினைகளை தீர்ப்பதற்கு புதியதொரு சூழலை உருவாக்கி அதற்கான அணுகு முறைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

இந்நிலையில் தான் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது. கடந்த காலங்களில் கிடைக்கப் பெற்ற பல்வேறு சந்தர்ப்பங்களை கூட்டமைப்பினர் சரிவர பயன்படுத்தவில்லையென்றும் புதிய அரசுடனும் முன்னுக்கு பின் முரண்பட்ட கருத்துக்களையும் கூறியும் வருகின்றனர்.

அந்தவகையில் தென்னாபிரிக்காவைப் போன்ற உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவொன்றை அமைத்து அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கான ucmas அபாக்கஸ் மனக்கணிதப் போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். முன்னணி ஆரம்பப் பாடசாலைகளின் 200 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# நாம் செய்யும் உடன்படிக்கையில் உறுதியாய் இருப்போம்

இன்றுதவக்காலத்தின் முதல்ஞாயிறு. தவக்காலம் இது அருளின் காலம், மனமாற்றத்தின்காலம். நாம் கடவுளுடன் கொண்டுள்ள அன்புறவை புதுப்பித்து அவர் எமக்காகப்பட்ட பாடுகள், மரணம் உயிர்ப்பு என்பவற்றை ஆழமாகத் தியானித்து அவருக்காகவும் பிறருக்காகவும் வாழமுனைகின்ற காலம். இப்படியான வாழ்வை வாழ முனைகின்றபோது தடைகள், சோதனைகள் தவிர்க்க முடியாதவை. இவற்றை வெற்றி கொள்ள இன்றைய நாள் தரும் செய்தி. உடன்படிக்கையின் மக்களாக நற்செய்தியின்படி வாழுங்கள் என்பதாகும்.

மிகவேகமாகவளர்ந்துவரும் உலகத்திலே நவ நாகரிகங்களும் நவீன சாதனங்களும் மலிந்துவிட்ட சூழலிலே மனிதனுடைய இதயமும் மாறி நலிவடைந்து செல்கின்றது. ஒருவருடத்தில் பல பருவ காலங்கள் வந்து போவது போல மனித இதயங்களை கனிவாகவும் இனிமையானதாகவும் சீர்படுத்த இத்தவக்கால இறைவார்த்தைகள் எமக்கு வழிகாட்டுகின்றன. நாம் எச்சூழலில் இருந்தாலும் ஆறுதலையும்

## பரமபிதா காட்டிய பாதை

வலுவையும் தருபவையே இறைவார்த்தை. உண்மையான உடன்படிக்கை மனித வாழ்வில் பல விடயங்களை உறுதி பெறச் செய்கின்றன. எமது நம்பிக்கை கண்ணோட்டத்தில் இறைவன் மக்களோடு உடன்படிக்கை செய்துள்ளார். அந்த உடன்பாடு தந்தை-பிள்ளை என்ற நிலையை வலுப்படுத்துகின்றது. அது அழிவுக்குரிய உடன்படிக்கை அல்ல. மாறாக புதுவாழ்விற்குரிய பாதையாகும்.மோசேமேற்கொண்ட 40 நாட்கள் நோன்பு நல்ல தொரு உடன்படிக்கையை இறைவனோடு ஏற்படுத்தியிருந்தது. எலியாவின் 40 நாட்கள் நோன்பு அமைதியான, மெல்லிய காற்றலையினால் கடவுளைக் கண்டு கொள்ளச் செய்தது. பாலை நிலத்தில் இயேசு 40 நாட்கள்அவர் மேற்கொண்ட நோன்பும் அவரது சோதனையும் நாற்றிசை மக்களையும் மீட்க வழிவகுத்தது. பழைய ஏற்பாட்டில் உயிர்களை அழிக்க தண்ணீர் இனி ஒருபோதும் வராது என்றும் புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கில் தண்ணீரால் நாம் கழுவப்பட்டு புதுவாழ்வைப் பெற்றுக்கொள்வதும் இறை உறவின் உடன்படிக்கை ஆகும். எனவே இத்தவக்காலத்தில் எமது உடன்படிக்கையை புதுப்பித்து புதுவாழ்வு வாழ்வோம்.

இயேசு சோதிக்கப்பட்டார். ஆனால் சோதனைக்கு அடிமையாகவில்லை. இயேசுவின் சோதனையானது அவருடைய திருமுழுக்கை ஒத்ததாக அமைந்துள்ளது. இயேசு தன் பணிவாழ்வைத் தொடங்க தூய ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டு அர்ப்பணம் செய்யப்படுகின்றார். சாத்தானின் சோதனைகள் இயேசு உலகின் போக்கை முறியடிக்க வேண்டும் என்பதன்அடையாளமாக அமைந்துள்ளது. உலகப் போக்கிற்கும் உலக அரசுகளிற்கும் அப்பாற்பட்டது கடவுளின் அரசு என்பதை உணர்த்துகின்றது.



எமது மனித வாழ்விலும் சோதனை அல்லது துன்பம் இல்லாமல் வாழ முடியாது.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சோதனைகள் எம் வாழ்வை எதிர்கொண்டு கடல் அலையென மோதித் தத்தளித்து தடுமாறச் செய்கின்றன. ஆனால் அதில் நாம் தடம் புரண்டு விட்டால் அழிந்துபோய் விடுவோம்.

இன்றையஉலகம்மிகுந்தசோதனை நிறைந்தஉலகம். எனவேசோதனையை வெற்றி கொள்ள இறைவன் மீது நம்பிக்கை வைப்போம். உடன்படிக்கையின் மக்களாக நற்செய்தியின் படி வாழ்வோம்.

இந்த 40 நாட்கள் தவத்தின் காலம் எம்மை நல்ல மனிதர்களாக மாற்றட்டும். தவக்கால வழிபாடுகள் அனைத்தும் அர்த்தம் உள்ளதாகவும் நோன்புகள் உள்ளத்தின் நிறைவில் இருந்து வருவதாகவும் ஆண்டவரையும் அயலவரையும் நிறைவாக அன்பு செய்ய முனைவோம். இறைவனோடு எமக்குள்ள உடன்படிக்கையை புதுப்பித்து நற்செய்தியின்படி வாழ்ந்து புது மனிதர்களாக மீட்பை நோக்கிப் பயணிப்போம்.

**அருட்பணி ம.பத்திநாதர்**
**பங்குத்தந்தை-மண்டைதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# கரீபியன் கணையில் சிதைந்தது பாகிஸ்தான்

பாகிஸ்தான் அணிக்கு எதி ரான உலகக்கிண்ண லீக் ஆட் டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி 150 ஓட்ட ங்கள் வித்தியா சத்தில் அபார வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண தொடரின் நேற் றைய பத்தாவது போட்டியில் பாகிஸ் தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் கிரைஸ் சேர்ச் மைதானத்தில் மோதின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகி ஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி மேற்கிந்திய தீவுகள் அணியின் கெயில், சுமித் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கி னார்கள். கெயில் 4 ஓட்டங் களிலும், சுமித் 23 ஓட்டங் களிலும் அடுத்த டுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் பிராவோ, ராம்டின் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி நிலையான ஆட்ட த்தை வெளிப்படுத்தினர்.

பிராவோ 49 ஓட்டங்கள் எடுத்த நிலையில் காயம் காரணமாக வெளியேறி னார்.

மறுமுனையில் இருந்த ராம் டின் (51) அரைசதம் அடித்து ஆட்டமிழந்தார்.

கடந்த போட்டியில் சதம் அடித்த சிமோ ன்ஸ் அரைசதம் அடிக்க, ரசல் அதிரடி யாக விளையாடி 13 பந்திற்கு 42 ஓட்ட ங்கள் சேர்க்க, மேறகிந்திய தீவு கள் அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிறகு 310 ஓட்டங் களை குவித்தது.

இதைத் தொடர்ந்து 311 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங் கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம் பமே பெரிய அதி ரச்சியாக அமை ந்தது. நசீர் (0), ஷீஹ சட் (1), யூனிஸ் கான் (0), ஹரீஸ் சொஹாலி (0) என அடுத்த டுத்து முக்கிய விக்கெட்டுகளை இழந்தது பாகிஸ் தான். 1 ஓட்டங்களை மட் டும் எடுத்த நிலையில் 4 விக்கெட் டுகளை இழந்து இக்கட்டான நிலை யில் இருந்தது.

பின்னர் வந்த அணித்தலைவர் மிஸ்பாவும் 7 ஓட்டங்களில் நடையை கட்ட, 25 ஓட்டங்கள் என்ற நிலை யில் 5 முக்கிய விக்கெட்டுகளை பாகிஸ்தான் பறிகொடுத்தது.

அடுத்து ஜோடி சேர்ந்த சோகிப் மக்சூட், உமர் அக்மல் பாகிஸ் தானை சரிவில் இருந்து மீட்க போராடினர்.

சோகிப் 50 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார்.

அவரை தொடர்ந்து 59 ஓட் டங்களில் உமர் அக்மல் வெளி யேறினார்.

அப்ரிடி 28 ஓட்டங்களில் அவுட் டானார். வஹாப் (3), சொஹாலி கான் (1), முகமது இப்ரான் (2) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமி ழக்க, பாகிஸ்தான் அணி 39 ஓவ ர்களிலே சகல விக்கெட்டையும் பறிகொடுத்து 160 ஓட்டங்கள் மட் டுமே பெற்றது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

13 பந்தில் 42 ஓட்டங்கள் (3 பவுண்டரி, 4 சிக்சர்) குவித்த ரசல் போட்டியில் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

பாகிஸ்தான் (39 ஓவர்கள்) 160

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| உமர் அக்மல் | 59 | 71 |
| சோயிப் மக்சூட் | 50 | 66 |
| ஷாகித் அப்ரிடி | 28 | 26 |
| மிஸ்பா உல் ஹக் | 07 | 21 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

மே.தீவுகள் (50 ஓவர்கள்) 310/6

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ராம்தின் | 51 | 43 |
| சிம்மன்ஸ் | 50 | 46 |
| பிராவோ | 49* | 78 |
| ரஸ்ஸல் | 42* | 13 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

மே.தீவுகள் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| டெய்லர் | 07 | 1 | 15 | 3 |
| ரஸ்ஸல் | 08 | 2 | 33 | 3 |
| பென் | 09 | 0 | 39 | 2 |
| ஹோல்டர் | 07 | 2 | 23 | 1 |

## ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

பாகிஸ்தான் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| சோகைல் | 09 | 0 | 62 | 2 |
| இர்பான் | 10 | 0 | 44 | 1 |
| சோகைல் கான் | 10 | 1 | 73 | 1 |
| வாகப் ரியாஸ் | 10 | 0 | 67 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுபெற்றார்...

அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

இதையடுத்து, இலங்கையின் படைத் தளபதி பதவியை மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவிடம் ஒப்படைத்த அவர், படைத் தளபதியின் வாளையும் கையளித்தார்.

இதன் பின்னர், இலங்கை படைத் தலைமையகத்தில் படை அதிகாரிகளிடம் ஜெனரல் தயா ரத்நாயக்க விடைபெற்றுக் கொண்டார்.

புதிய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

ரஷ்யாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் துணைத் தூதுவராக மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கடைசியாக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சுஷ்மா விரைவில்...

பிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர், ஆயினும் அவரின் பயணத்துக்கான திகதி இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அழைப்பையேற்று கொழும்புக்கு செல்லவுள்ள சுஷ்மா சுவ்ராஜ், இரண்டு நாடுகளுக்கு இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் அமர்வில் பங்கேற்கவுள்ளார்.

அடுத்த மாதம், 13ஆம் திகதி இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்துக்கான ஏற்பாடுகள் குறித்தும் அவர் ஆராயவுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, கலாசார மற்றும் வர்த்தக தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்தும் இந்தப் பயணத்தின் போது பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## குற்றவாளிகளே...

உறவினர்கள் யாழ்.நகரில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்.நகரில் காணாமல்போனவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர். குறித்த போராட்டம் யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரையில் இடம்பெற்று பின்னர் 11 மணி தொடக்கம் 12 மணிவரையில் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக நடைபெற்றது.

குறித்த போராட்டத்தின் போதே காணாமல் போனவர்களின் உறவினர்கள் மேற்படிக்கோரிக்கையினை கண்ணீர்மல்க முன்வைத்திருக்கின்றனர். மேலும் "காணாமல் போக தமிழர்கள் என்ன ஜடப்பொருளா", "சர்வதேசமே சத்தியத்தை நிலைநாட்டு", "நீதி தேவனே கண்களை திற" என்றவாறான கோசங்களை பதாகைகளாக எழுதிக் கொண்டும்.

உள்ளக விசாரணை வேண்டாம். குற்றவாளிகளே நீதிபதிகளா? என்ற கோசங்களை எழுப்பிக் கொண்டும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். தன்னுடைய மகன் காணாமல்போன சம்பவம் தொடர்பில் தாய் ஒருவர் கண்ணீர்மல்க கூறுகையில், என்னுடைய பிள்ளையை முல்லைத்தீவில் இறுதி யுத்தம் நிறைவடைந்தபோது காலில் சிறு காயத்துடன் படையினரிடம் ஒப்படைத்தேன். என்னுடைய பிள்ளையை படையினர் கொண்டு சென்றனர். என்னுடைய பிள்ளையை அதன் பின்னர் காணவில்லை. என்னுடைய பிள்ளை எங்கே? ஐ.நா விசாரணை மூலம் என்னுடைய பிள்ளையை கண்டுபிடிப்பார்கள் என்று நினைத்திருந்தேன். என்னுடைய பிள்ளையை கண்டுபிடித்துக் கொடுங்கள்.

எங்களுக்கு உள்நாட்டில் விசாரணை வேண்டாம். இங்கே குற்றவாளிகளிடமே நாங்கள் நீதி கேட்க முடியுமா? அவர்கள் எமக்கு நீதி கொடுக்கமாட்டார்கள். எமக்கு நீதி வேண்டும். என்னுடைய பிள்ளை வேண்டும். நாங்கள் ஒழுங்காக சமைத்துச் சாப்பிடுவதில்லை. எங்கள் பிள்ளைகளை நினைத்து தினமும் அழுது கொண்டே இருக்கிறோம்.

என்னைப்போல் எத்தனை தாய்மார்? எத்தனை மனைவிமார்? எத்தனை பெற்றோர்? ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் பிள்ளைகள் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களை தேடிக்கொடுக்க ஐ.நாவே மார்ச் மாதத்தில் அறிக்கையை வெளியிடு எங்களால் இனியும் பொறுத்திருக்க முடியாது. எங்கள் பிள்ளைகளை தேடிக் கொடுங்கள்.

தேடிக்கொடுக்க முடியாவிட்டால் எங்களை சுட்டுக் கொல்லுங்கள் என அந்த தாய் கண்ணீர்மல்க உருக்கமான கோரிக்கையினை விடுத்தார். தொடர்ந்து மற்றொரு தாய் த னது காணாமல்போன தனது கணவன் பற்றிக் கூறுகையில் இறுதி யுத்தம் நிறைவடைந்த பின்னர் என்னுடைய கணவரை படையினரிடம் ஒப்படைத்தேன்.

கணவனை ஒப்படைத்த இடத்திலிருந்து எங்களை விலகிப்போகச் சொன்னார்கள். பின்னர் நாங்கள் விலகிச் செல்லாமல் நின்ற போது எங்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினார்கள். அதற்குப் பின்னர் நாங்கள் விலகிச் சென்றபோது என்னுடைய கணவன உள்ளிட்ட பலரை பேருந்து ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

என்னுடைய கணவன் பேருந்தில் இருந்து எங்களை பார்த்து சைகையினால் கிட்ட வர வேண்டாம் என கூறினார். அன்று தொடக்கம் என்னுடைய கணவனை நான் தேடிக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய கணவன் எங்கே? எல்லா முகாம்களிலும் எல்லா சிறைச்சாலைகளிலும் எனது கணவனை தேடிவிட்டேன் என்னுடைய கணவனை காணவில்லை. அவர் எங்கே என தேடிக் கொடுங்கள் என அவர் கண்ணீர் சிந்திக் கோாிக்கை விடுத்தார். இதேவேளை குறித்த பேராட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர், மலையக மக்கள் முன்னணியினர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (செ-4)


**விற்பனைக்கு**

தொட்டிலடி விளாவெளி சந்தி,
கீரிமலை வீதியில்
பண்படுத்தப்பட்ட 30 பரப்புக் காணி
வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் கூடியது.
பகுதிபகுதியாக விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0779788635
(9581)

**அறை வாடகைக்கு உண்டு**

படிக்கின்ற அல்லது உத்தியோகம் பார்க்கின்ற பெண்கள் தங்குவதற்குரிய அறை யாழ். பல்கலைக்கழகத்தை அண்மித்த இடத்தில் வாடகைக்குண்டு. (இ)

தொடர்பு : 0777 609 922


## மகிந்தவை...

நேற்று மாலை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரும் அவரே, 100 நாள் வேலைத் திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவு வழங்கியுள்ளது.

எமது 100 நாள் திட்டத்திற்கு 'ஆதரவளிப்பதற்கு அவர்களுக்கு நன்றி, தேர்தலுக்கு பின்னர் அனைத்து கட்சிகளும் சேர்ந்த தேசிய அரசாங்கம் அமைக்கப்பட உள்ளது. இது புதிய முறை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கூச்சலிடும் கூட்டம் ஒன்று உள்ளது. அந்த கூட்டத்தை நுகேகொட கூட்டம் என்றும் ரணில விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## போர்க்குற்ற...

வியலாளர்கள் 5 இலங்கை ஊடகவியலாளர்கள் எழுத்துமூலமான சாட்சிங்களை முன் வைத்துள்ளனர்.

வன்னி இராணுவ நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஆயிரம் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக புலத்தில் உள்ளவர்கள் சாட்சியமளித்துள்ளதாக ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த போர் குற்ற விசாரணை அறிக்கை செப்டம்பர் மாதம் 10-ம் திகதி வெளியிடப்பட உள்ளதாக ஐ.நா அமைப்பு அறிவிப்பு செய்திருந்தமை தெரிவிந்ததே. (செ-11)

## மோட்டார் சைக்கிள்...

10.30 மணியளவில் யாழ்-மன்னார் செல்லும் நாச்சிக்குடா பகுதி வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவு இரண்டாம் வருட மாணவனான மன்னார் முத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ் ரோபட் கிளன்ஸ்டன் லியோன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேலும் அதே பிரிவில் கல்வி பயிலும் சக மாணவனான கோப்பாயைச் சேர்ந்த கந்தசாமி வருணன் (வயது 25) மற்றும் மன்னாரைச் சேர்ந்த ஆணும் பெண்ணொருவரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

படுகாயம் அடைந்த பல்கலை மாணவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப மாணவர்கள் இருவரும் யாழில் இருந்து மன்னார் நோக்கி பிளசர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இதில் வருணன் வாகனத்தைச் செலுத்த லியோன் பின்னே அமர்ந்திருந்துள்ளார். பயணத்தின் போது நாச்சிக்குடா பகுதியில் ரி.வி.எஸ் சிறிய ரக மோட்டார் சைக்கிளில் ஆணும பெண்ணுமாக வந்த இருவர் பிரதான வீதிக்கு ஏறியுள்ளனர். அவ்வேளை மாணவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளுடன் சடுதியாக மோதியுள்ளது.

இதில் லியோன் தலையில் பலமாக அடியுண்டு சம்பவ இடத்திலேயே மயக்கம் அடைந்துள்ளார். உடனடியாக படுகாயம் அடைந்த நால்வரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் லியோன் அங்கு உயிர் இழந்துள்ளார்.

படுகாயம் அடைந்த சக மாணவனான வருணன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## வடக்கில்...

னால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது.

போர்ச்சூழல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நீண்ட காலம் கடந்த பின்னரும் வடக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைமைகள் போரின் அச்சத்தையும் காட்சிகளையும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பவையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அங்குள்ள யுத்த வடுக்களுக்கு போதிய ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் நாட்டில் நல்லிணக்கம் ஒன்றை கட்டியெழுப்புவது கடினமாக விடயமே.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பகமானதும், பக்கச்சார்பற்றதுமான விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு தீர்வு உருவாக்கப்பட வேண்டிது நல்லிணக்க முயற்சிக்கு அவசியமானதாகும்.

மேலும் நல்லிணக்கத்தை சிறந்த முறையில் தக்கவைத்துக் கொள்ள குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் வோரா டேவிஸ் தெரிவித்துள்ளார். (செ-11)

## பற்குணராஜாவின் இறுதிச் சடங்கு இன்று




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி ப.யோகேஸ்வரியின் கணவர் கு.பற்குணராஜாவின் இறுதிச் சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.365 கோயில் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

கடந்த 18-ம் திகதி காலமான பற்குணராஜா யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் பிரத்தியேகச் செயலாளராகவும் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## பல்கலை பேரணிக்கு ஆதரவு—மாவை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் நாளை மறுதினம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்ட பேரணிக்கு முழு ஆதரவு வழங்குவோம் என த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற குழுவின் துணைத் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்துவது தொடர்பாக 2014 மார்ச் மாதத்தில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் 2015 மார்ச் மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்தது. அப்படி மனித உரிமைப் பேரவைத் தலைமையால் அறிவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது அந்த அறிக்கை 2015 செப்ரெம்பரில் வெளியிடப்படும் என மனித உரிமைப் பேரவைத் தலைவர் அறிவித்திருக்கின்றார். இந்த அறிக்கை பிற்போடப்படுவதான செய்தி தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி 2015 மார்ச் மாதத்தில் மனித உரிமைப் பேரவையில் இலங்கை மீதான முன்னைய ஜனாதிபதி குழாத்துக்கும் எதிரான போர்க்குற்றம் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என வலியுறுத்தி இலங்கையில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மற்றும் சிவில் அமைப்புக்களும் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 24.02.2015 காலை 10 மணிக்கு நடத்தவுள்ள ஆர்ப்பாட்டத்தையும் பேரணியையும் நாம் முழு மனதுடன் ஆதரிக்கின்றோம்.

எனவே இந்த ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் அனைவரும் கலந்து பங்களிப்புச் செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றோம். நாமும் அந் நிகழ்ச்சியில் பங்குகொண்டு ஆதரவளிக்கவுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN EUROPE

**Latvia, Lithuania, German, Italy**

தகைமைகள்:

2 வாரத்திற்குள் 5 விசாக்கள்

- G.C.E O/L (6 பாடங்களில் சித்தி), G.C.E A/L (3 பாடங்களிலும் சித்தி) கட்டாயமானது.
- 19-24 வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.
- பட்டதாரிகளாயின் வயதெல்லை கிடையாது.
- ஆங்கிலத்தில் தேர்ச்சி அவசியம்.

(IELTS, City&Guilds A1,B1 ,Deutsch வகுப்புக்களும் நடைபெறுகின்றது)

- 100% விசா உத்தரவாதம்.

(C-223)

'தகுதியான மாணவர்களுக்கு மட்டும்' எமது நிறுவனத்தினூடாக கல்லூரிக்கட்டணம் மற்றும் வங்கிக்கடன் ஏற்பாட்டுடன் விசா பெற்றுக்கொடுக்கப்படும் (நிபந்தனைக்கு அமைவாக)

WEC

**WEC- விசா ஆலோசனை மையம்**
0779265447 , 0217200989
சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே)



# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

**இடம் :** யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

**நேரம் :** காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தரம் 1 முதல் 11 வரையான இரண்டாம் மொழி சிங்கள Model Paper வெளிவந்துவிட்டது.

- 15 % முதல் 20 % வரை விலைக்கழிவு.

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus), English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது. பத்திரிகைகளும் பெற்றுக் கொள்ளலாம்

**யாழ். புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

(C-190)

**தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552**



FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

# FRENCH CLASSES



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்...

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 320 2973 (C-216)

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 28.02.15 @2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 28.02.15 @3.30pm No.181, 1st Floor, Main Street, நெல்லியடி. | சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை |



## விற்பனைக்கு

சங்குவேலியில் காணி
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0771728141

(C-213)



துறைமுகம் / விமான நிலையம் சேவைக்கு கல்வித்தகைமை உள்ள / அற்ற, பயிற்சியுடைய / பயிற்சியற்ற 18-55 வயதிற்கிடைப்பட்டவர்கள் உடனடியாகத் தேவை.

(உணவு, தங்குமிடத்துடன் உயர்ந்த சம்பளம்)

தொடர்புகளுக்கு
077 2926 934

(9565)



## முன்பள்ளி ஆசிரியர் தேவை

**தகைமை :** G.C.E. O/L மற்றும் A/L திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழித்திறனில் ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**மேலதிக தகைமை :** முன்பள்ளி Diploma சான்றிதழுடன் கற்பித்தல் செயற்பாட்டில் 2வருடத்துக்குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை :** 20 தொடக்கம் 35 வரை
**சம்பளம் :** கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு :**
0215689998, 0773462167

(9585)



# வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்

**ஹோட்டல் முகாமைத்துவம்** சிங்கப்பூர் மலேசியா

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 80,000/- - 120,000/-
- பாடநெறிக்கட்டணம் 350,000/-

1 வருடம்

Hotline: 077 3013060

கட்டணம் 100% வீசா வந்தபின்
வீசா 14 நாட்களில்

**உயர் கல்வி அனுசரணை**
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...

எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.

iCS Study Overseas

இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060

(C-225)


# விபத்தில் ஒருவர் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஏ9 வீதியில் விவசாயப்பண்ணை அருகில் சைக்கிளில்சென்று கொண்டிருந்தவர் மீது பின்புறமாகவந்த வான்ஒன்று மோதிய தனாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சைக்கிளில் பயணித்த சாஸ்திரிகூழாங்குளம், வவுனியாவைச் சேர்ந்த 60 வ்யதுடைய கந்தையா தர்மலிங்கம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (செ-11)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு பிள்ளையினார் (சிவகுரு)



கோயில்புளியங்குளம் நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் 1-ம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பிள்ளையினார் (சிவகுரு) 20.02.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சிதம்பரம் தம்பதி யரின் மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் கந்தவனம் ஆகியோரது சகோதரரும், தெய்வேந்திரம் (கனடா), இராசேந்திரம் (லண்டன்), ஜெயராசா (அவுஸ்திரேலியா), கௌசலா, சிவகணேசன் (ஆசிரியர் சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்), காலஞ்சென்ற சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்ததி (கனடா), ஜெயர மணி (லண்டன்), கலைவாணி (அவுஸ்திரேலியா), ஸ்ரீராமசந்திரன், அனுஷலா (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரது பாசமிகு மாமனாரும், தீபிகா, ஜனனி, பவித்திரா, சிந்துஜன், மதுமிதா, மயூரி, பிரணவன், பிரவீன், சதுர்ஷன், துஷானா, மிதுஷா, லகிஸ்ஷா, அபிக்ஷா ஆகியோரது பேரனும், விதுஷா, கிருத்திக், அட்சரா ஆகியோரது பூட்டனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.02.22) காலை 10 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நாவற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்
Phone - 077 8283 943

(C-236)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
**செல்லையா இந்திரசித்து**
(மண்கும்பான் - லண்டன்)

லலிதா ஜுவல்லறி உரிமையாளரின் தந்தையான அமரர் செல்லையா இந்திரசித்து அவர்கள் 19.02.2015 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



உரிமையாளர்
நியூ நகுலா ஜுவல்லறி
நியூ லலிதாஸ் ஜுவல்லறி

(9582)


SPEED LANKA EXPRESS

# வெளிநாடுகளுக்கான

**தபால் பொதி விநியோக சேவை**



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

(C-218)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 22.02.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 03



# திருப்பதியானே மைத்திரியை காப்பாற்று

## ஆலடி மாநாடு...

மாவை எம்.பியும் முதல்வர் விக்கியும் முகம்கொடுத்து கதைப்பதில்லையாம்?

## வியாசர் பதில்கள்...

கடவுள் நம்பிக்கை தங்களுக்கு உண்டா?

## உலகக்கிண்ணத் தொடரில் காணாமல் போன ஜாம்பவான்கள்

## மகிந்தவின் காதுகளை திருகிய மோடி



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருப்பதியானே மைத்திரியை காப்பாற்று


குருஷேத்திரம்

மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் ஆயுள் எப்படி என்று சாதகம் பார்த்தால் ஐந்து வயதிற்குள் கண்டம் ஏற்பட வாய்ப்புண்டு. அதிலும் எதிர்வரும் ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்கள் மிகவும் ஆபத்தானவை. இந்த மூன்று மாதங்கள் கடந்து பாராளுமன்ற அதிகாரமும் மைத்திரிக்குக் கிடைத்தால் இராஜயோகம் கிட்டும். மைத்திரியின் ஆட்சிக் காலச் சாதகபலன் இதுவாயினும் சில பரிகாரங்களையும் மைத்திரி செய்தாக வேண்டும்.

அதாவது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்ற சோதிட நியதிக்கமைய மைத்திரிக்குக் கேடு விளைவிக்கக் கூடிய கிரகம் அல்லது கிரகங்கள் அடைபடவேண்டும். குறித்த கிரகங்கள் அடைபட்டால் பாதகம் தவிர்க்கப்படும்.

அதேநேரம் பாராளுமன்றத் தேர்தல் முடியும் வரை மைத்திரிபால சிறிசேன தனக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைக் குறைக்க முற்படக்கூடாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது என்ற நடவடிக்கையானது பாராளுமன்ற ஆட்சி மைத்திரியிடம் வந்த பின்னரே செய்யப்படவேண்டும். இந்த ஆலோசனைகளை சாதககாரனாகிய மைத்திரி செய்வது அவசியம்.


அதாவது மைத்திரியின் 100 நாள் வேலைத்திட்டத்தில் கேடு விளைவிக்கக் கூடிய கிரகங்களை சிறையில் அடைத்தல், அதிகாரக் குறைப்பை ஒத்திவைத்தல் என்ற இரு விடயமும் அவசியமானவை. இவை ஒருபுறம் இருக்க,

இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருப்பதி ஏழுமலையானிடமும் சென்றிருந்தார். திருப்பதியானை வழிபடுவதற்கு அடியார்கள் தவம் கிடப்பர். மூன்று, நான்கு நாட்களாக வரிசையில் நின்று ஏழுமலையானைத் தரிசிக்கின்ற நிலைமைகளும் உண்டு. எனினும் முக்கியஸ்தர்களுக்கு விசேட ஏற்பாடுகளும் உள்ளது. அதிமுக்கிய பிரமுகர்கள் திருப்பதிக்குச் செல்கின்றபோது திருப்பதி நிர்வாகம் விதிமுறைகளை மீறி மூடிய கதவினைத் திறந்து திருப்பதியானைத் தரிசிக்க ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளும் நடப்பதுண்டு.

இந்த இடத்தில்தான் எங்கள் நல்லூர்க்கந்தன் எத்தனையோ படி உயர்வு எனலாம். நல்லூரில் பூசை நடக்கும் போது சென்றால் முருகனை வழிபடலாமே தவிர, மற்றும்படி நாட்டின் தலைவர் வந்தாலும் அவருக்காகப் பூட்டிய கதவு திறக்கப்படமாட்டாது. பெருமெடுப்புகளும் நடக்க மாட்டாது. இந்த ஒழுங்கு முறைக்காக நாங்கள் நெஞ்சை நிமிர்த்திக்கொள்ளமுடியும்.

## திறப்பு உடைந்தது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருப்பதிக்குச் சென்ற வேளை ஆலயக் கதவு பூட்டப்பட்டிருந்தது. இலங்கை நாட்டின் ஜனாதிபதி என்ற அடிப்படையில் அவருக்கு விசேட வரவேற்பு திருப்பதியில் அளிக்கப்பட்டதுடன், ஆலயக் கதவைத் திறந்து திருப்பதியானை வழிபடுவதற்கு ஏற்பாடு செய்ய ஆலய நிர்வாகம் முடிவு செய்தது. அந்த முடிவின் பிரகாரம் ஆலயக் கதவைத் திறக்கின்ற வேளையில் திறப்பு உடைந்து போயிற்று.






தங்கத்தாலான அந்தத் திறப்பு உடைந்தமை பலருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்திருந்தது. அதிலும் குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவுக்கு தாளாத கவலை. திருப்பதிக் கோயில் திறப்பு உடைந்தது ஏன்? என்ற கேள்வியை அந்த ஏழுமலையானிடம் கேட்டால் அவன் பல காரணங்களைக் கூறலாம்.

அதில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்னிடம் வந்தவர். நான் அவரை தேர்தலில் வெற்றி பெறச் செய்யவில்லை.

தேர்தல் காலத்தில் நீ என்னிடம் வராதபோதிலும் உன்னை நான் வெற்றி பெறச் செய்தேன். அதிலும் தமிழ் மக்களை வாக்களிக்கவைத்தே உனக்கு வெற்றி தந்தேன். ஆனால் நீயோ தமிழர்களுக்கு என்ன செய்தாய்?

அவர்களின் நிலங்களை விடுவித்தாயா?

நீண்டகாலம் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் தமிழ் இளைஞர்களுக்கு மன்னிப்புக் கொடுத்தாயா?

காணாமல் போனவர்கள் தொடர்பில் கண்ணீர் வடிக்கும் தாய்மாரின் துயரம் போக்க நடவடிக்கை எடுத்தாயா?

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் தந்தாயா?

இல்லவே இல்லை. அப்படியானால் நீ என்னிடம் வந்தபோது எப்படி நான் உன்னை உடனடியாகச் சந்திப்பது. அதனால்தான் திறப்பை உடைத்து எனது எதிர்ப்பைக் காட்டினேன் என்பதாக அந்தப் பதில் இருக்கலாம்.

திருப்பதி வாழ் வெங்கடேஸ்வரனின் பதில் அதுவல்ல. இதுதான் என்றும் சொல்லலாம். ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தபோது மகிந்த ராஜபக்ஷ என்னிடம் வந்தார். முன்பும் பல தடவைகள் மகிந்தர் என் சந்நிதிக்கு வருவது வழக்கம். என்னிடம் வந்து போன பின்பு மகிந்தவைத் தேர்தலில் தோற்கடித்து உன்னை வெல்ல வைத்தேன். ஏன் தெரியுமா? மகிந்த ஜனாதிபதியாகினால் தமிழினத்திற்குத் தொடர்ந்து அநீதி இழைப்பார். அவரோடு சேர்ந்திருக்கின்ற அரசியல்வாதிகளும் படைத்தரப்பும் தொடர்ந்து தமிழர்களை நசுக்க வேண்டும் என்று கருத்துரைப்பர். அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் மகிந்தா தமிழர்களுக்குக் கெடுதி விளைவிக்கும் திட்டங்களை அரங்கேற்றுவார். எனவே, உன்னை ஜனாதிபதியாக்கினால் நீவிர் தமிழர்களுக்கு நன்மை செய்வீர். அதேநேரம் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி தமிழின அழிப்புச் செய்த மகிந்த அன் கம்பனிக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பீர் என்று நம்பினேன். ஆனால் எதையும் செய்யாமல் பற்றற்ற அரசியல் துறவி போலல்லவா நீ நடந்து கொள்கிறாய். ஆகையால், எனது எதிர்ப்பைக் காட்டுவதற்காக திறப்பை உடைத்துக் கொண்டேன் என்பதாக இருக்கலாம்.

அட, மேற்குறிப்பிட்ட இரண்டுமல்ல. திருப்பதியில் திறப்பு உடைந்ததற்கு வெங்கடேசன் இப்படியும் ஒரு பதிலைத் தரலாம்.

மகனே! மைத்திரி எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த வெற்றி பெறக் கூடிய வாய்ப்பு உண்டு. மகிந்த வெற்றி பெற்றால், வல்லமை பொருந்திய பலர் அவருடன் இணைவர்.

இலங்கைத் திருநாட்டில் நாளுக்கு நாள் ஆர்ப்பாட்டம்; அடிதடி நடக்கும். மைத்திரி பதவி விலக வேண்டும் என்ற கோஷம் வானைப் பிளக்கும். இந்த ஆபத்தை உணர்த்தவே திறப்பை உடைத்து குறிப்பால் உணர்த்தினோம் என்பதாக அந்தப் பதில் அமையலாம்.

சிலவேளையில் மேற்குறித்த மூன்று விடயங்களுமே திறப்பை உடைத்திருக்கலாம்.

எது எப்படி இருந்தபோதிலும் ஜனாதிபதி மைத்திரியின் எதிர்காலம் என்பது கடினமானதாகவே இருக்கும். அதிலும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மைத்திரி அமைக்கும் வியூகம் பலமானதாக இல்லாவிடில் மகிந்த மீண்டும் எழுச்சி பெறுவது தவிர்க்கமுடியாததாகி விடும்.

மகிந்த பாராளுமன்றப் பிரவேசம் செய்தால், அது மைத்திரிக்கு அட்டமத்துச் சனியாக அமையும்.

திருப்பதியானே மைத்திரியைக் காப்பாற்று.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

விநாயகப் பெருமானின் பூசை முடிந்த கையோடு ஆலடி மாநாடு கூடுவது வழக்கம். அந்த மாலைப் பொழுதின் ரம்மியமான வேளையில் ஆலடியில் குந்தியிருந்து கதைப்பதில் இருக்கின்ற சுகம் இந்த உலகில் வேறெங்கும் இல்லை என்ற நினைப்போடு தான் ஆலடி மாநாடு கூடும்.

மாநாட்டில் ஆகக் குறைந்தது ஆறு பேராவது சந்தித்துக் கொள்வர். எனினும் சிறாப்பர் கனகசபை கனடா சென்றதால் மாநாட்டில் ஒரு அங்கத்தவரின் இடம் வெற்றிடமாகவே உள்ளது.

கங்காணி, கார்த்திகேயன் இன்னமும் மாநாட்டுக்கு வரவில்லை. எங்கட சில முக்கிய பிரமுகர்கள் போல கங்காணி கார்த்திகேயனும் பிந்திவாரதில் நம்பர் வன்.

வாத்தியார் வைத்திலிங்கம் கோபத்தோட ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் மிக கவனமாக கேட்டுக் கொண்டிருந்தனர்.

வாத்தியாரின் முகம் கடுப்பாக இருந்ததைப் பார்க்கும் போது ஏதோ முக்கியமான விடயம் என்பது தெரிகிறது.

எதற்கும் ஒட்டுக்கேட்கும் எங்கட கலாசாரத்துக்குள் நுழைந்தால் எல்லாம் தெரிய வரும் என்றெண்ணி மெல்லச் சென்று அந்தப் பெரிய ஆலமரத்தில் மறைந்து கொண்டேன். மாநாட்டில் கதைப்பது அப்படியே கேட்கிறது.

**வாத்தியார்:-**...நீங்கள் என்ன சொன்னாலும் எங்கடயளத் திருத்த முடியாது. அவனவன் ஒற்றுமை பற்றி பேசுகிறாங்கள். இஞ்ச கூட்டமைப்பிற்குள்ளே ஒற்றுமையில்லை.

**விதானையார்:-**என்ன வாத்தியார் புதுக்கதை சொல்லுறியள்?

**வாத்தியார்:-** என்ன?... புதுக் கதையோ!

அட, அறுவாரே உங்களால தான் உந்த அரசியல்வாதிகள் எங்கள ஏமாற்றுகினம். தயவு செய்து அரசியலில என்ன நடக்குது என்பதையாவது கொஞ்சம் கவனியுங்க. கூட்டமைப்பிற்குள்ள ஒற்றுமை இருந்தா தமிழரசுக் கட்சியின்ர தலைவர் மாவை சேனாதிராசாவும் வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனும் கதைக்காமல் இருப்பது ஏன்?

(வாத்தியார் இப்படிக் கூறியதும் மாநாட்டில் இருந்தவர்களுக்கு அதிர்ச்சி, வாத்தியார் சொல்லுறதில உண்மையிருக்குமோ என்ற சந்தேகப் பார்வை வாத்தியார் மீது விழ மாநாடு மௌனமாகியது. மூப்பர் அந்தோனி முத்தர் மௌனத்தை கலைக்க முற்பட்டார்)

**மூப்பர்:-** வாத்தியார் நீங்கள் பொய் சொல்ல மாட்டியள். ஆனா தவறான செய்தியை யாரும் உங்களுக்குச் சொல்லியிருப்பினமோ என்ற சந்தேகம் எங்களிட்ட இருக்கத்தான் செய்யிது.

**வாத்தியார்:-** மிஸ்ரர் மூப்பர் இந்த வாத்தி வைத்திலிங்கம் ஒரு நாளும் பொய்யான தகவலை சொல்லமாட்டான். மாவையும் விக்கியும் கதைக்கிறதில்லை என்பது நூறு வீதம் உண்மை. சுன்னாகத்தில நடந்த நிகழ்வொன்றில மாவை வந்த போது விக்கியர் கை கொடுத்தவராம். ஆனால் மாவை கைகொடுக்கவில்லை. இந்தச் சம்பவத்தை நிகழ்விற்குச் சென்றிருந்த இந்திய துணை அதிகாரியும் கவனித்ததாக கேள்வி.



## மாவை எம்.பியும் முதல்வர் விக்கியும் முகம் கொடுத்து கதைப்பதில்லையாம்

**விதானையார்:-** அட நாசமறுப்பு எங்களப் பற்றி அந்தாள் என்ன நினைச்சிருக்கும். இந்தியத் தமிழர் எங்களுக்காகத் தங்களையே தீயிட்டுக் கொளுத்தி தியாகம் செய்ய, இங்க என்னடாவென்றால் மாவையும் விக்கியும் கதைக்கிறதில்லை. பாவம் முத்துக்குமாரு இதுகளுக்காக தன்ர உடலில் சவுதி எண்ணெய ஊத்தி தன் உடலைக் கருக்கி இன்னுயிரைத் துறந்தானே! இப்படித் தான் எல்லாமும். கொஞ்சப் பேர் தங்கட உயிரை தியாகம் செய்ய; இன்னும் சிலர் வெள்ளைக் கொடியை பிடித்துக் கொண்டு போக; கனபேர் தாங்களாய்ப் போல் சரண்டர் பண்ணின மாதிரித்தான்.

மண் வேணும், விடுதலை வேணும், தமிழருக்கு தனி அரசு வேணும் எண்டு தங்கட உடம்பில குண்டை கட்டிக் கொண்டு போன அந்த தியாகிகளை நினைக்க... வாத்தியாரின் கன்னம் நனைந்து கொள்கிறது ஓ! வாத்தியாரின்ர இரண்டாவது பெடியன் மாவீரனல்லோ, அதுதான்... தோளில் கிடந்த உத்தரியத்தால் வாத்தியார் கண்ணைத் துடைக்க மாநாடு மௌனப் பிரார்த்தனை செய்தது)

**மூப்பர்:-**கடவுளே! தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்காக வாழ வேண்டிய எங்கட பிள்ளையள் தங்கட உயிரைத் தியாகம் செய்தனர். இன்னும் எத்தனையோ பேர் கை, கால்களை இழந்து வாடி நிற்க, இன்னும் கொஞ்சப்பேர் சிறையில அடைபட்டிருக்க, எதுவும் செய்யாதவர்கள் தமிழர்களுக்கு அரசியல் நடத்துகினம்.

**பண்டிதர்:-**அதுசரி வாத்தியார் மாவையும் விக்கியும் ஏனாம் கதைப்பதில்லை.

**வாத்தியார்:-** எல்லாம் பழைய கோபமாகத்தான் இருக்கும்.

**விதானையார்:-**என்ன பழைய கோபமோ! ஏன்? முந்திப்பிந்தி இந்த இரண்டு பேரும் வேறுபட்ட இயக்கங்களில இருந்தவர்களோ!

**வாத்தியார்:-** அப்படியொன்றுமில்லை விதானையார். வடக்கு மாகாண சபையின்ர முதலமைச்சராக போட்டியிட மாவைக்கு நல்ல விருப்பம். ஆனா சம்பந்தர் விக்னேஸ்வரனை சந்தித்து நீங்கள்தான் பொருத்தம். வடக்கு மாகாண சபைத் தேர்தலில கட்டாயம் போட்டியிட வேணுமென்று கேட்க, எல்லோரும் விரும்பினால் நான் சம்மதம் என்று விக்கி சொன்னவரல்லோ. அதிலிருந்து தொடங்குதுதான் உந்தக் கோபம்.

**விதானையார்:-**அட சங்கதி அப்படியோ!

**மூப்பர்:-**யார் என்ன சொன்னாலும் முதல்வர் விக்கி நெற்றிக்கு நேரே அடிக்கிறார். அதுவும் சில பேருக்குப் பிடிக்காமல் இருக்கும். நீதியரசராக இருந்த மனுசனைக் கொண்டு வந்து முதல்வராக்கி விட, அந்தாள் அரசியல் தெரியாமல் எல்லாவற்றையும் வெளிப்படையாக கொட்டித்தள்ளுது இதுவும் கூட்டமைப்பில இருக்கிற சிலருக்குப் பிடிக்காது போல.

**பண்டிதர்:-**அதுசரி வாத்தியார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கூட்டமைப்போடு இரண்டறக் கலக்கும் படி ஒரு எம்.பி கேட்டவரெல்லோ. நல்லது எல்லோரும் ஒன்று பட்டால் தென்பகுதியாரிட்ட எதையும் இறுக்கிக் கேட்கலாம். ஒற்றுமைப்படுவது எந்தக் காலத்திலும் நல்லது தானே! ஆனா...

**மூப்பர்:-**என்ன? பண்டிதர் ஆனா... என்று இழுக்கிறியள்.

**பண்டிதர்:-**இல்ல... கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோரை ஒன்று சேருமாறு கேட்ட அந்த எம்.பி. மாவையும் விக்கியும் கதைக்க வேணும், தமிழ் மக்களின்ர நன்மை கருதி இருவரும் தங்களின்ர கோபங்களை மறக்க வேணும் என்று ஏன் கேட்கவில்லை.

**வாத்தியார்:-**இதுதான் பண்டிதர் சொல்லுறது அறிந்தவன் அறிவான் அரியாலை பனாட்டு என்று. வருகிற சித்திரை மாதத்திற்கு அங்கால தேர்தல் காலம். தேசிய பட்டியலில எம்.பியாக இருந்தவர் வடமராட்சியை மையமாக வைத்து தேர்தல் களத்தில குதிக்கப் போறாரா.

அவற்ர வாக்கு வேட்டைக்கு விக்கி மேடையேறி பேசுவாரெல்லோ அதுதான்...

**மூப்பர்:-**தமிழரசுக் கட்சியில நீண்ட காலம் உறுப்பினராக இருந்த வாத்தியாருக்குத் தான் உந்த அரசியல் ஏறுமாறுகள் தெரியும். நாங்கள் என்ன செய்யிறது பேப்பரில வாற எல்லாவற்றையும் உண்மையென்று நம்பியிருக்கிறதத் தவிர வேறு என்னதான் எங்களுக்குத் தெரியும்.

**வாத்தியார்:-**இஞ்சே மூப்பர் எங்கட சனங்கள் பாவங்கள். சிங்கள ஆட்சியாளர்கள் எங்கள ஏமாற்றினதை விட எங்கட தமிழ் அரசியல்வாதிகள் எங்கள ஏமாற்றினது தான் அதிகம்.

இருந்தும் என்ன செய்யிறது? எங்கள வழிப்படுத்த நேர்மையான அரசியல் தலைவர்களை அந்தக் கடவுள் இன்னும் தரவில்லை. ஏதோ! நாங்கள் செய்த பாவ பழி போல ம்... இப்படி அனுபவிப்போம்.

(இப்படி பெருமூச்சோடு வாத்தியார் கூற, கங்காணி கார்த்திகேயன் அவசர அவசரமாக மாநாட்டுக்கு வந்தார். கங்காணியின் முகத்தில் இனம் புரியாத பயத்தின் ரேகைகள் தெரிந்தன)

**விதானையார்:-**என்ன கங்காணியார் ஏதேனும் விளக்கம் விசாரணையென்று...

**கங்காணி:-** கொஞ்சம் பொறுங்கோ என்ர உயிரை காப்பாற்றின அந்தப் பெருமானுக்கு முதலில நன்றி சொல்லிப் போட்டு வாறன்.

**வாத்தியார்:-**முதலில என்ன சங்கதியென்பதைச் சொல்லப்பா...

**கங்காணி:-** 18.02.2015 புதன் கிழமை அன்று பளைக்குப் போவதற்கு யாழ்ப்பாணத்தில இருந்து வவுனியா செல்லும் தனியார் பஸ்ஸில ஏறினனான். நேரம் பி.ப 3.15 இருக்கும். என்ர ராசா அந்தச் சாரதி ஒரே ரெலிபோன் கதைத்த படிதான்.

ரெலிபோன் கதைத்தபடி அந்த சாரதி பஸ் ஓடின வேகத்தில என்ர ஈரல் கருகிப் போச்சுது. கடவுளே! என்ர கொடுக்கல்-வாங்கல ஒருத்தரிடமும் சொல்லாமல் வந்திட்டன் என்று ஒரே ஏக்கம்...

(இப்படி சொல்லிக் கொண்டே கங்காணியார் பிள்ளையார் கோயிலுக்குச் செல்ல கோயில் மணியும் மாலைப்பூசைக்காக ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்களும் எழுந்து பூசை பார்க்கச் சென்றனர்)

**மூப்பர்:-**என்ன இருந்தாலும் அடுத்த மாநாட்டில கங்காணியற்ற பிரச்சினை என்ன என்பதை அறியத்தான் வேணும் நான் வாறன். (மூப்பர் விடை பெற எஞ்சியவர்கள் கோயிலுக்குச் செல்ல மாநாடு கலைந்தது)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# தந்தையின் தியாகம்

இரவு மணி பத்து. கடைசி பஸ்ஸை பிடிக்க விரைந்த மாணிக்கத்தின் கண்ணில் அந்த ஏரிஎம்மில் அமர்ந்திருந்த வாட்ச்மேன் தட்டுப்பட்டார். இது நம்ம தங்கராசு மாதிரியில்ல இருக்குது? மனதில் கேட்டுக் கொண்டவர் ஏரிஎம்மை நெருங்கினார். அது அவர் நண்பர் தங்கராசுவே தான்.

ஏலே தங்கராசு என்னாச்சு? வயசான காலத்துல எதுக்கு உனக்கு இந்த வேலை? இப்பத்தான் பையனுக்கு கல்யாணம் பண்ணி வைச்சே, அதுக்குள்ள மருமககொடுமைப்படுத்த ஆரம்பிச்சிட்டாளா? கேட்ட நண்பனை கையமர்த்தினார் தங்கராசு

அந்த பிள்ளையைப் பற்றி அப்படியெல்லாம் பேசாதே. என் மருமகள் தங்கம். அப்ப எதுக்கு உனக்கு இந்த வார்ச்மேன் உத்தியோகம்? கல்யாணத்துக்கு முந்தி உன்ன உக்கார வைச்சு சோறு போட்ட பையன் இப்ப வேலைக்கு அனுப்பியிருக்கிறானெண்டால் அப்படித்தான் நினைக்கத் தோணுது?

அவங்க யாரும் என்ன வேலைக்கு அனுப்பல. நானாத் தான் வந்தேன். ஏன்டா வயசான காலத்துல பணம் சம்பாதிக்கிற ஆசை வந்திருச்சா. அதெல்லாம் இல்லையடா உனக்கு தெரியும் எங்க வீட்ல மொத்தமே ஒரு றூமும் ஒரு கிச்சினும்தான். பையனுக்கு இப்ப தான் புதுசா கல்யாணம் ஆகியிருக்கு முன்னாடி என்றால் நானும் என் பையனும் மட்டும்தான் வீட்ல இருப்போம். இப்ப புது மருமகள் வந்திட்டா. ஒரு றூம் எப்படிப்போதும். என்னை திண்ணையில படுக்க வைக்க என் பையன் மனசு இடம் கொடுக்க மாட்டேங்குது. அவனோட சந்தோசத்தை கெடுக்க என் மனசு இடம் கொடுக்க மாட்டேங்குது. அதுதான் அவன் சொல்லச் சொல்ல கேட்காமல் இந்த நைட் வாட்ச்மன் வேலைக்கு வந்துட்டன். சம்பளமும் கிடைக்குது. பிள்ளைகளோட சந்தோசமான வாழ்க்கைக்கு இடைஞ்சல் பண்ணாம இருக்கிறோம்கிற மன நிறைவும் கிடைக்குது. அதுக்குத்தான் கொஞ்சக் காலத்துக்கு இந்த வார்ச்மேன் வேஷம் புரியுதா? என்றார் தங்கராசு.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 290

Search for people, places and things Nagendram Home

பாத்திமா மொஹமட்





மெரினா அந்தோனிப்பிள்ளை




மது மதுசன்

இரண்டு காதலர்கள் பைக்கில் பயணித்தனர்... அது அதிவேகத்தில் சென்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அவன் அவளிடம் சொன்னான் , இந்தா என்னுடைய கெல்மற்றை நீ அணிந்து கொள் என்று...! அவளும் அதை வாங்கி அணிந்து கொண்டாள்...!

ஆனால் அடுத்த நாள் செய்தி பேப்பரில் "இரண்டு பேர் பயணம் செய்த பைக், லொறியில் மோதியதில் ஆண்பலி. பெண் கெல்மற் அணிந்து கொண்டதால் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினார்"... அவளோ அவனுடைய கல்லறைக்கு முன்பு நின்று கண்ணீர் விட்டு மூச்சுத்திணறத்திணற அழும் போது அவள் தெரிந்து கொள்ளாத ஒன்று...




"வேகக்கட்டுப்பாட்டை இழந்தது மட்டுமல்லாமல் பைக்கின் பிரேக் உடைந்திருந்ததும்"....! இதை அறிந்து தான் அவன் தன் உயிரை பொருட்படுத்தாமல் தன் காதலிக்கு கெல்மற் கொடுத்திருக்கிறான்.

திவ்யா கருணாகரன்



முன்ன எல்லாம் தண்ணி லொறி வந்த உடனே குடத்த தூக்கிட்டு ஓடினோம்...

இப்போ எல்லாம் கரன்ட் வந்த உடனே சார்ஜர தூக்கிக்கிட்டு ஓடுறோம்...



கிரு கிருஜிகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் காதுகளைத் திருகிய மோடி

இக்கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் ஊடாக இந்தியா நிறைவேற்றியதன் மூலம், இந்தியாவுக்குப் பாடம் கற்பிக்கலாம் எனக் கருதும் தென்னாசியத் தலைவர்களுக்கு இந்தியா நல்லதொரு பாடத்தைக் கற்பித்துள்ளது.

***இவ்வாறு 'சிலான் ருடே' ஆங்கில நாளிதழில், எழுதியுள்ள செய்தி ஆய்வில் 'உபுல் ஜோசப் பெர்னான்டோ' குறிப்பிட்டுள்ளார்.***

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது வடக்கு மாகாணத்திற்கு சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரியிருந்தார்.

இதன் பின்னர், இந்திய மத்திய அரசாங்கமும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி நிர்வாகமும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரியிருந்த போதிலும் இதனை மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தட்டிக்கழித்தது.

இதற்கு முன்னர் பிரதமர் நரேந்திரமோடி இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்ற கையோடு வடக்கு மாகாணத்திற்கு சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு கோரியிருந்தார். ஆனால், மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்க மறுத்துவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதவியிலிருந்து விலகிய பின்னர், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், மீண்டும் இந்தியா தனது கோரிக்கையை முன்வைத்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கு மாகாண ஆளுநராக சிவில் அதிகாரி ஒருவரை நியமித்தார்.

ஆகவே, இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கோ, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கோ அல்லது வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கோ உரித்தான வெற்றியல்ல. இது இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தற்போது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வெற்றிப் பெருமிதத்துடன் சந்தித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கென சிவில் ஆளுநர் ஒருவரை நியமிப்பதில் வெற்றி பெறுவதும் தோல்வியுறுவதும் இந்தியாவின் கைகளில இல்லை. இது தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கையை சுட்டிக்காட்டுகிறது.



தனது பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டுமன்றி இந்தியாவுடன் விரோதத்தை ஏற்படுத்துவதற்காகவும் ராஜபக்ச அரசாங்கம் இக்கோரிக்கையை நிறைவேற்ற மறுத்துவிட்டது. இந்தியாவின் ஆணைகளுக்குக் கட்டுப்பட தான் தயாராக இல்லை என்பதை ராஜபக்ச அரசாங்கம் காண்பித்தது.

இக்கோரிக்கையை சிறிசேன அரசாங்கத்தின் ஊடாக இந்தியா நிறைவேற்றியதன் மூலம், இந்தியாவுக்குப் பாடம் கற்பிக்கலாம் எனக் கருதும் தென்னாசியத் தலைவர்களுக்கு இந்தியா நல்லதொரு பாடத்தைக் கற்பித்துள்ளது. புதுடில்லியில் மோடி- மைத்திரி சந்திப்பானது இந்தச் செய்தியையே வெளிப்படுத்துகிறது.

இந்தியப் பிரதமராக மோடி பொறுப்பேற்றுக் கொண்டபோது, தனது பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தென்னாசியத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்த நிகழ்வுக்கு மகிந்தவும் அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்காக மோடி தென்னிந்தியாவின் அழுத்தத்திற்கும் அதிருப்திக்கும் ஆளாகியிருந்தார். மோடியின் பதவியேற்பு நிகழ்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக தமிழ்நாட்டுத் தலைவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். மகிந்தவால் இந்தியா எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது என்பதை அன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடி நன்கு உணர்ந்திருந்தார்.

எது எவ்வாறிருப்பினும், தனது பதவியேற்பு நிகழ்வுக்கு மோடி, மகிந்தவை அழைந்ததுடன், இந்தியா, தமிழ்நாடு மற்றும் இலங்கைக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான ஒத்துழைப்பையும் கோரியிருந்தார். இருப்பினும், மகிந்த தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பை அசட்டை செய்தார்.

சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களை கொழும்பிற்கு அழைத்ததன் மூலம் மோடியின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டார் மகிந்த.

மகிந்தவை இந்திய இசைக்கு ஏற்ப நடனம் ஆடச்செய்வதற்காக கரட்கள் சிலவற்றை மோடி வழங்குவதை விட, மகிந்தவுடன் இணைந்து ஆடுவதற்கான துருப்புச் சீட்டுக்களை மோடி கொண்டிருக்கவில்லை.

இந்தியாவின் முன்னைய அரசாங்கத்தின் பலவீனமான வெளியுறவுக் கோட்பாட்டின் காரணமாக இந்திய அ[...]ங்கத்தால் மகிந்த அரசா[...]து அழுத்தம் கொடுக்க[...]வில்லை. இது மாத்தி[...]மோடி அரசாங்கத்தி[...]ருந்த துருப்புச் சீட்டாகும்.

அரசாங்கத்தை மோடி பொறுப்பேற்ற போது, ராஜபக்சவின் 'சீனச் சீட்டின்' பாதிப்புக்களை இந்தியா சந்திக்க வேண்டியிருந்தது. மீனவர் தொடர்பான பிரச்சினைகள் ஏறபட்ட போது ராஜபக்ச அரசாங்கம இந்தியாவைக் குறைத்து மதிப்பிட்டதுடன், அதன் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை.

மோடி பதவியேற்றால், உக்ரேயினின் கிறிமியா மீது ரஸ்யா எத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டதோ அதேபோன்ற நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடும் என மகிந்த ராஜபக்ச தனது அமைச்சரவையில் விமர்சனம் செய்திருந்தார்.

'கிறிமியா தொடர்பாக மகிந்த ஏன் கவலை கொள்கிறார்? கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக கூட்டத்தில் உக்ரெய்ன் விடயம் தொடர்பாக மகிந்த குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னர் இந்தச் செய்தி வெளியிடப்பட்டதற்காக வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மீது மகிந்த தனது கோபத்தைக் காண்பித்திருந்தார்.

'புடின் -ஜனுகோவிஜ், மோடி- விக்னேஸ்வரன்' என்கின்ற தலைப்பில் 'சிலோன் ருடே' ஊடகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த விடயமானது 'இதேபோன்று ரஸ்ய அதிபர் புடின் போன்று இலங்கை விடயத்தில் மோடி தலையீடு செய்வாரா?' என்கின்ற தலைப்பில் வெளியிடப்பட்ட 'மௌபிம பத்திரிகையில்' பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிலைப்பாடு தொடர்பாக பீதியடைய வேண்டாம் என அப்போதைய வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மகிந்தவுக்கு ஆலோசனை தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்திய அரசாங்கமும் கொழும்பு அரசாங்கத்தை மாற்றுவதில் தனது மேலான பணியை ஆற்றியிருந்ததாக இந்திய ஊடகம் தற்போது தெரிவித்துள்ளது.

தென்னாசியாவின் கண்களின முன்னால் சோனியா காந்தி அரசாங்கத்தால் அழிக்கப்பட்ட இந்தியாவின் பெருமையானது தற்போது மோடியால் மீளவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையை இந்தியா ஒரு 'மூத்த சகோதரனாக' நோக்கக் கூடாது எனவும் ஆனால் இலங்கையை இந்தியா 'இளைய சகோதரி' போன்று நடத்த வேண்டும் எனவும் முன்னர் ஒரு தடவை மகிந்த 'The Times of India' ஊடகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

'இளைய சகோதரி' இந்தியாவின் ஆசிய எதிரியான சீனாவை 'தென்னாசிய இல்லத்திற்குள்' நுழைவதற்கு அனுமதிப்பேன் என பிடிவாதமாக நின்றபோது, இந்தியா தான் இலங்கையின் 'மூத்த சகோதரன்' என்பதை உறுதிப்படுத்துவதற்கு, மகிந்தவின் காதுகளை மோடி திருகியுள்ளார்.

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 15 பெப்ரவரி 2015 ஞாயிற்றுக்கிழமை, "புது அப்பா" என்றதலைப்பில் உண்மைச்சம்பவத்தைத் தழுவியகதை ஒன்று வெளிவந்தது. இவ்வாரம், சம்பவ விபரிப்புதொடர்பில் பேராசிரியர். தயாசோமசுந்தரம் அவர்களின் நேர்காணல் இடம்பெறுகின்றது. அடுத்தவாரம் நேர்காணலின் மிகுதி வெளிவரும்.






**1. "புது அப்பா" என்கின்ற தலைப்பில் குறித்த சிறுவனின் நிலை, குடும்பத்தின் நிலை என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. சற்றுபுதிய விடயமாக இருக் கின்றது "புது அப்பா" என்ற தலைப்பு. ஏன் அவ்வாறு ஓர் தலைப்பு?**

புது அப்பா என்கின்ற தலைப்பு உள சமூகப் பிரச்சினையுள்ள மாணவன் ஒருவன் தனது உளவளத்துணையாளருக்குச் சொன்னபதிலில் இருந்து எடுக்கப்பட்டது. எங்கள் பிரதேசங்களில்

நடைபெறுகின்ற சமூகப்பிரச்சினைகளை மையமாகக் கொண்ட உண்மைச் சம்பவங்களைத் தழுவியே இந்தவிடயங்களை எழுதுகின்றோம். பெயரையும், இனங்காணக் கூடிய வற்றையும் மாற்றுவது ஏன் என்றால் எமதுதுணை நாடியின் இரகசியத்தன்மையையும், சமூகத்திலிருந்து பாதுகாப்பதற்காகும்.

**2. கோகுலனின் நிலை பற்றி விளக்குங்கள்?**

புது அப்பா என்கின்ற சம்பவ விபரிப்பில் வருகின்ற கோகுலன் என்றசிறுவனின் நிலை தொடர்பில் நாம் பார்த்தோமாயின், குடும்பத்தில் ஏற்பட்டகுழப்பமானநிலை அவனுடைய உள நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், கற்கைச் செயற்பாடுகள் மற்றும் மற்றவர்களோடு அவனுடைய தொடர்பாடல் திறன் என்பவற்றிலும் சிக்கல்களைஏற்படுத்தியுள்ளது. அவனுயை ஊத்தையான ஆடைகள், பாடசாலைக்கு ஒழுங்கின்மை, கற்றலில் பூரண அக்கறையின்மை, மற்றைய மாணவர்களோடு சேட்டை புரிதல் போன்றசெயற்பாட்டு அறிகுறிகள் அவனின் தற்போதையநிலையை புரிய வைக்கின்றன. சிறுவயதிலிருந்து அவனுடைய குடும்பச் சூழ்நிலை, அவனுடைய எதிர் காலம், சிந்தனை வளர்ச்சி, விழுமியங்கள், நம்பிக்கைகள், எல்லாவற்றிலும் நீண்டகாலத்திற்கு பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தப் போகின்றன.

வீட்டுச் சூழலில் ஆரோக்கியமான தாய், தந்தை கட்டமைப்பு இல்லாமற் போவதனால் பிள்ளைக்கு வேண்டியஅன்பு, ஆதரவு, கவனிப்பு என்பவை இல்லாமற் போகின்றன. இதனால் பிள்ளை பாடசாலைக்கு நேரத்துக்குவருதல், ஒழுங்காக வருதல், சுத்தமான ஆடை களை அணிந்துவருதல் என்ற அடிப்படைவிடயங்களைப் பின்பற்றத் தவறுகின்றான். மேலும் அவனின் மன ஒருமைப்பாடு, கவனம், ஈடுபாடு, கற்றல் திறமை, வகுப்பில் பங்குபற்றல் என்பன போன்ற கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப் படுகின்றன. இவ்வாறானநிலையிலிருக்கின்ற மாணவர்களை பாடசாலையில் ஆசிரியர்கள் ஒன்றுக்கு இரண்டு தடவை அன்பாகச் சொல்லி, நல்ல நிலைக்குகொண்டு வரப்பார்ப்பார்கள். ஆனாலும் பிள்ளை அவர்கள் சொல்பவற்றை கேட்காவிடின் அடிபோட்டு விடயத்தை கண்டிப்பினூடாகத் தெரியப்படுத்த எத்தனிப்பார்கள். இந்தவிடயத்தில் பிள்ளைகள் தப்புச் செய்யவில்லை என்பதை அனேகமான ஆசிரியர்கள் புரிந்து கொள்ளமுயற்சிக்கவேண்டும். அந்த மாணவன் ஏன் இவ்வாறு நடந்துகொள்கின்றான்? அவனுடையபிரச்சினைஎன்ன? குடும்பநிலைஎன்ன? பின்னணி என்ன? என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

சரியான தகவல்களை அறிந்து கொள்கின்ற ஆசிரியா ஒருவரால் பிள்ளையை அடிபோட்டு தண்டிக்க முடியாதிருக்கும். அவனுடைய குடும்ப சூழ்நிலைக்கு ஆசிரியர் யாரைத் தண்டிக்க முடியும். இவ்வாறான சூழ்நிலையில் பிள்ளைகள் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பதுதான் உண்மைநிலை.

கோகுலனுக்கும் குடும்பத்தில் தந்தையின் மதுபாவனையும் அதனால் ஏற்பட்டகுடும்பப் பிரச்சினைகளும், வீட்டின் பொருளாதாரநிலையும், தாயின் தேவைகளும் என்று குடும்பமே ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளுகின்றது.

இந்நிலையைச் சமாளிக்கும் திறன் அந்தச்சிறுவனுக்கு இல்லை. ஆனாலும் கோகுலன் விடயத்தில் அதிர்ஷ்ட வசமாக பாடசாலைகளில் உளவளத் துணைக்குப் பொறுப்பாக ஓர் ஆசிரியர் இருப்பது, மாணவர்களின் உளப்பிரச்சினைகளை அடையாளங்கண்டு தீர்ப்பதற்கு வழிசமைக்கின்றது.

ஆயினும் எங்கள் பிரதேசங்களில் சில பாடசாலைகளில் மாத்திரமே உளவளத்துணை ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் என்பதுஏற்றுக் கொள்ளவேண்டியகவலைக்குரிய விடயமாகும்.

கோகுலனின் வகுப்பாசிரியர் தன்னால் அவனுடைய பிரச்சினைகளைக் கண்டறிய முடியாதென்று உளவளத்துணை ஆசிரியரிடம் அனுப்பிவைக்கின்றார். பிள்ளையின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு ஆசிரியர் முயற்சித்துப்பார்க்கின்றார், உளப்பிரச்சினைகளை அடையாளங்கண்டறிகின்றார்.

அதுமட்டுமன்றி பிள்ளையின் தாயைக்கூப்பிட்டுநிலைமைகளை விசாரித்தறிதல் வரைக்கும் குறித்த ஆசிரியர் முயற்சியெடுத்திருக்கின்றார்.


ஆனாலும் தாயின் நிலைமையை ஆராய்ந்து வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு அவருக்குவேண்டிய உளவளத் துணை ஆதரவை வழங்க முயற்சித்திருந்தால் தாயிலும் சிலமாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்பிருக்கும்.

கற்கின்றகாலத்தில் மாணவர்கள் கவனம் சிதறுவது, கற்றலில் நாட்டமின்மை, மூர்க்கமானவெளிப்பாடுகள், அடிதடியில் ஈடுபடல் போன்றஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பின்னணியில் ஏதோஓர் குடும்ப, சமூகப்பிரச்சினை காரணமாக இருக்கலாம்.

பிள்ளைக்குப் பிள்ளை பிரச்சினைகளும் பின்னணிகளும் வேறுபடுகின்றன. அவற்றைஅடையாளங்கண்டு அணுகுவதற்கு ஆசிரியர்கள் முக்கிய உறுதுணையாக இருக்கவேண்டும். அவர்களைஅடிப்பதன் மூலம் தான் திருத்த முடியும் என்றவாதம் ஒருசில ஆசிரியர்களிடம் இருப்பதுண்டு. அவைசிந்தனை, செயற்பாட்டு ரீதியாக மாற்றப்பட வேண்டும்.

(அடுத்த வாரம் தொடரும்)

அடுத்தவாரம்,"புது அப்பா" என்ற சம்பவ விபரிப்பில் கூறப்பட்ட, தாயின் நிலை, தந்தையின் நிலை என்பவை பற்றியும், தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் பல்முகத் தொடர்புகளால் ஏற்படுகின்ற சிக்கல்கள் பற்றியும், அதற்கானகாரணங்களையும் பேராசிரியர் தயாசோம சுந்தரம் அவர்கள்விளக்குவார்.



வாசகர்களிடமிருந்துகேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி:
சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை
கச்சேரிநல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாகஅனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk

Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : சூரியகாந்தி இசை : MS விஸ்வநாதன்
பாடியவர் : TM சௌந்தர்ராஜன்
பாடல் வரிகள் : கண்ணதாசன்



பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்யமா - யாரும்
இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்யமே... கருடன் சொன்னது... அதில்
அர்த்தம் உள்ளது...

உயர்ந்த இடத்தில் இருக்கும் போது
உலகம் உன்னை மதிக்கும் உன்
நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் கூட மிதிக்கும்
மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று
மானமுள்ள மனிதருக்கு ஔவை சொன்னது அது
ஔவை சொன்னது... அதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்யமா - யாரும்
இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்யமே... கருடன் சொன்னது... அதில்
அர்த்தம் உள்ளது...

வண்டி ஓட சக்கரங்கள் இரண்டு
மட்டும் வேண்டும் அந்த
இரண்டில் ஒன்று சிறியதென்றால்
எந்த வண்டி ஓடும்
உனைப் போலே அளவோடு உறவாட வேண்டும்
உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் உறவு கொள்வது
அது சிறுமை என்பது... அதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்யமா - யாரும்
இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்யமே... கருடன் சொன்னது அதில்
அர்த்தம் உள்ளது...

நீயும் நானும் சேர்ந்திருந்தோம் நிலவும்
வானும் போலே நான்
நிலவு போலத் தேய்ந்து வந்தேன் நீ வளர்ந்ததாலே
என்னுள்ளம் எனைப் பார்த்து கேலி செய்யும் போது
இல்லாதான் இல்வாழ்வில் நிம்மதி ஏது
இது கணவன் சொன்னது... இதில் அர்த்தம் உள்ளது

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்யமா யாரும்
இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்யமே... கருடன் சொன்னது அதில்
அர்த்தம் உள்ளது...

**SMS மூலம் இப்பாடலை விரும்பியவர் : S.கருணாகரன் (தாழையடி)**

**அன்பு வாசகர்களே !**

**காலத்தால் அழியாத கானங்கள்** பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் உங்கள் பெயர் முகவரி என்பனவற்றைக் குறிப்பிட்டு, ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப் பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# சிலம்பாட்டம்

சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும்.

சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொள்ளக் குறைந்தது ஆறு மாத காலம் தேவை. இதற்கென சிலம்பாட்டக் கழகங்கள் பல உள்ளன. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும்.

நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர், தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலாரும் சிலம்பாட்டத்தைக் கற்று விளையாடி வருகின்றனர். திருவிழா, கோயில் விழாக்கள், மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம் பெறும்.

**பொது நலம் மற்றும் மருத்துவ பயன்கள்**

பயிற்சியாளர் அல்லது சிலம்பம் மற்றும் காய் சிலம்பம் (குத்துவரிசை) போன்ற தசை விரைவு மற்றும் வளைந்து கொடுக்கும் தன்மை, கை மற்றும் கண்களின் ஒருங்கிணைப்பு, கால் மற்றும் கண்களின் ஒருங்கிணைப்பு, உடல் சமநிலை, தசை ஆற்றல், வேகம், தசை வலிமை மேம்படுத்த சுகாதார நலன்கள் பெறும் வழக்கமான பயிற்சி, தசை வலிமை என்பனவாகும்.

**வரலாறு**

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக்கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும் கலையாக வளர்ந்துள்ளது என்பர். தமது கைகளில் எப்போதும் இருக்கக் கூடிய சிறிய ஆயுதங்களான கம்பு (தடி), சிறு கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி விலங்குகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ள இந்தக் கலையைப் பயன்படுத்தினர்.

தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்புக் கலையாக வளர்ச்சி பெற்றது. ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் "சிலம்பு" ஆகும். முற்காலத்தில் இக்கலையை வீர மறவர்கள் பயன்படுத்தினர். தற்போது இது ஒரு சில பாடசாலைகளிலும், தனியார் அமைப்புகளாலும் கற்றுத் தரப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளில் வீர விளையாட்டாகவும் இடம்பெறுகிறது.

சிலம்பச் சுவடிகளில் குறிப்பிடப்படும் தொன்மையான சிலம்பச் சுவடு மற்றும் அடி வரிசைகள், தமிழக மூவேந்தர்களின் ஆட்சி முடிவுற்று, தமிழகம் அந்நியர்களுக்கு அடிமைப்பட்ட பின் கால மாற்றத்தால் அதன் பெயர்களும் ஆடும் முறைகளும் சிறு மாற்றமடைந்தன. வடக்கன் களரி, தெக்கன் களரி, சுவடு அடி முறை, கர்நாடகச் சுவடு, சிரமம், சைலாத், தஞ்சாவூர் குத்துவரிசை, நெடுங்கம்பு, என்ற பெயர்களில் இன் றும் தமிழகம் மற்றும் கேரளா உள்ளிட்ட பகுதிகளில் ஆட்டப்பட்டு வருகின்றன.



# ஈழத்து கவிஞர்கள் வரிசையில் ...



கவிஞர்
நீலாவணன்

## தமிழே எழுவாய்!

என்று நீ பிறந்தாய் எனவுனை யாரும்
எழுதிவைத் திலரினி எழுதவு மொண்ணா
அன்றுனை வளர்த்த அருந்தமிழ்ப் பாவலர்
அழிந்தனர் நீயோ அமர்ந்திருக் கின்றாய்
இன்றுனை யழித்திட இதயமில் லார்கள்
இயற்றுகின் றாரடி புதுப்புது வழிகள்!
நன்று நன்றெனவே நகைத்தெழு தாயே
நானதைக் கண்டுள நலிவொழிந் திடவே !

கன்னலென் றுபாற் கடலினிற் கடைந்த
களிதரு அமுதெனக் கனியெனத் தேனென
மன்னிய மலைதவழ் மாருத மெனவும்
மதியென மணமிகு மலரெனப் போற்றி
முன்னுனைக் காத்த மூவரும் புகழ்ந்தார்!
முழுதுமுன் வாழ்வென முயன்றவ ருழைத்தார்
அன்னதெல் லாமின் றழிந்ததோ உவமையில்
அழகியே! அறிவிலார் தமைச்சினந் தெழுவாய் !

உயிரினும் பெரியதிவ் வுலகினி லிலையெனு(ம்)
உண்மையைத் தெரிந்தனர் உயர்வு கொள்புலவோர்
உயிரென உலகினி லுனையவர் மதித்தார்
ஊறுகள் நேர்ந்திடி னுருத்துவ னெழுந்தார்
மயிரிழந் திடினும் வாழ்ந்திடாக் கவரி
மானனை யாய்தமிழ் மாதர சேபசுந்
தயிரிலே வெண்ணெயாய்த் தமியனி னுளம்வாழ்
தையலே தமிழே! தருக்கிநீ எழுவாய்.

வள்ளுவ னுளத்தினில் வாழ்ந்தனை கம்பன்
வாயிலும் இளங்கோ வாசகந் தனிலும்
கள்ளமில் சங்கக் கவிகளின் கருத்தாம்
காப்பியங் களிலுமே கன்னிநீ வாழ்ந்தால்
கொள்ளையர் மொழிவெறி கொண்டலை கின்ற
கொடியவர் தமக்கார் மறுமொழி புகழ்வார்
வெள்ளமே கவிதை விரைந்தெனக் கருளும்
வேதமே தமிழே வீறுகொண் டெழுவாய்!

# சிறுவயதில் இரண்டாம் மொழி


சிறு வயதிலேயே இரண்டாம் மொழியை கற்பதன் மூலம் நீண்ட அறிவாற்றலை அதிகரிக்க முடியும் என்றும் 10 வயதிலிருந்து கற்பதன் மூலம் மட்டுமே அதன் பயனை பெற்றுக்கொள்ள முடியும் என்று புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிறுவயதில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்கும் சிறுவர்களின் மூளையின் வெண்ணிற பகுதி விருத்தியடைவதாகவும் அது அவர்களது அறிவுத்திறனை அதிகரிக்க உதவும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆராய்ச்சியானது பிரிட்டனில் வாழும் 30 வயதுக் குட்பட்ட 20 பேரிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 வயதிலிருந்தே ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக பயின்று வருகின்றவர்களையும் ஆங்கிலத்தை முதன்மைமொழியாக பயின்று வருபவர்களையும் ஒப்பிட்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உளவியலுக்கான பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கிரிஸ்டோஸ் பிளஸ்டிகாஸ் என்பவரை தலைமையாக கொண்ட குழுவினரால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒருமொழியை விட மற்றைய மொழியை கூடுதலாக கற்கும் போது, மூளை விருத்தியடையும் பகுதியின் அறிவாற்றல் தூண்டப்படும். இந்த தூண்டுதல் சிறுவயதிலிருந்தே ஏற்படுமாயின்,



அதன் நிலைப்பாடு நிலையாக இருக்கும் என்று பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு 10 வயதின் பின்னர் ஆங்கிலத்தையோ வேறு மொழிகளையோ இரண்டாம் மொழியாக கற்போர்,ஆங்கிலத்தை முதன்மை மொழியாக கற்போரையும், இளைஞர் பருவத்தில் ஆங்கிலம் கற்போரையும் விடமிகவும் திறமையுடன் செயற்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக இன்னுமொரு ஆராய்ச்சியை மேற்கொள்ளப் போவதாக, ஆராய்ச்சியை மேற்கொண்ட பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பன் என்ன செய்கின்றான்?

யாழ் தர்ஷி



நமது வாழ்வில் நட்பு நிழல் போல நம்மைத் தொடரும் உறவாகும். நண்பா என்று ஆரம்பிக்கும் போது நாம் எதையும் தொடங்கிய புள்ளியிலிருந்து முடித்து விடுவோம். மற்ற உறவுகளைவிட நட்புக்கு ஆற்றல் அதிகம். நீ உன் வாழ்வில் நண்பர்களை சம்பாதித்திருக்கிறாயா? அவர்கள் எப்படி உன்னோடு, உன்னுடைய நண்பன் உனக்கு நண்பனா? அல்லது உன் ஆற்றல்களை அழித்து விடும் அறியாமைகளுக்கு நணபனா? பாத்துக்கொள். அறிஞர்கள் சொல்வார்கள்: “நண்பனுடன் பகிர்ந்து கொள்ளும் வெற்றிச் செய்தி மனதுக்கு இரட்டிப்பு சந்தோசத்தைத் தருகின்றது. அதேபோல் நண்பனுடன் பகிர்ந்து கொள்ளும் துக்கச் செய்தி நமது துயரத்தை பாதி குறைத்துவிடும். தன் மனதுக்குள் உன் காயங்களை ஏற்றுக் கொண்டு ஆயிரம் மருத்துவர்கள் செய்கின்ற வேலையை ஓர் நல்ல நண்பன் செய்துவிடுவான். உன் நண்பன் ஆள் எப்படி? உன் வாழ்க்கையின் உயர்வுகளுக்கு ஏணிப்படிகளாய் இருக்கின்றானா? இல்லை ஏறவிட்டு ஏணியைத் தட்டிவிடுகின்றானா? கவனித்துப்பார் ! படிகளாய் இருக்கும் நண்பர்கள் பற்றி உனக்குச் சொல்லட்டுமா? உலகப்புகழ் பெற்ற கார்ள்மாக்ஸ் பற்றி அறிந்திருப்பாய் அறிந்திருக்க வேண்டும் நீ!, அவரது நூல்களை அச்சிட்டு அவரது புகழை உலகறியச் செய்தவர் பிரெட்ரிக் என்ற அவரது நணபன். புகழ் பெற்ற இந்தியக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கவிதைகளை உலகறியச் செய்து நோபல் பரிசும் பெற்றுக் கொள்ள காரணமானவர் அவரது நண்பன் யேட்ஸ். ஏன் எங்கள் சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை உலகத்துக்கு கொண்டு வந்தவர் அவருடைய பள்ளித் தோழர் சோமசுந்தர பாரதியார். தனது நண்பனின் வாழ்வின் உயர்ச்சிக்காகவும் நல்வழிக்காகவும் பாடுபட்டவர்கள் இவர்கள்.

உயிர் நண்பன் என்று சொல்லிக் கொள்ளும் உன் நண்பன் இவர்களில் எந்த வகை என்று யோசி !

தம்மோடு நல்ல நண்பர்களை வைத்திருக்காதவர்கள் வரலாற்றில் பெரும் புகழ் பெற்றிருந்தாலும் வஞ்சகத்தின் சூழ்ச்சியால் திசைமாறியதும் உண்டு. அதில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட யேசுநாதர், நச்சுக் கோப்பையில் விஷமூலிகை அருந்தி இறந்து போன சோக்கிரட்டீஸ், புரட்சியின் மூலம் உலகை அறியவைத்த லெனின், கொலைஞனின் துப்பாக்கிக்கு இரையாகிய மகாத்மா காந்தி என்று பலர் இறக்கும் போது நல்ல நண்பர்களை வைத்திருக்கவில்லை. நல்ல நண்பன் நம்மைக் காட்டிக் கொடுக்க மாட்டான். நம் ஆற்றல்களை திசைதிருப்பி விடமாட்டான். அறிவுப்பாதையில் அறியாமை என்னும் மாயைக் கற்களை நிரப்பமாட்டான். திக்கற்று நிக்கும் போது உன்னை சாக்கடைக்குள் தள்ளிவிடமாட்டான். புரிதலின் அடிப்படை புரியப்பட்டு தேவையற்ற கொள்கைப் பிடிப்புக்கள் எதுவுமின்றி, உடன்படிக்கைகள், ஒத்திகைகளின்றி, எதிர்பார்ப்புக்கள் என்றால் என்னவென்றே தெரியாத தூய நட்பு உனக்கு உன் வாழ்வில் கிடைத்ததா? ஆம் என்றால் நீ இன்றைக்கு வாழ்வின் உயரத்திலிருப்பாய் ! இல்லை என்றால் என்ன செய்வது நீ சில வேளைகளில் வீட்டருகிலிருக்கின்ற சந்தியில் நின்று நாளாந்த புதினம் கதைத்துக் கொண்டு காலங் கழித்துக் கொண்டிருப்பாய்.

“உன் நண்பனைக்காட்டு உன்னைப்பற்றிச் சொல்கிறேன்” என்ற பொன் மொழியைக் கேள்விப்பட்டிருக்கின்றாயா?

உன் நண்பன் உன்னைக் காட்டித்தருவானா சமூகத்துக்கு. நட்பின் கையில் உன் வாழ்க்கை களிமண்ணைப் போன்றது. அது சோறு சமைப்பதற்கு அழகிய பானையையும் வனைந்து தரும். சுடலைக் காடடில் உடைத்தெறியக் கூடிய முட்டியையும் வனைந்து தரும்.

நண்பன் சொல்லிட்டான் செய்தே ஆகணும் ... நண்பேன்டா” என்று நீ அதிகம் உச்சரிப்பதை பாத்திருக்கிறேன். ஒரு வேளை அவன் எதிர்காலத்தில் போதை வஸ்துக் கடத்தல்காரர்களை பிடிக்கும் பெரிய அதிகாரியாக வரவேண்டிய உன்னை குடிகாரனாக்கிவிடுவான். மிகப் பெரிய கவிஞனாக வேண்டிய உன்னை சில வேளை காதல் பித்தனாக்கி விடுவான். ஊரைக்காக்கும் காவல்துறை அதிகாரியாக வரவேண்டிய உன்னை கையில் வாளுடன் அலைய விட்டுவிடுவான். கவனம்! ஆக்கலும் அழித்தலும் நட்புக்குள் இரண்டும் இருக்கிறது பிரித்தறிந்து கொள்! பார்த்து நடந்து கொள்.

நண்பன் வெற்றி பெறும் போது “அவன் என் நண்பன் என்று பெருமை கொள்” தோற்றுவிடும்போது “நான் உன் நண்பன்” என்று தேற்றிவிடு.

# தாலப்புல் என்பது பனை ஓலை

மகாதேவா இராம கிருஷ்ணன் ஆச்சாரி (கொழும்பு - 13)



தாலப்புல்லின் வால் வெண் தோட்டு

கைவன் மகடு உக்கவின் பெறப்புனைந்த

செய்வினை தவிசிற் செல்வன்

என்று தொடங்கி

குமரி வாலையின் குருந்தகம் விரித்து அமுது உண்க அடிகள் ஈங்கு என ...

(தாலம் - பனை)

“தாலப்புல்” என்பது பனை ஓலை இதனைக்கொண்டு இழைக்கப்பட்ட பாய்களை தடுக்கு என்பார்கள்.

இப் பாய்களில் சிறிய பொருட்களை பொதிகளாகவும் எடுத்துச் செல்வார்கள் இப் பொதியை உமல என்றும் சொல்வர்.



ஐம்பது, அறுபதை கடந்து வாழ்பவர்களுக்கு இது புரியும். இது தான் தவிசு, தடுக்கு என்றும் சொல்வர் இன்றைக்கும் இப் பனை ஓலையில் வண்ணம் தோய்த்து நிறம் ஊட்டி பெண் மணிகள் தடுக்கு - கொட்டான் (பனங்கருப்பட்டியை இக் கொட்டானில் அடைத்து பாது காத்து) விற்பனைக்குத் தந்து தமது கைத்திறனை வெளிப் படுத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தில் பொற் பணியாளர்கள் (பொற்கொல்லர் - Gold Smith) தங்களது பட்டறையில் இத்தடுக்கில் அமர்ந்து தொழிலை மேற் கொள்வர்.

அது மாத்திரமன்றி தங்களை நாடிவரும் வாடிக்கையாளர்களையும் இத் தடுக்கில் அமரவைத்து உபசரிப்பார்கள். அப்படியான ஒரு தடுப்பில் 'அமர வைத்தே மதுரை மா நகரில் கோவலனுக்கு உணவு பறிமாறினாள் கண்ணகி என்பதை சரித்திர இலக்கியங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

பண்டை காலத்தில் தாலம் பனை பனை ஓலையால் செய்த ஒன்றை மணமகள் கழுத்தில் கட்டியதால் இதற்கு தாலி என்று பெயர் வந்தது. (தாலம் ஆகிய பொருளில் இருந்து செய்தது என்று பொருள்) பனை ஓலை அடிக்கடி பழுது பட்டதால் கயிற்றில் மஞ்சள் தடவி தாலியாக அணிவித் தார்கள்.

நாளடைவில் தம் வாழ் நாளில் நிரந்தரமாக இருக்க உலோகத்தால் (தங்கப் பவுண்) தாலி செய்து பயன் படுத்தினர்.

அதனை பொன்னால் செய்து பொற்றாலியாக்கினர். பொற் பணியாளர்கள் பல வடிவங்களில் இதனை நமக்கு தருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் புன்னகை என்ன விலை ?



க.கணேசலிங்கம்

" நான் ரகசியங்களின்
ரசிகன்,
அதனால் தான் புதிர்களை
அவிழ்க்கப் புன்னகை
பூக்கிறேன்.".
- மு.மேத்தா

புன்னகை எங்கள் வாழ்க்கையை செழுமைப் படுத்த உதவுவதோடு, நாம் தொடர்பு கொள்ளும் மற்றவர்களின் வாழ்க்கையையும் செழுமைப் படுத்த உதவுகிறது.

"A smile can enrich our own lives and the lives of those with whom we come into contact".

புன்சிரிப்பு முகமலர்ச்சியான, அர்த்தமுள்ள, ஆழமான அன் பின் வெளிப்பாடு. மற்றவரை ஆதரித்து அவர் பால் அக்கறை கொண்டு, அவர்களது மனச் சுமையைக் குறைத்து ஆறுதல் தர உதவுகிறது. மனிதனுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள ஒரு ஒப்பற்ற வரப்பிரசாதம் இந்தப் புன்னகை.

"It is a meaningful expression of warm, deep, loving concern for another, something that is given to man alone to help him to reduce another man's burden."

பல பிரச்சினைகளை சரிப்படுத்தி சீர்ப்படுத்தி நல்ல தீர்வை ஏற்படுத்தக் கூடிய ஒரு சின்னவளைவு (Little Curve) இந்தப் புன்னகை. புன்னகையின் சிறப்புகளை சீர் தூக்கி ஆராய்ந்தவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இவை,

"அன்பின் வரவேற்புரை புன்சிரிப்பு, அவசர உலகின் இடைக்கால நிவாரணி இந்த புன்சிரிப்பு"

"இதோ எந்தன் தெய்வம்
முன்னாலே நான் ஒரே
யொரு புன்னகையில்
கண்டேனே,
பாசமுள்ள பார்வையிலே
கடவுள் வாழ்கிறான்,
அவன்

கருணை உள்ள உள்ளத்திலே கோயில் கொள்கிறான்..." திரைப்பட பாடல் ஒன்றும் இவ்விதம் புன்னகையின் பெருமைபற்றி எடுத்துக் கூறுகிறது.

" பவளக் கொடியில்
பழுத்த செவ்வாயும்
பனிமுறுவல்
தளத்திருநகையும்..."

என்று அம்மையின் புன் முறுவல் பற்றி அழகுபடக் கூறினார் அபிராமிப்பட்டர் தமது அபிராமி அந்தாதியில்.

" பனிமதி முகத்திலே
நிலவயை புன்னகை பரப்பி
ஆர்த்தார்த் தெழுத்து
மடலவிழு மலரயை
கைவிரித்துக் கூப்பி வானேய
வானிலின்ப மழையே,
மழைத்தாரை வெள்ளமே,
நீடூழிவாழி ..."

என இறைவனை வாழ்த்திப்பாடுகையில் இராமலிங்க சுவாமிகள் எடுத்துக் கூறினார்.

" குனித்த புருவமும்
கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும் ... "

கண்டால் இந்த மனிதப் பிறவியும் வேண்டுவதே என்று தமது தேவாரத்தில் பாடினார் திருநாவுக்கரசர்.

" பொங்கிவரும் புதுநிலவு
போன்ற ஒளிமுகமும்
புன்னகையின் புதுப்
பொலிவும் போற்றவரும்
தோற்றம் ..." என்றும்
" சோலை மலரொளியோ
உனது சுந்தரப் புன்னகை
தான்..." என்றும் அழகுடன்
கூறிய பாரதியார் -

" ஆற்றங்கரை தனிலே
தனியானதோர் மண்டப
மீதினிலே தென்றல் காற்றை
நுகர்ந்திருந்தேன் கன்னி
கவிதை கொணர்ந்து
தந்தாள், ஏற்று மன மகிழ்ந்தே
அடி, என்னோடிணங்கி மணம்
புரிவாய் என்று சாற்றிய
போதினிலே விழிக்
கோணத்திலே நகை காட்டி
மறைந்து விட்டாள் "

என்று புன்னகையை வேறு ஒரு கோணத்தில் வேடிக்கை கலந்து காட்டுகிறாள்.

" நான் என்ன சொல்லி
விட்டேன், நீ ஏன் மயங்கிறாய்?
சம்மதம் கேட்டேன், ஏன் தலை
குனிந்தாயோ? செம்மாம் பழம்
போலே கன்னம் சிவந்து
விட்டதெடி, முகம் மாறி
விட்டதடி..."

திரைக்கவிஞன் ஒருவரும் இவ்விதம் வேடிக்கை காட்டுகிறார்.

" நகை, ஈகை, இன்சொல் இகழாமை..." என வகைப்படுத்திய வள்ளுவர் புன்னகையை நோக்கும் விதம் இவ்வாறு அமைந்துள்ளது.

" முகை மொகுக்குள் உள்
ளது நாற்றம் போல் பேதை
நகை மொக்குள் உள்ளது
ஒன்று உண்டு ..." - 1274

அரும்பு தோன்றும் போது அடங்கியிருக்கும் நறுமணம் போல,

புன் முறுவலின் தோற்றத்தில் அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உள்ளது.

என்றவர் மற்றுமொரு குறளில்

" அசை இயற்கு உண்டு
ஆண்டு ஓர் ஏ எர் யான்
நோக்கப் பசையினள் பைய
நகும்" 1098

யான் நோக்கும் போது அதற்காக அன்பு கொண்டவளாய் மெல்லச் சிரிப்பாள், அசையும் மெல்லிய இயல்பை உடைய அவளுக்கு அப்போது ஓர் அழகு உள்ளது என்றார்.

அவரது " மெல்ல நகும்..." (1094) என்று வரும் குறளும் புன் சிரிப்பை வரவழைக்கிறது.

" அவள்
மெல்லச்
சிரித்தாள், ஒன்று
சொல்ல
நினைத்தாள் ... "

என்ற திரைப் பாடல் இவற்றைத் தழுவி மெருகூட்டி நிற்கிறது.

" ஒரு பூ
மழைதான்
இங்கு
பொழிகிறது, நீ
புன்னகை
புரிகையிலே

இவ்வித திரைப்பாடல்களும் புன்னகைக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.



" பூத்துக் குலுங்குகின்ற
புன்னகையை நான்
பார்த்துப் பசியாற
வேண்டும்..."

"பொங்கிவரும்
புன்னகைக்கு
குறைவிருக்காது, அதை
பொழுதெல்லாம்
பார்த்திருந்தால் பசி
எடுக்காது... "

"பவள வாயில் புன்னகை
சிந்தி கோல மயில் போல்
நீவருவாயே
கொஞ்சும் கிளியே
அமைதிகொள்வாயே..."
"புள்ளி மயில்
புன்னகையில் என்ன
[illegible]

"கடுகடுவென முகம்
மாறுதல் கர்நாடக
வழக்கமன்றோ?
கன்னியர்கள் ஆடவரை
புன்னகையால் வென்றிடவே
பழகத் தெரிய வேணும்,
உலகில் பார்த்து நடக்க
வேணும் ..."

பாடலின் ஆரம்ப வரிகள் எல்லோருக்குமே பொதுவான ஆலோசனையாகவே தோன்றுகிறது.

"இணையில்லா
மனையாளின்
வாய்மொழியே இன்பம்,
அவள் இதழ்சிந்தும்
புன்னகையே அளவில்லாத
இன்பம் ..."

"பொங்கிவரும்
புன்னகை போதும், நம்
புது மணத் திருநாள்
காணும்..."
"புன்னகை தவழ்
பூங்கொடியோ புவன
சுந்தரியோ? வதனமே சந்திர
விம்பமோ? மலர்ந்த
சரோஜமோ...? "

(எம்.கே.தியாகராஜனின்) அற்புதமான பாடல்களில் இதுவும் ஒன்று.

இன்னும் சொல்லவோ,
சுகம் அல்லவோ...
"மோகனப் புன்னகை
ஏனோ? அநுராகத்தின்
இன்னிசை தானோ?.."

"சித்திரம் பேசுதடி உன்
சித்திரம் பேசுதடி, முத்துச்சரம்
போலே மோகனப் புன்னகை
மின்னுதடி ..."
மோகனப் புன்னகையில்
ஓர் நாள் மூன்று தமிழ்
படித்தேன்..."
" இந்தப் புன்னகை என்ன
விலை?.." நல்ல கேள்வி.
புன்னகை சிந்தும்
மந்திரமோ?
"நீலவான் ஆடைக்குள்
உடல் மறைத்தே நிலவென்று
காட்டுகிறாய்
ஒளிமுகத்தை, கோல
முழுதும் காட்டி விட்டால்
காதற் கொள்ளையிலே
இவ்வுலகம் சாமோ?.., நீதான்
வானச் சோலையிலே பூத்த
தனிப் பூவோ?
சொக்க வெள்ளிப்
பாற்குடமோ
அமுத ஊற்றோ?.." என்று

கேட்டார் பாரதிதாசன்.
"பூரண நிலவோ
புன்னகை மலரோ?.." என்று
வியக்கிறார் திரைக்
கவிஞர்.
"மோகனப் புன்னகை
வீசிடும் நிலவே மேகத்திலே
நீயும் மறையாதே, பாலுடன்
தேனுமே கலந்தது போலவே
சாகசமே நீயும் புரியாதே..."

அமுதைப் பொழியும்
நிலவே நீ அருகில்
வராததேனோ...? புது மலர்
வீணே வாடி விடாமல்
புன்னகை வீசி ஆறுதல் கூற
அருகில் வராததேனோ?..

"பூரண நிலவின் தோரணம்
ஏனோ புன்னகை புரிகிறது?
அது காரணம் பாதி காரியம்
பாதி கதையாய் வருகிறது..."

திரைக் கவிதைகளில் புன்னகை கதை கதையாக வளர்ந்து வருகிறது.

" சிங்காரப் புன்னகை
கண்ணாரக் கண்டாலே
சங்கீத வீணையும்
ஏதுக்கம்மா...?

" சின்ன சின்ன
கண்ணனுக்கு என்னதான்
புன்னகையோ?
கண்ணிரண்டும் தாமரையோ?
கண்ணா மின்னும்" உந்தன்
கன்னம்...
பொல்லாத புன் சிரிப்பு,
போதும் போதும்
உன் சிரிப்பு,
யார் வீட்டுத் தோட்டத்திலே
பூத்ததிந்த ரோஜாப்பூ?.."

இவ்விதமெல்லாம் புன்னகை பற்றி அழகழகான கேள்விகள், வேடிக்கை கலந்த பதில்கள் இந்த திரைக்கவிதைகளில். மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் வளமான வசீகர வார்த்தைகள், அமுதமயமான வார்த்தைகள்

மேலும், ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட கோணங்களில் இதமாக, சுவையாக, ரசித்து, ரசிக்க வைத்துள்ளார்கள், பரவசப்படுத்தியுள்ளார்கள், இந்தப் புன்னகையை மனதிலே நிம்மதி, மலர்வதோ புன்னகை..."

" மெல்லச் சிரித்தாலென்ன
இதழ் விரித்தாலென்ன" சரி,
இந்தப் புன்னகைக்கு என்ன
தான் விலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை வேந்தன்

## சிறு கதை

வைகறையில் துயிலெழுந்து, வாழ்வு தந்த பெற்றோரை எண்ணி வணங்கி, காலைக் கடன் முடித்து, மூச்சுப்பயிற்சி, மனப் பயிற்சி, யோகாப்பயிற்சி முடித்து, நேற்று நூலகத்தில் எடுத்து வந்த புத்தகம் வாசித்து என, எனது வழமையான பணிகள் முடித்தேன். சூடுபறக்கும் பாலில் கடுக்காய்,நெல்லி,நாவல் விதைகளின் தூள் கலந்து எடுத்து வந்து இதமான அன்புடன் தந்தாள் மனைவி, எனக்கீடாகப் படித்திருந்தும் என்பணிகளைத் தன் பணிகளாக்கி மகிழ்வதில் அலாதிப்பிரியம் அவளுக்கு. சில விடயங்கள் இன்னும் நாய் வால் போல வளைந்தபடிதான்.

நிமிர்த்தவே முடியாது. நிமிராது. குளித்து வழமைபோல நூல் வேட்டி சட்டை அணிந்து, அலுவலகம் செல்லப் புறப்பட்ட வேளை, சாப்பிட்டு விட்டுப் போகலாம். சாப்பாடு தயார் என்று வந்தாள் முகத்தில் மகிழ்ச்சி பொங்க. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். ஆனால் தவமிருக்காமல் நான் பெற்ற வரம் இவள். கோவைகள் அடங்கிய பையை எடுத்துக்கொண்டு படியிறங்கிய வேளை, மாலை வரும்போது, மறக்காமல் மரக் கறிகள் வாங்கி வாருங்கள் என்றனுப்பி வைத்தாள் வாசல் வரை வந்து. யார் கற்றுக் கொடுத்ததோ எங்கிருந்து பெற்றுக் கொண்டாளோ. இதுதான் தமிழர்களின் குடும்ப நலப் பண்பாடோ என உள்ளம் மகிழ எண்ணியவாறு அலுவலகத்தில் இருந்தேன். அன்றைய தினசரிகளையும், கடிதங்களையும் மேசையில் வைத்துச் சென்றான் அலுவலக உதவியாளர். சங்கொலி என்னும் நாளிதழின் மேல் நிலையாளன் நான்.

தினசரித்தாள்களை மேலோட்டம் விட்டபின், கடிதங்களைப் பார்த்த வேளை முத்து முத்தாக அழகிய தமிழ் எழுத்தில் பத்திரிகை அலுவலக முகவரியிடப் பட்ட கடிதம் எனது கவனத்தை ஈர்த்தது. ஆவலுடன் பிரித்தேன். வறுமை காரணமாய் பாடசாலைக்கல்வியை இடை நிறுத்தியதாயும், நல்ல புலமையும் கவிவடிக்கும் திறமையும் உள்ளதாயும், யுத்தத்தின் வெடிச்சத்தங்களால் காது கேட்கும் திறன் இழந்து விட்டதாயும், ஆனால் உதட்டசைவு கண்டு எவையும் அறிந்து கொள்ள முடிவதாயும், பெற்றோரைப் பராமரிக்க வருமானமின்றியிருப்பதாயும், இலவசமாய் எதையும் பெறவிரும்பாமையாலும் குறைந்தது பதினைந்தாயிரம் ரூபாவில் ஒரு வேலை தரமுடியுமா? என்றொரு விண்ணப்பம். எங்கே என்ன, சும்மா யார் தருவார் என்று திரியும் மக்களிடையே இவ்வாறான இயல்பில் ஒருவரா? என்று எண்ணியபடி விபரங்களைப் படித்தேன்.

முல்லைவேந்தன் என்ற இருபத்தாறு வயது இளைஞனை, காது கேட்காத காரணத்தால் அறியும் ஆவலுடன் கண்களை அகலவிரித்து நோக்கும் இளைஞன் ஒருவனை என் மனக்கண் முன் கொண்டு வந்தேன். கம்பீரமாகத்தான் இருந்தான். கடிதம் எழுதி இவரை வரவழைக்க ஏற்பாடுகள் செய்துவிட்டு எனது பணிகளில் மூழ்கிப்போனேன். இரண்டு , மூன்று நாட்கள் வழமையான, உயிரோட்டம் மிகு பத்திரிகைப் பணியில் இவரைச் சுத்தமாக மறந்தே விட்டேன்.

அன்றொரு செவ்வாய்க் கிழமை உள்ளே வரலாமா என்றவாறு ஒரு இளைஞன் தூய வெண்ணிற வேட்டி சட்டை அணிந்து தோளில் ஒரு பை



தொங்க எதையும் உள் இழுக்கும தீட்சண்யமான பார்வையுடன் அலுவலக வாசலில் கம்பீரமாக நின்றான். என் மனக் கண்முன் தோன்றிய இளைஞன் என் அலுவலக வாசலில் நின்றது எனக்குப் பேரதிசயமாகவே தோன்றியது.

வாருங்கள். இருக்கையில் இருங்கள் என்றேன். ஐயா, நான் முல்லைவேந்தன். வேலை விசயமாக விண்ணப்பித்திருந்தேன். இன்று வருமாறு கடிதம் அனுப்பியிருந்தீர்கள் என்று எனக்கு எதுவித சிரமமும் வைக்காமல் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

நல்லது உங்கள் விண்ணப்பம் பார்த்தேன். கேட்கும் திறனின்றி எவ்வாறு வேலை செய்வீர்கள். உங்களுக்குக் கஷ்டமாயிருக்காதா?

பல இடங்களில் இதே காரணத்துக்காக எனக்கு வேலை தரமுடியாது என்று விட்டார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு நீங்கள் வாய்ப்புத் தருவதாக அறிந்து நம்பிக்கையுடன் வந்திருக்கின்றேன். யாரிடமும் இலவசமாக எதையும் பெற விரும்பவில்லை. பெற்றோரைப் பராமரிக்க ஒழுங்கான வருமானம் தரும் ஒரு தொழில் தேவையாக உள்ளது. அறிவுப் புலமையும் திறமையும் உள்ளது. கவிதைகள் எழுதுவேன். சித்திரங்கள் வரைவேன். தமிழ் நன்றாகக் கற்று அறிந்துள்ளேன். இவற்றிற்கேற்றாற் போல ஒரு வேலை அமைத்துத்தாருங்கள். அல்லது நிரந்தர வருமானம் தரும் கூலிவேலையாவது ஏற்பாடு செய்யுங்கள். நான் பிறவி ஊனமல்ல. யுத்தக் கொடுமைகளால் ஊனமாகியவன். ஒரு சந்தர்ப்பம் தந்து பாருங்கள். நான் தகமையற்றவன் எனில் நிறுத்தி விடுங்கள் என்றான். ஏதோ ஒரு ஆகார்ச சக்தி இவனிடம் இருப்பதை உணர்ந்து கொண்டேன். சரி, சந்தர்ப்பம் கேட்கிறீர்கள் - எவ்வளவு காலம் வேண்டும்.

ஒரு வாரத்தினுள் என்னை உங்களுக்குப் பிடித்துவிடும். ஆனாலும் மூன்று மாதங்களுள் உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தவறினால் என்னை நிறுத்தி[illegible]ங்கள். ஒரு வேகம் அவனுள் [illegible]க் கொள்வதை அறிந்து கொண்டேன்.

சரி, இன்று செவ்வாய்க் கிழமையாயிற்றே. நாளை வந்து இணைந்து திறமைகளை நிரூபித்து விடலாம். சந்தோஷம் தானே என்றேன்.

ஐயா, மன்னித்து விடுங்கள். உங்களிடமிருந்து இவ்வாறான பதிலை நான் எதிர் பார்க்கவில்லை என்றான்.

சந்தர்ப்பம் கேட்டாய் தருகிறேன் என்கிறேன். இவ்வாறான பதிலை எதிர்பார்க்கவில்லை என்கிறாய்...

அதில்லை ஐயா, சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி. நாளை வா என்று கூறினாலும் உடன் பட்டிருப்பேன். ஆனால் செவ்வாய்க்கிழமை ஆதலால் நாளை வா என்ற பதில்தான் எனக்கு உடன்பாடில்லை. நீங்கள் கோபம் கொள்ளாவிடின் இன்னமும் காரணம் உண்டு.

என்ன காரணம் கூற விரும்புகிறாய் கூறு. ஐயா, "வேகப்போகும் உடலுக்கு வெள்ளியென்ன, செவ்வாய் என்ன? நாளும்கோளும் நலிந்தார்க்கில்லை" என்று எமது முன்னோர்கள் கூறி வைத்துள்ளனர். சிவந்த ஒளி வீசுவதால் அக்கிரகம் செவ்வாய் எனக் கொள்ளப்பட்டதெனவும் அதன் ஈர்ப்புவிசை புவியில் உள்ள அனைத்திலும் செல்வாக்குச் செலுத்தும் என்றும் விஞ்ஞானம் கூறுகிறது. நாங்கள் 7 இல் செவ்வாய் , 8 இல் செவ்வாய் என்று சாதகக் கட்டைத்தூக்கி கொண்டு அலைந்து திரிகின்றோம். அது செவ்வாய் அல்ல ஐயா செய்வாய் என்றும் கொள்ளலாம்.

பேசப் பேச முகம் பிரகாசமாகவும், கண்கள் கூர்மையடைந்தும், உதடுகள் துடித்து மூக்குநுனி சிவந்தும் காணப்பட்டன. அதுமட்டுமன்றி ஐயா, கோள்களின் தாக்கங்கள் புவியிலுள்ள எல்லா ஜீவராசிகளிலும் ஆதிக்கம் செலுத்திய போதிலும் மனிதன் கொடுக்கும் முக்கியத்துவம்தான் வியப்புக்குரியது. அதிலும் கூட, நேரம், காலம், சுபவேளை, லக்கினம், ராசி என்று ஒவ்வொன்றையும் கணக்கெடுத்து நேரம் குறித்துவிட்டு, குறிப்பிட்ட சுப வேளைகளில் நற்காரியங்களை முடிக்கின்றார்களா? என்றால் அதுவும் இல்லை. கடவுள் எமக்குத் தினம் தினம் தருகின்ற 24மணி நேரத்தை வீணாகச் செலவழித்து பிரயோசனமின்றிப் போய் விடுகின்றோம் ஐயா, அது தான் வேதனை தரும் விடயம்.

ஏதேது, பெரிய பிரசங்கி போலாகி விடுவாய் போலிருக்கிறது. இவ்வாறு கதைத்தால் மேலதிகாரி வேலை தரமாட்டார் என்ற பயமும் இல்லாமல் போய்விட்டதா?

சரியெனக் கண்ட கருத்தைக் கூறுவதற்கு எதற்கும், எவர்க்கும் அஞ்சவேண்டியதல்ல. சொல்ல வேண்டியதைச் சந்தர்ப்பத்தில் சொல்லாமல் விடுவதும் செய்ய வேண்டியதை உரியநேரத்தில் செய்யாமல் விடுவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை ஐயா. ஆதனால்தான் ஊடகத் துறையைத் தேர்ந்தெடுத்தேன்.

நல்ல கட்டுக்கோப்பான நிர்வாகத்துள் வளர்ந்து வந்தவன் என்று நன்றாகப் புரிந்து கொண்டேன். சரி தம்பி, நீங்கள் இன்றே வேலைக்குச் சேர்ந்து கொள்ளுங்கள். மூன்று மாத முடிவில் பார்த்துக் கொள்ளலாம் என்று மேலாளை அழைத்து இவருக்கான பணியையும் விடயங்களையும் அறிவுறுத்து மாறு கூறி அனுப்பினேன். மனம் சந்தோஷத்தில் விரிந்தது. நல்ல இளைஞர் சமுதாயம் உருவாகி வருகின்றது தெரிகின்றது. விடிவு வருவதற்கான அறிகுறி தெரிகின்றது என எண்ணியவாறு என் சிந்தனை விரிந்தது.

அன்று நான் பாடசாலை மாணவன். அப்பா தினக்கூலித் தொழிலாளி அம்மா குடும்பத் தலைவி. ஆனால் தனது பிள்ளைகள் படித்துயர வேண்டுமென்ற வேட்கை கொண்டிருந்தவர். அதற்காகத் தன்னையே மெழுகாக்கி எரித்து ஒளி வழங்கியவர். 6 ஆம் தரத்தில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். பொல்லாத காய்ச்சல், வைத்தியர் மூன்றுநாள் மருந்து தந்தார். குணமாகவில்லை. மறுபடியும் தந்த குளிகைகளின் வீரியத்தால் காய்ச்சல் நின்றது. காது கேட்கும் திறனும் குறைந்தது.

பின்னர் காது கேட்கும்திறன் குறைந்ததென வைத்தியசாலைக்குச் சென்றேன். தொண்டை, மூக்கு, காது ஆய்வாளர் என விஷேட பிரிவுக்கு அனுப்பி வைத்தனர். அங்கே மூக்கு, தொண்டை காதுகளுக்குள் ஒளி பாய்ச்சிப் பார்த்துவிட்டு திரும்பவும் மூன்று நாட்கள் மருந்து தந்தனர்.

காய்ச்சலுக்குப் பாவித்த நோயெதிர்ப்புக் குளிசையின் வீரியத்தால் காது நரம்புகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். தொடர்ந்து மருந்து எடுத்து வர மெல்ல மெல்ல சுகமாகும் என்று கூறி அனுப்பினார்கள். வகுப்பறையில் ஆசிரியர் கூறுவது கேட்பதில்லை. சீரான விளக்கங்கள் பெற முடியவில்லை. அம்மாவும் நானும் அழுதோம். இறைவனைத் தொழுதோம். சரியான அளவு மருந்து தராதமைக்காக வைத்தியரைத் திட்டித் தீர்த்தோம். ஆனால் பாதிப்பு எனக்குத்தான். படிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் ஒருபுறம். அம்மா கவலை வேறு வருத்தியது. தமிழ் ஆசிரியர் மிகவும் நல்லவர். எனது நிலைமையை அறிந்து வருந்தினார். தனக்குத் தெரிந்திருந்த நிதியம் ஒன்றின் உதவியுடன் கொழும்பு சென்று உயர் வைத்தியம் பார்த்துவர உதவி வழங்கினார். எங்கு சென்றும் காது கேட்கவில்லை. நேரமும் உதவியவர்களின் பணமும்தான் வீணானது. மனதில் விரக்தியும் கவலையும் படிக்க வேண்டும் என்ற வெறியும் வளர்ந்தது. ஆசிரியர் உற்சாகப்படுத்தினார். நூலகங்களுக்குச் சென்றேன். நூல்கள் எனக்கு உதவின. வெறியும் வேட்கையும், அம்மாவின் தளராத ஆசையும் உதவியும் இன்று நான் சிறந்த தினசரியொன்றின் தலைமை ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் வளர்ந்துள்ளேன். உழைப்பு, உழைப்பு, உழைப்பு ஒன்றே உயர்த்தும் என்று உணர்ந்த நான் தடுப்புக் கண்ணாடிகளுக்கூடாக உழைக்கத் துடிக்கும் ஒரு அழகிய வாலிபனைக் கண்டு கொண்டிருக்கின்றேன். முல்லைவேந்தன் தனக்கான பணியிடத்தில் அமர்ந்து வேலையில் மூழ்கிப் போயிருக்கிறான். காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. வானத்திலிருந்து தேவதைகள் இறங்கி வந்து எதையும் தரப்போவதுமில்லை. நாங்கள்தான் எம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டும்.

க.மயில்வாகன[illegible]

(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## எம் தாய்மொழியாகிய தமிழ் காக்க

உலக தாய்மொழி தினம்
(21.02.2015)
எங்கள்
தாய்மொழியாகிய
தமிழதன் பெருமையை
காத்திட உழைத்திடுவோம்
இயல் இசை நாடகமாய்
இன்று அறிவியலதையும்
இணைத்திட்ட
கணனித்தமிழே- இன்று
உலகெங்கும்
உன் ஓசை கேட்கிறது
ஆனாலும்
சில ஆங்கில மோகங்கள்
இன்றும் எம்மதியை
மறைக்கிறது
தாய்மொழியை மறக்காத
பன்மொழிப் புலமையது
தவறில்லை
அரைகுறைக் கலப்புக்கள்
தவிர்ப்போம்
சந்ததி தாண்டியும்
முழுநிறைவாய்
தமிழ்வாழ எம்
சிந்தனையால் சேர்ந்துழைப்போம்
மொழியின்றி இனமில்லை
பண்பாடில்லை
புரிந்து நடந்திடுவோம்

**புலோலியூர்**
**வேல்நந்தன்**



## அனுபவம்

சிதறு தேங்காய் உடைத்திருந்தால்
சிறு கூட்டம் கரம் கோர்த்திருக்கும்
கஞ்சி கொஞ்சம் ஊற்றியிருந்தால்
கனபேர் மனங்கள் பேசியிருக்கும்
நொந்தவேளை வந்திருந்தால்
உரிமையோடு மனங்கள் [illegible]யிருக்கும்
ஆனைப்பசியென்[illegible]
சோளப்பொரி [illegible]டி...
தீராத தாகமென்றால்
இல்லாத கானல்நீர் காட்டி...
மாயவித்தை பல
காட்டி, ஏய்த்து, மேய்த்து...
எம் தோலில் செருப்புத் தைத்து
உன் காலில் மாட்டிக்கொண்டு
மீண்டும் கூசாமல் வந்து நின்று
அக்கரை பச்சை காட்டுகிறாய்
இக்கரையெங்கும் விசம் தெளித்து
எப்படி மெல்ல உனை நம்பி
இத்தனை தூரம் வரமுடியும்?
பட்டது போதும் விடுசாமி
இனியும் எம்மால் முடியாது
பாகற்காயும் வேப்பம்காயும்....
நாவுக்குத் தெரியும் எப்படியென்று?

**து.கருணாகரன்**
**கிளிநொச்சி.**

## தூரம் அதிகமில்லை

என்
முனைப்புக்கள் யாவும்
பூச்சியத்தின் நடுவே
புகுந்து கொண்டது
முகமறியாப் பருவத்தில்
முதலும் முடிவும்
முடிவிலிகளாகிப் போனது
என் உத்வேகம்...
எழுச்சிகளால்
உருக்குலைக்கப்படுகின்றன
என் கோரிக்கைகள்
கோஷங்களால்
கொச்சைப்படுத்தப்படுகின்றன
என் பயணப் பாதைகளில்
பாரபட்சங்களே
தடைக்கற்களாகிப் போகின்றன
எனக்கான...
உரிமைகள் மறுக்கப்பட்டு
மௌனங்களால்
மாலையிடப்படுகின்றன
இருந்தும்
என்தேடல்களில்
அந்தோ தெரிகின்றது
தொடுவானம்...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## இமயம் தொட

உன்னை நீ எப்போது
உலக மகா புத்திசாலி
என்றெண்ணுகிறாயோ
அப்போதே
நீ கற்றகல்வி அத்தனையும்
தவிடு பொடியாகி விடுகிறது
உன்னைச் சுற்றி- நீ
வட்டத்தை வைப்பது வளர்ச்சியல்ல
ஊர் உன்னை வட்டத்தின் மேல்
வைப்பதே வளர்ச்சி

மாவை. நா.கஜேந்திரன்

## பணக்கார கடன்காரர்

கோடீஸ்வரர் வீட்டுக்கு
குழந்தை பராமரிக்கப் போனேன்
வங்கி விடுமுறையாம்
நாட்கூலியை
நாளை தருவதாய்
மாலை சொன்னார்
ஒன்றுமில்லா ஏழைகளிடமும்
ஓர் நாளாவது
கடன்காரர் ஆகிவிடுகிறார்கள்
பெரும் பணக்காரர்கள்

**யோ.புரட்சி**
**வள்ளுவர்புரம்**



## மலைபோல் நீங்கள்

நீதி கேட்கும் தமிழ்த்தாய்
மலைபோல் நம்பியிருப்பது
நாளைய தலைமுறையே
உங்கள் விலைபோகாத
தியாக சிந்தனையை
எனவே வலைவீசப்படும்
உங்கள் அடிமைப்படாத
உள்ளத்தை ஏழ்மை என்று
நிலைகுலைந்து விற்றுவிட்டு
முகம்கோணி உடல் குறுகி
நின்றுவிடாதீர்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## ஒற்றுமை

ஒன்றாய்ச் சேர்ந்து குதூகலிக்கும்
இந்தச் சிறுவர்களிடம் உள்ள
ஒற்றுமை நம்நாட்டு
அரசியல் தலைவர்களிடம் இருந்தால்
நிச்சயம் நம் நாடு சுபீட்சமடையும்

*சு.ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## எதுசரி?

ஒன்றுபட்டு வாழ்வது சரி
ஒன்றுபட்டு வாழ்வை
அழிப்பது முறையோ?
ஒன்றுபடு
அதில் நன்று படு
ஒன்றேகுலம்
ஒருவனே தேவன் என

*அகிலா*
*யாழ்ப்பாணம்*

# மௌனத்தின் தேடல்- 238

## வீண்

வீண் பார்வை
வீண்செயல்
வீண்சிரிப்பு
வீண் முறைப்பு
வீண்வீண் வீணே
உன் வாழ்வை
வீணாக்கிடாதே

*சி.தர்ஷிகன்*
*அரியாலை*

## தொடருங்கள்

நடிப்பு உங்களுக்கு
நன்றாக எடுபடுகிறது
இருப்பினும் இப்போது
படிப்பே உங்களுக்கு
பரிட்சயமாக வேண்டும்
ஆதலால்
நடிப்பதை நிறுத்துங்கள்
படிப்பதை தொடருங்கள்

*சி.தனுஷா*
*யாழ்ப்பாணம்*

## யார் வருவார்?

அன்பு செய்ய அப்பனும் இல்லை
அரவணைக்க அன்னையும்இல்லை
அறிவு புகட்ட ஆசானும் இல்லை
அல்லல் தீர்க்க ஆண்டவனும் இல்லை
அடிமைகள் ஆக்கப்பட்டோம்
அடக்கியாள நினைக்கும்
அக்கிரமக்காரர்களால்

*யோ.காண்டீபன்*
*மானிப்பாய்*

## ஆவேசத்தோடு

நேசக்கரம் பற்றி
நாசமாய்ப்போன
தேசத்துரோகிகளால்
பாசத்தோடு எமை வளர்த்த
பெற்றோர் சகோதர உறவுகளை
இழந்து நிர்க்கதிக்காளாக்கி
நிற்கின்றோமே என
எண்ணிப் பழிவாங்கத்
துடிக்கின்றனரோ
ஆவேசத்தோடு
இச்சிறுவர்

*துரை*
*தென்மட்டுவில்*

## விளையாட்டு வினையாகுமா!

விநோத போக்குகளும்
விகடகவிகளும்
அரசியலா செய்கின்றீர்
உங்களை நம்பிய பெற்றோர்
அரசியலை நம்பிய மக்கள்
கைவிட்டு விடாதீர்
ஆட்டம் நிலைக்குமென்று
கற்பனைகள் பண்ணாதீர்
சிக்கி சீரழிந்து வாழ்வை
சின்னாபின்னமாக்காதீர்

*ம.திருவரசுராசா*
*வவுனியா*

## சிந்தனையூட்டும் கல்வி பயின்றால்

சினிமாப் பாணியிலே சீண்டி
சீரழியும் சிறுவர்களை
சீரழிக்கும் சினிமாதாண்டி
சிந்தனையூட்டும் கல்வி பயின்றால்
சிகரங்களில் சிறகடித்து நாளை வாழ்வில்
சிறப்புடனே வாழ்ந்திடலாம்

*எஸ்.ஆர்.ராம்கி*
*கிளிநொச்சி.இ.க.*

## வாழ்வின் விதி

விழிக்கூர்மைப் பார்வையினால்
வீரமிகு நல்சேவையினால்
வென்றிடத்துடிக்கும் தளிர்களே!
கரம்பற்றிப் பலமாகிடலாய் –உம்
மனம் ஒற்றைக் குடையாகிடின்
பிரிவெனும் பேதமின்றியே- நாம்
விடிவெனும் ஒளியினில்
மகிழ்வுடன் வாழ்ந்திடலாம்

*சாந்தையூர் வினிஸ்*
*பண்டத்தரிப்பு*

# மௌனத்தின் தேடல் –239



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 25.02.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டை வதை செய்யாதீர்கள் !



இப்பூவுலகிலுள்ள விலங்குகள் யாவற்றிலும் மேன்மையானதும் புனித மானது மாகக் கருதப்படுவது பசுவாகும். இதைக் கோமாதா எனவும் அழைப்பர். கோ என்பது இறைவனைக் குறிக்கும் சொல். மாதா என்பது தாயைக் குறிக்கும் சொல். பசுவானது தெய்வங்க ளோடு பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டு மனித மேம்பாட்டிற்குத் துணை புரிவ தால் 'கோ' என்று பகுதியாகவும், தாய்ப்பாலுக்கு நிகரான தன்பாலைத் தந்து குழந்தைகளை வளரச் செய்வ தால் மாதா என்று விகுதியா வும் சேர்த்து கோமாதா என அழைப்பர்.

பசுவின் பாலானது பல வழிகளிலும் மக்களுக்குப் பயன்படுகிறது. ஆன்மீகச் செயற்பாடுகளில் முதலிடம் வகிக்கிறது. இறைவனின் திருவுருவ விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதற்கும், இறைவனின் மிக விரும்பிய நீராகாரமாகவும் பாவிக்கப் படுகிறது.

பாற்குட பவனிகளில் இடம் பெறுகின்றது. பஞ்ச கவ்வியத் திலும் இடம்பெறுகிறது. சிறி யோருக்கும் பெரியோருக்கும் போஷாக்கு அளிக்கக் கூடிய பானமாகவும் விளங்குகிறது.

பிறந்த குழந்தைக்கு தாய்ப் பாலுக்குப் பதிலாக தாயால் முதலில் ஊட்டப்படுவதும், ஆறு மாதங்களின் பின் குழந் தைக்கு முதன் முதல் உணவூட்டும் நிகழ்வான அன்னப் பிரசாசனம்... எனப்படும் பாற்சோறு ஊட் டல் நிகழ்விலும் முதலிடம் வகிப்பது பசுவின் பால்தான் என்றால் மிகையாகாது.

பூணூல் சடங்கு, ருது சாந்தி வைபவம், திருமண வைபவம் போன்ற நிகழ்வு களுக்கு நீராட்டுவதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தலையில் வைத்து பெரியோர் களால் ஆசிவழங்குவது பாலும் அறுகம்புல்லுமே.

திருமண பந்தத்தில் ஈடு படும் மணமக்களுக்கு முதன் முதல் வழங்கப்படுவது பாலும் பழமுமே. புதுமனை புகுதலின் போதும் முதன் முதல் காய்ச் சப்படுவது பசுவின் பாலே, கோயிற் பூசைமுடிவிலும் பிரசாதமாகத் தரப்படுவது பாற்தீர்த்தமே.

இறக்கும் தறுவாயில் இருக்கும் மனிதனுக்கு வாயில் ஊற்றப்படுவதும் பசுவின் பாலே. இறந்த பின் நடக்கும் சகல கிரியைகளுக்கும், காடாற்றல் எனப்படும் எலும்பு கள் சேகரிக்கும் கிரிகைகளுக் கும், அந்தியேட்டி ஆண்டுத் திவசம் எனப்படும் அமங்கல நிகழ்வுகள் யாவற்றிற்கும் இன்றியமையாததாக வேண் டப்படுவது பசுவின் பாலே!

பசுவின் சாணம் கூட பல் வேறு செயற்பாடுகளுக்கும் பயன்படுகிறது. மண் வீட்டை மெழுகிச் சுகாதாரமாக வைத் திருப்பதற்கும், சிவ சின்னமா கிய விபூதி தயாரிப்பதற்கும், பஞ்சகவ்வியம் தயாரிப்பதற் கும், இறந்த உடலை எரிப் பதற்கு விறாட்டி தயாரிப்பதற் கும், தாவரங்களுக்கு போஷாக்குள்ள உரமாகவும் பசுவின் சாணம் பயன்படு கிறது.

கும்பாபிஷேக வேளைகளி லும், புதுமனை குடிபுகு வேளைகளிலும் பசுவைக் கொணர்ந்து மங்கல தரிசன மாக காண்பிக்கிறார்கள், ஏனெனில் பசுவின் பின் பகுதி யில் இலக்குமி வாசம் செய்வ தாக ஆகமங்கள் கூறுகின்றன.

ஆன்மீகக் கதைகளிலும் பசுக்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ் ணன் வளர்ந்துவந்த ஆயர்பாடி யில் ஆயர்களால் பிரியமாக வளர்க்கப்பட்டதும், ஸ்ரீ கிருஷ் ணனின் பிரியமான விலங்கும் பசுதான்.

திருமூலர் பசுக்களிலே கொண்ட இரக்கத்தை அவரது வரலாற்றிலே அறிந்திருப்பீர் கள். மனுநீதிகண்ட சோழன் தாய்ப்பசு பட்ட துன்பத்தைத் தாங்காது தன் மகனையும் தேர்ச்சில்லில் அகப்பட்டு இறக் கச் செய்த வரலாறு எமக்கு உணர்த்துவது பசுவின் மகத்து வத்தையே.

எருதை நோக்குங்கால், எருதும் தெய்வீக நிகழ்வுகள் பலவற்றில் சம்பந்தப்பட்டிருக் கிறது. கைலையில் வீற்றிருக் கும், பார்வதிக்கும் காவல் தெய்வமான நந்தியாகவும், சிவன் கோவில்களிலே சிவலிங்கத்தையே நோக்கிய வண்ணமிருக்கும் ஆன்மாவா கிய நந்தியெம் - பெருமானாக வும் விளங்குகின்றது.

சிவ பார்வதித் தெய்வங் களுக்கு வாகனமாகவும் விளங்குகிறது. இராசிகளில் ரிஷபமாகவும். சிவாலய மகோற்சவத்தின் போது ஏற் படும் கொடிச்சீலையில் நந்தி யாகவும் காட்சி தருகிறார்.

திருக்கோயிலில் தினம் தோறும் நடைபெறும் ஆறு காலப் பூசையின்போது நந் திக்கும் பூஜை நடைபெறும். பிரதோஷ காலத்தில் இவருக்கு சிறப்பான பூஜை வழிபாடு நிகழும்.

இவருடைய இரு கொம்புகளுக்கிடையே சிவலிங்கத்தைத் தரிசித்த பின்பே விரதத்தை நிறைவு செய்வார்கள்.

எருது விவசாயிக்கு மிகவும் இன்றியமையாத ஒரு விலங்கா கும். அவன் நிலத்தை உழுது கொள்வதற்கும், வயலுக்குத் தேவையான உரத்தை வழங்கு வதற்கும், வயலில் விளைந்த நெற்கதிர்களை சூடு மிதித்து நெல் மணிகளாக்குவதற்கும், அந் நெல்மணிகளை மூடை களாகக் கட்டி வீடு கொண்டு செல்வதற்கும் வண்டியை இழுப்பவைகளும் எருதுகளே.

இதனால்தான் விவசாயி சூரியப் பொங்கலுக்கு மறு நாள் எருதுகளுக்கும் நன்றிக் கடன் செலுத்துவதற்காக மாட் டுப் பொங்கலை நடத்துகிறான.

இவ்வகையான சிறப்புக்கள் மிக்க பசுவையும், எருதையும் பதைபதைக்கக் கொன்று உண்பது எவ்வளவு பாதக மான செயலாகும். இவை யிரண்டும் மக்களாகிய எமக் குப் பல வழிகளிலும் உதவி செய்கின்றன.

நாமோ அச் செய்ந்நன்றி களை மறந்து எம் உடலை வளர்ப்பதற்காக அப்பாவிப் பிராணிகளான அவைகளை ஈவிரக்கமின்றி கொன்று குவிக் கின்றோம்.

நாம் அவற்றின் ஊனை உண்பதால்தான் அவைகள் தினம் தோறும் கொல்லப்படு கின்றன. நாம் உண்ணா விட்டால் அவைகள் கொல் லப்பட மாட்டா.

ஆகவே நாம் பசுக்களை யும், எருதுகளையும் தெய்வத் தால் எமக்கு அளிக்கப்பட்ட விலங்குகளாகக் கருதி அவை களைக் கொன்றொழியாதிருப் போமாக!

**அம்பலவாணர் இராஜரட்ணம்**
**(சைவப்புலவர்)**

# கன்னங்கள் அழகாக பயிற்சிகள்




உடல் எடையை குறைக்க முயலும் போது, தொப்பை, தொடை, இடுப்பு போன்றவற்றில் உள்ள கொழுப்புக்களை மட்டும் தான் கரைக்க முயல்கிறோம். ஆனால் பெரிய கன்னங்கள் மற்றும் இரட்டை தாடைகள் போன்றவற்றை குறைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. கன்னங்களை அழகாக வைத்துக் கொள்வதற்கு ஒருசில உடற்பயிற்சிகள் உள்ளன. அதனைப் பின்பற்றி வந்தால், கன்னங்களில் உள்ள அதிகப்படியான கொழுப்புக்களை கரைக்கலாம். அதுமட்டுமின்றி, இந்த பயிற்சிகளில் சில ஒட்டி யுள்ள கன்னங்களை சரியான அளவில் வைத்துக் கொள்ளவும் முடியும்.

கன்னங்களை அழகாக வைத்துக் கொள்ள செய்ய வேண்டிய பயிற்சிகளில் முதன்மையானது தான் வாயை குவித்தல். உதடுகளை இறுக்கமாக மூடி, 1 நிமிடம் குவித்து, பின் சாதாரண நிலைக்கு திரும்ப வேண்டும். இந்த மாதிரி ஒரு நாளைக்கு குறைந்தது 3 வேளை, 10 நிமிடம் செய்ய வேண்டும். முகத்தில் உள்ள தசைகளுக்கான சிறந்த பயிற்சி தான் சிரிப்பு. இவ்வாறு வாய் விட்டு சிரிக்கும் போது, முகத்தில் உள்ள தசைகள் நீட்சியடைவதால், அது கன்னங்களை அழகாக வைத்துக் கொள்ள உதவும். எனவே தினமும் 15 நிமிடம் சிரிப்பு பயிற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பொதுவாக சூயிங்கம் போட்டால், வாய் புத்துணர்ச்சியுடன் இருக்கும். இந்த சூயிங்கம் மெல்லுவது என்பது முகத்திற்கான ஒரு நல்ல பயிற்சியாகும். இதனால் இரட்டை தாடைகளை தவிர்க்கலாம். நன்கு பெரியதாக இருக்கும் கன்னங்களை குறைக்க இருக்கும் சிறந்த வழிகளுள்- கன்னங்களை தூக்குதலும் ஒன்று. அதற்கு முடிந்த அளவில் கன்னங்களை தூக்குங்கள். அதற்காக கையை கொண்டு தூக்காதீர்கள். சிரிப்பதன் மூலம் கன்னங்களை நன்கு தூக்குங்கள்.

மீன் போன்று உதடுகளை குவித்து, 20 நொடிகள் வைத்து, பின் சாதாரண நிலைக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு ஒரு நாளைக்கு 10, 20 முறை செய்து வந்தால், கன்னங்களை குறைக்கலாம். வாயில் காற்றினை நிரப்பி 2 நிமிடம் கழித்து, பழைய நிலைக்கு திரும்ப வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வந்தால், கன்னங்களை குறைப்பதோடு, கன்னங்கள் சரியாக இல்லாதவர்களுக்கு கன்னங்கள் சரியான அளவில் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாய்மையே வெல்லும்

சங்காபுரி என்ற நாட்டை அர்ச்சுதன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவரது நாட்டில் எங்கு பார்த்தாலும் திருட்டு கொள்ளை என்பன அதிகமாக நடந்து வந்தன.

அந்த நாட்டில் ஒரு விசித்திரமான திருடன் இருந்தான் அவன் பெயர் கலிங்கன். தான் எப்பொழுதும் உண்மை மட்டுமே பேசுவேன் என்று ஒரு முறை ஒரு முனிவரிடம் உறுதி மொழி வழங்கியிருந்த அவன் அதை முழுமையாக கடைபிடித்து வந்தான்.

திருடர்களை பிடிப்பதற்காக மன்னர் அர்ச்சுதன் அவ்வப்பொழுது இரவு நேரங்களில் மாறு வேடத்தில் தனியாக செல்வது வழக்கம். ஒரு முறை அவ்வாறு அவர் சென்ற பொழுது திருடனான கலிங்கனை சந்தித்தார்.

அவனிடம் நீ எங்கு செல்கிறாய் என்று மாறு வேடத்தில் இருக்கும் மன்னர் கேட்டார். "மன்னரின் அரண்மனையில் திருடுவதற்கு சென்று கொண்டிருக்கின்றேன்" என்று



பதிலளித்தான்.

நானும் உன்னை போல் ஒரு திருடன்தான் நாம் இருவரும் சேர்ந்து திருடலாம். கிடைப்பதை இருவரும் சமமாக பங்கிட்டு கொள்ளலாம் என்றார் மன்னர்.

இருவரும் அரண்மனையில் திருடச் சென்றனர். மன்னருக்கு பழக்கப்பட்ட இடமாதலால் இருவரும் மிக எளிதாகவே பொக்கிஷ அறைக்குச் சென்றனர்.

பின்னர் திருடன் மன்னரிடம் "நீ வெளியே நின்றுகொண்டு யாராவது வருகின்றனரா என்று பார்த்துக் கொள் நான் உள்ளே சென்று கொள்ளையடித்து வருகிறேன்" என்று கூறி உள்ளே சென்ற கலிங்கன் மிக விலை உயர்ந்த வைர மாலைகள் இரண்டை எடுத்து வந்தான்.

"நண்பா உள்ளே மூன்று வைர மாலைகள் இருந்தன. மூன்றையும் சமமாக பங்கிட முடியாது என்பதால் இரண்டு மாலைகளை மட்டும் எடுத்து வந்தேன்.

ஒன்றை நான் வைத்துக் கொள்கிறேன். மற்றொன்றை நீ வைத்துக்கொள்" என்று கூறி அந்த வைர மாலையை மன்னனிடம் கொடுத்தான் கலிங்கன்.

பெற்றுக் கொண்ட மன்னர் "இனிமேல் நாம் இருவரும் ஒன்றாக சேர்ந்தே திருடச் செல்லலாம். ஆகையால் உன்னை நான் மறுபடியும் எங்கு எப்பொழுது சந்திப்பது என்று கேட்டார். கலிங்கன் தனது வீட்டு முகவரியைக் கொடுத்துவிட்டு நாளை இரவு இதே இடத்தில் சந்திக்கலாம் என்று கூறி சென்று விட்டான்.

மறு நாள் காலை அரச சபை கூடியது. மன்னர் தனது தளபதியை அழைத்து கருவூலத்திலுள்ள பொக்கிஷங்கள் அனைத்தும் சரியாக இருக்கிறதா? என்று பரிசோதித்து வருமாறு கட்டளையிட்டார்.

கருவூலம் சென்ற தளபதிக்கு மூன்றில் இரண்டு வைர மாலைகள் திருடப்பட்டிருப்பது தெரியவந்தது. இரண்டு மாலைகள் மட்டும் திருடப்பட்டிருக்கிறது என்று மன்னனிடம் கூறினால் தான் திருடியதாக மன்னன் நினைத்து தண்டித்துவிடுவார்.

ஆகையால் மீதமிருக்கும் ஒரு வைர மாலையையும் தான் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு மூன்று மாலைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று கூறிவிடலாம் என்று நினைத்த தளபதி மன்னனிடம் அவ்வாறே கூறினான்.

மன்னர் காவலாளியிடம் கலிங்கனின் முகவரியை கூறி அவனை அழைத்து வருமாறு கட்டளையிட்டார். அவனும் தான் திருடிய வைர மாலையுடன் அரச சபைக்கு வந்துவிட்டான்.

"நேற்றிரவு நீ கருவூலத்தில் திருடினாயா?" என்று கேட்டார் மன்னர். கலிங்கன் தான் உண்மை பேசுபவன் ஆயிற்றே? மன்னர் தான் மாறு வேடத்தில் வந்திருந்தார் என்பதை அறியாத கலிங்கன் மன்னரிடம் ஆம் மன்னா, நானும் எனது நண்பனும் தங்களது கருவூலத்தில் நேற்று கொள்ளையடித்தோம். அங்கு மூன்று வைர மாலைகள் இருந்தன.

ஆனால் நாங்கள் இரண்டு மாலைகளை மட்டுமே கொள்ளையடித்தோம். இருவரும் ஒவ்வொரு மாலையை எடுத்துக் கொண்டோம்.

நான் திருடிய மாலைகளின் ஒன்று இதோ என்று சபையினர் முன் வைத்த கலிங்கன் தனது நண்பனை இன்று இரவு சந்திப்பதாகவும், அப்பொழுது அவரிடமுள்ள மற்றொரு மாலையையும் வாங்கித் தருவதாக கூறினான்.

அதற்கு அவசியமில்லை என்று கூறிய மன்னன் தானே மாறு வேடத்தில் வந்ததாகக் கூறி தான் வைத்திருந்த மற்றொரு வைர மாலையை சபையின் முன் வைத்தார்.

இதைக் கேட்ட கலிங்கன் அதிர்ச்சியடைந்தான். இரண்டு மாலைகள் இங்குள்ளன பிறகு மூன்றாவது வைர மாலை எங்கே? என்று மன்னர் கேட்டதும் தளபதியின் முகம் இறுக்கமானது.

இதைக் கவனித்த மன்னன் தளபதியை சோதனை செய்யுங்கள் என கட்டளையிட்டார் அப்போது அவர் மறைத்து வைத்திருந்த வைர மாலை கண்டுபிடிக்கப்பட்டது.

அரச சபையில் முக்கிய பதவியிலிருந்தும் அரசாங்கத்தின் பொருளை கொள்ளையடித்த காரணத்தினால் தளபதியின் பதவி பறிபோனது. மாறாக திருடனாக இருந்தும் உண்மையை கூறிய காரணத்தால் திருடன் கலிங்கனுக்கு தளபதிக்கான பதவியை கொடுத்தார் மன்னர்.

பார்த்தீர்களா சத்தியத்தின் மதிப்பை! அதனால்தான் இறைவன் கூறுகின்றார். இனிய குழந்தைகளை பூமியே பிளந்தாலும் நீங்கள் உங்களது தர்மத்தை விட்டு விடக் கூடாது.

சத்தியத்திற்கு சோதனைகள் தடைகள் வரலாம் இருப்பினும் சத்தியத்தை விட்டு விடக் கூடாது. சத்தியம் என்ற படகு ஆடும் அசையும் ஆனால் மூழ்காது. சத்தியம் இருக்கும் இடத்தில் பகவான் துணையாக இருப்பார்.

## மகாத்மா காந்தி கூறும் உலகப் பெரும் தவறுகள்

- உழைக்காமல் ஈட்டிய செல்வம்.
- மனசாட்சி இல்லாத இன்பம்.
- பண்பு இல்லாத அறிவு.
- நல்லொழுக்கம் இல்லாத வணிகம்.
- மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்.
- தியாகம் இல்லாத வணக்கம்.
- அடிப்படை கொள்கை இல்லாத அரசியல்.



வெ.மதுராந்தகி
தரம் - 9
யா/கொக்குவில் இந்து கல்லூரி.

## விடுகதை

கதைகள் சொல்வது போல் குழந்தைகளுக்கு விடுகதைகளை சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களது சிந்தனைத் திறனை விடுகதைகள் வளர்க்கும்.

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல. வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது - அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் - அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது - அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் - நான் யார்?

**விடைகள் :** 1.சைக்கிள், 2. பட்டாசு, 3. தராசு, 4. எறும்புக் கூட்டம், 5. அஞ்சல் பெட்டி.

## பொது அறிவு

1. எமது நாட்டின் கௌரவ பிரஜையான விஞ்ஞான எழுத்தாளர்.
   ஆதர்.சி.கிளார்க்
2. நோபல் பரிசை தோற்றுவித்தவர்.
   அல்பிரைட் நோபல்
3. வெறி நாய்க் கடிக்கு மருந்தை கண்டு பிடித்தவர்.
   லூயி பாஸ்டர்
4. தொலைக்காட்சிபெட்டியை கண்டுபிடித்தவர்.
   ஜே.எல்.பார்ட்
5. கண் கண்ணாடியை கண்டு பிடித்தவர்.
   வெனிஸ் (இத்தாலி)



றெ.பிறைசா
தரம் - 2B
யா / சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஜித்தின் என்னை அறிந்தால் 100 கோடி வசூலை தாண்டி விட்டதா

அரசியல், சினிமா பொழுதுபோக்கு கேள்விகளை சுருக்கமாக பெயர், முகவரி குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
குறுந்தகவல் (SMS) 021 567 1532
Email vijasarpathil@gmail.com



கடவுள் நம்பிக்கை தங்களுக்கு உண்டா?




**அபிராமி** — சண்டிலிப்பாய்

*வங்கியில் லோன் எடுத்த அனுபவம் ஏதும் உண்டா?*

வங்கியில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீங்கள் லோன் எடுக்க விரும்பினால் எங்கள் வங்கியில் எடுக்கலாம் என்றார்கள். அதற்கு நான் ஓ... அப்படியா ரொம்ப நன்றி சேர். நேற்றுத்தான் என்னை எனது நிறுவனத்தில் வேலையில் இருந்து நிறுத்தினார்கள். நல்ல நேரத்தில் உதவி செய்கிறீர்கள் என்றேன். உடனேயே தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

**டெனிசன், அஜித்** — திக்கம்

*ஆண்களை ஏன் பெண்கள் நம்புவதில்லை?*

இந்தியாவில் மழை பெய்தால் பங்களாதேஷைத்தானே வெள்ளம் தாக்குகிறது. இங்கேதான் 'சொல்வதெல்லாம் உண்மை இல்லையே'

**வே. அகிலேஸ்வரன்** — மருதங்கேணி


*எமக்கு பிடிக்கும் விடயங்கள் சிலருக்கு பிடிக்காமல் போகிறதே?*

விருப்பம் என்பது பாயாசம் போன்றது சிலருக்கு வாழை இலையில் விட்டு சாப்பிட பிடிக்கும். சிலருக்கு டம்ளரில் விட்டு குடிக்கப் பிடிக்கும். சிலருக்கு பாயாசமே பிடிக்காது.

**இன்பா** — யாழ்ப்பாணம்

*உலகத்திலேயே மனிதன் என்று சொல்லக் கூடிய நான்கு பேரைச் சொல்லுங்க?*

உலகம் மனிதனின் ஆட்சியில் இருந்து விடுபடட்டும். அப்போது சொல்ல முயற்சிக்கிறேன்.



**அனுசியா** — மாதகல்

*காதலருக்கு சூடு போடக் கூடிய ஏதாவது கூறுங்களேன்?*

போர்க்களத்தில் இருந்த காதலனுக்கு காதலி கடிதமெழுதுகிறாள். எனக்கு இப்போது புது காதலன் கிடைத்துவிட்டார். அதனால் எனது புகைப்படத்தை திருப்பி அனுப்பும்படி. அதற்கு காதலன் அனுப்பிய பதில்.
'மைடியர் எனக்கு நிறைய காதலிகள் இருப்பதால் உங்கள் முகம் நினைவில்லை. அதனால் என்காதலிகள் அத்தனை பேரின் புகைப் படங்களையும் அனுப்புகிறேன் உங்கள் புகைப்படத்தை எடுத்துவிட்டு மிகுதிப் படத்தை எனக்கு திருப்பி அனுப்பவும்'

**கிருஷ்ணா** — யாழ்ப்பாணம்

*என் வகுப்புத் தோழி அடிக்கடி என்னைப் பார்த்து சிரிக்கிறாள் அதற்கு என்ன அர்த்தம்?*

இன்னும் கொஞ்ச காலத்தில் நீங்கள் தனிமையில் சிரித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்பதை நினைத்துச் சிரிக்கிறான் போலத் தெரிகிறது.

**தனு** — பொலிகண்டி

*அஜித்தின் என்னை அறிந்தால் 100 கோடி வசூலை தாண்டி விட்டதா?*

இல்லை. அஜித்தின் படங்களிலேயே அதிக எதிர்பார்ப்பு அதிகமாகப் பேசப்பட்ட படம். நூறைத் தொட்டுவிட்டால் நூறு கோடி வரிசையில் ஐ விக்கிரமை அடுத்து அஜித்தும் இணைவார்.

**கிருஷா** — வரணி

*இந்த காலத்தில் காதலர் தினம் தேவை தானா?*

எந்தக் காலத்திலும் தேவையில்லை: உண்மையான காதலர்களுக்கு.

**குருபரந்தாமன்** — அல்வாய்

*எனது காதலி என்னை ஏமாற்றி விட்டாள். அவளை என்ன செய்யலாம்?*



ஒரு பஸ்சை மிஸ் பண்ணினால் அடுத்த பஸ்சை பிடிப்பது வழமைதானே. காத்திருங்கள் அடுத்த பஸ் வரும். அதையாவது கெட்டியாய் பிடியுங்கள்.

**சந்தோஸ்**

*வயது கூடிய பெண்ணை திருமணம் செய்வது சரியா?*

குடும்ப அட்டையில் 'நீங்கள் கீழேதான்' இருப்பீர்கள் பரவாயில்லையா?

**சு. ஜெயரூபன்** — பருத்தித்துறை

*பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமண முண்டா?*

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் அவ்வளவுதான்.

**அருள்** — கொடிகாமம்

*முட்டாள்கள் எப்படி இருப் பார்கள்?*

பார்க்க புத்திசாலிகள் போல...

**ஜீபா** — திக்கம்

*பெண்களின் காதலா ஆண் களின் காதலா உண்மையானது?*

ஆண்களின் காதல் உண்மை யாகும் போது பெண்களின் காதலும் பெண்களின் காதல் உண்மையாகும் போது ஆண் களின் காதலும் பொய்த்து விடுகின்றது.

**ஈசா, ஜெபா** — திக்கம்

*இன்றைய காதலருக்கு ஏற்ற புது மொழி ஒன்று சொல்லுங்களேன்?*

காதல் போகும் போனால் இன்னொன்று வரும். உடனே உயிர் போனால் வருமோ?

**அருமை** — கோண்டாவில்

*கடவுள் நம்பிக்கை தங்களுக்கு உண்டா?*

கடவுளை கருங்கல்லில் செதுக்குபவன் இன்னும் சுத்தியலும் கையுமாகத்தான் இருக்கிறான்.

## அறுசுவை என்றால் என்ன?

காரம்: உடலுக்கு உஷ்ணத்தைக் கூட்டுவதுடன் உணர்ச்சிகளை கூட்டவும், குறைக்கவும் செய்யும்.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு, மிளகு, கடுகு.
கசப்பு: உடம்பிலுள்ள உதவாத கிருமிகளை அழித்து உடம்பிற்கு சக்திகூட்டும். சளியைக்கட்டுப்படுத்தும்.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: பாகற்காய், சுண்டக்காய், கத்தரிக்காய், வெந்தயம், பூண்டு, எள், வேப்பம்பூ, ஓமம்.
இனிப்பு: உடம்பு தசையை வளர்க்கும் தன்மை வாய்ந்தது. வாதத்தைக் கூட்டும்.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: பழவகைகள், உருளை, கரட் போன்ற கிழங்கு வகைகள், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் மற்றும் கரும்பு போன்ற தண்டு வகைத் தாவரங்களில்.
புளிப்பு: இரத்தக் குழாயின் அழுக்கை நீக்கவல்லது. வாதத்தைக்கூட்டும்.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: எலுமிச்சை, புளிச்ச கீரை, இட்லி, தோசை, அரிசி, தக்காளி, புளி, மாங்காய், தயிர், மோர், நார்த்தேங்காய
துவர்ப்பு: இரத்தம் வெளியேறாது தடுக்க வல்லது. இரத்தம் உறைவதை கூட்டும் தன்மையுள்ளது.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: வாழைக்காய், மாதுளை, மாம்பிஞ்சு, மஞ்சள், அவரை, அத்திக்காய்.
உப்பு: ஞாபகசக்தியை கூட்டும். கூடினால் உடம்பில் வீக்கத்தை ஏற்படுத்தும்.
கிடைக்கும் உணவுப் பொருட்கள்: கீரைத்தண்டு, வாழைத்தண்டு, முள்ளங்கி, பூசணிக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத் தொடரில் காணாமல்போன ஜாம்பவான்கள்

ICC CRICKET WORLD CUP 2015







### சச்சின் டெண்டுல்கர்

இந்திய அணி இந்த உலகக்கிண்ணத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் இல்லாமல் களமிறங்கி விளையாடி வருகிறது.

கிரிக்கெட் துறையில் பல சாதனைகளை படைத்த சச்சின், இளம் வீரர்களுக்கும் முன்னோடியாக திகழ்கிறார்.

### ஷேவாக்

தனி ஆளாக போட்டியின் முடிவை மாற்றும் திறன் படைத்த அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக்கை இந்த உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணி இழந்துள்ளது.

### ரிக்கி பொண்டிங்

அவுஸ்திரேலிய அணியின் சிறந்த அணித்தலைவர், அதிக ஓட்டங்களை குவித்தவர், அதிக பிடிகளை எடுத்தவர் என சாதனை படைத்த ரிக்கி பொண்டிங் இல்லாமல் அவுஸ்திரேலிய அணி இந்த உலககிண்ண தொடரில் விளையாடி வருகிறது.

### கிரேம் ஸ்மித்

தென்னாப்பிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர் மற்றும் சிறந்த அணித்தலைவரான கிரேம் ஸ்மித் இல்லாமல் தென்னாப்பிரிக்க அணி இந்த உலககிண்ணத் தொடரில் கலந்து கொண்டுள்ளது.

### கலிஸ்

சிறந்த சகலதுறை வீரராக இருக்கும் கலிஸையும் தென்னாபிரிக்கா இந்த உலகக்கிண்ணத்தில் இழந்துள்ளது. பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் மிரட்டும் கலிஸ் அதிக ஓட்டங்கள் எடுத்து வீரர்கள் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளார்.

SA CRICKET

### சந்திரபோல்

பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் மேற்கிந்திய தீவுகள் அணியின் அசத்தல் ஆட்டக்காரர் சந்திரபோலை அந்த அணி இந்த உலகக்கிண்ண தொடரில் தவறவிட்டுள்ளது.

### யுவராஜ்

கடந்த உலகக்கிண்ணத் தொடரில் தொடர் ஆட்டநாயகன் விருது வென்ற அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ் இல்லாமல் இந்திய அணி தற்போது விளையாடி வருகிறது.

### ஜேக்கப் ஓரம்

உலகக்கிண்ணத் தொடரில் சிறந்த பந்துவீச்சாளராக வலம் வந்தவர் நியூசிலாந்தின் ஜேக்கப் ஓரம். களத்தடுப்பிலும் அசத்தும் ஓரம் இல்லாமல் நியூசிலாந்து அணி இந்த உலகக்கிண்ணத்தில் விளையாடி வருகிறது.

NEW ZEALAND CRICKET

### பிரட் லீ

மின்னல் வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ இல்லாமல் அவுஸ்திரேலிய அணி இந்த உலகக்கிண்ணத் தொடரை விளையாடி வருகிறது. உலகக்கிண்ணத்தில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் வரிசையிலும் இடம் பிடித்துள்ளார்.

### முத்தையா முரளிதரன்

தனது சுழற்பந்தால் எதிரணியை கலங்கடிக்கும் ஜாம்பவான் முத்தையா முரளிதரனை இலங்கை அணி இந்த உலகக்கிண்ணத்தில் தவறவிட்டுள்ளது. இவர் டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளையும், ஒருநாள் போட்டிகளில் 534 விக்கெட்டுகளையும் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

Sri Lanka Cricket

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


சினிமா செய்தி

# அனேகன்

## திரைவிமர்சனம்

"அனேக' ஜென்மங்களிலும் தொடரும் காதல், துரத்தும் வில்லன், மிரட்டும் சதி... காதல் கைகூடியதா? கார்த்திக்கின் வீடியோ கேம்ஸ் நிறுவனத்தில் வேலைபார்க்கும் அமைரா, மன உளைச்சலைச் சமாளிக்க உளவியல் கவுன்சலிங் எடுத்துக்கொள்கிறார்.

அப்போது அவருக்குள் பூர்வஜென்ம நினைவுகளின் பல அத்தியாயங்கள் மின்னி மறைகின்றன. பர்மா, அவரைத் தாண்டி மனதில் பச்சக் அடிக்கிறார் அறிமுக அழகி அமைரா. ஒல்லிபெல்லி உடம்பும் "கிஸ் மீ' தூண்டில் உதடுகளும் போக... நடிப்பிலும் ஸ்கோர் அடிக்குதுப்பா! "ஹேய்... இதை நாங்க சொல்லியே ஆகணும். யூ டிட் எ குட் ஜாப். நல்லா பண்றம்மா... இன்னும் நிறையப் பண்ணும்மா. சூப்பர்ப்!' - கார்த்திக்கை வேறு எப்படிப் பாராட்டுவது? தனுஷ் தன்னைப் போலவே பேசும்போது பாய்ச்சுகிறது ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு. "நெஞ்சம் மறப்பதில்லை', "மஹதீரா' என முந்தைய முன்ஜென்ம சினிமாக்களை "லாங் டெர்ம் மெமரி'யில் நினைவுபடுத்தி, தீம் பார்க் ஜாலி ரைடுக்கு இழுக்கிறான் "அனேகன்'. இழுக்கிறான் என்பதுதான் ரப்சர்!



41/100



வியாசர்பாடி என விதவித காலநிலை, சூழ்நிலைகளிலும் தனுஷுடனான கைகூடாத காதல் மட்டும் ஒரே சம்பவமாக ரிப்பீட் அடிக்கிறது.

அமைரா நிஜ வாழ்விலும் தனுஷைச் சந்திக்க, இந்தப் பிறவியிலும் வில்லன் அவர்களைப் பிரிக்கத் திட்டமிட, காதலும் காதலர்களும் என்ன ஆனார்கள் என்பது சினிமா! தனுஷ், பூர்வஜென்மம், அமைரா, பர்மா, கார்த்திக், வீடியோ கேம்ஸ், வியாசர்பாடி, "டங்காமாரி ஊதாரி...' அரை மணிக்கு ஒரு டிரெண்ட் என நியூ ஃபார்முலா பிடித்திருக்கிறார் இயக்குநர் கே.வி.ஆனந்த். "பவர் ப்ளேயர்' தனுஷுக்கு "பர்மா' முனாரூனா, "வியாசர்பாடி' காளி, "ஹார்டுவேர்' அஸ்வின் என மூன்று கெட்டப்கள். அதுபோக, பாடலிலும் சில கெட்டப்கள். வூடு கட்டி அடித்திருக்கிறார் தானா ஞானா! ஆனால், அந்த விதவிதமான விக்குகள் எல்லாமே படுபயங்கரம். (சகிக்கல "தல'!) **மாஸ் ஹீரோ தனுஷ், அவருக்கு மூன்று கெட்டப்கள். ஆனாலும்** ரசித்துச் சிரிக்கும் இடம்... அட்டகாச ரீஎன்ட்ரி! "டங்காமாரி ஊதாரி...' ரோகேஷின் வரிகளும் ஹாரிஸின் பீட்டும் மெர்சல் குத்து. மற்றபடி ஹாரிஸ் கைவரிசை ரொம்ப சுமார் ரகம். "சைக்கலாஜிக்கல் த்ரில்லர்' எனக் கோடு போட்ட கே.வி.ஆனந்த், அதன் மேல் போட்ட ரோட்டில்தான் ஏகப்பட்ட பள்ளங்கள். பல முன்ஜென்ம நினைவுகள், அதில் சிலர் அப்போதும் இப்போதும் இருப்பார்கள், வீடியோ கேம் மன உளைச்சல்கள் எனச் சுற்றிச் சுற்றி, நம்மை அரை மயக்கத்தில் ஆழ்த்தி மூஞ்சியிலேயே முரட்டுக் குத்து குத்துகிறார். "டங்காமாரி...' தவிர வியாசர்பாடி அத்தியாயம் மொத்தமும் அடாசு சினிமா. "பொதுவா அழகான பொண்ணுங்களை நான் ரெண்டாவது தடவை பார்க்க மாட்டேன். ஆனா, உங்களைப் பார்ப்பேன்' - டைமிங் ரைமிங்காக ஈர்க்கின்றன சுபாவின் வசனங்கள். **அந்தந்த அத்தியாயங்களுக்கு அதற்கான விசேட வெளிச்சம்**

# விஜயின் 60ஆவது படத்தை தயாரிக்கும் பிரமாண்ட நிறுவனம்

இளைய தளபதி விஜய் தற்போது புலி படத்தில் நடித்து கொண்டிருக்கிறார். இப்படம் முடிந்த கையோடு, கலைப்புலி தாணு தயாரிப்பில் அட்லீ இயக்கத்தில் ஒரு ப்டத்தில் நடிக்கவிருக்கிறார்.

இதை தொடர்ந்து இவரது 60ஆவது படத்தையும் ஒரு பிரமாண்ட நிறுவனம் தான் தயாரிக்கவுள்ளதாம். தற்போது திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கும் அனேகன் படத்தின் தயாரிப்பு நிறுவனம் ஏ.ஜி.எஸ் தான் விஜய்யின் 60ஆவது படத்தை தயாரிக்கவுள்ளதாக ஹொலிவுட் வட்டாரங்களில் கூறப்படுகிறது. மேலும், விஜய்யின் கால்ஷிட்டிற்காக இந்நிறுவனம் பல ஆண்டுகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



# கதையை கேட்டவுடன் மிரண்டு விட்டேன் - 'ஒரு மெல்லிய கோடு' படம் குறித்து இளையராஜா, அர்ஜுன் !

அக்ஷயா கிரியேசன்ஸ் சார்பில் பிரமாண்டமாக இப்படம் தயாராகிறது.படு திரில்லர், ஆக்ஷன் படமாக " ஒரு மெல்லிய கோடு " இருக்கும். விறுவிறுப்பான திரைக்கதை படம் பார்க்கும் ரசிகர்களை சீட்டின் நுனிக்கே கொண்டு செல்லும் அப்படியொரு காட்சிகள் இருக்கும்.

மேக்கிங் முதற்கொண்டு அனைத்து விடயங்களிலும் " ஒரு மெல்லிய கோடு" பாராட்டப்படும் படமாக இருக்கும் என்கிறார் A.M.R.ரமேஷ் படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. இந்த படத்தின் தொடக்க விழா பிரசாத் ஸ்டுடியோவில் நடைபெற்றது..

விழாவில் இசைஞானி இளையராஜா பேசியபோது, ஹொலிவுட் படங்களை விட தமிழில் தான் அதிக படங்கள் தயாராகின்றன. நிறைய திறமையான தொழில்நுட்ப கலைஞர்கள் இருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்.

'சிவப்பு ரோஜாக்கள்' படம் தான் நான் இசையமைத்த முதல் திரில்லர் படம். அந்த வகையில் இந்த 'ஒரு மெல்லிய கோடு' படமும் வெற்றி பெறும் என்று கூறினார்.
விழாவில் அர்ஜுன் பேசியது...

இயக்குநரிடம் இந்த கதையை கேட்டவுடன் மிரண்டுவிட்டேன். அப்படியொரு திரைக்கதை. நான் நடித்த படங்களிலேயே இது மிக முக்கியமான படமாக இருக்கும் என்றார்.



# மீண்டும் நடிப்பீர்களா?

## ஜெனிலியா கூறிய பதில்



பாய்ஸ், சச்சின், சந்தோஷ் சுப்ரமிணியம் ஆகிய படங்களின் மூலம் தமிழ் மக்கள் அனைவரையும் கவர்ந்தவர் ஜெனிலியா.

இவர் பாலிவுட் நடிகர் ரித்தேஷ் தேஷ்முக்கை திருமணம் செய்து கொண்டு திரைத்துறையில் இருந்து விலகினார்.

சமீபத்தில் தான் இவருக்கு குழந்தை பிறந்தது.

இந்நிலையில் மீண்டும் நடிப்பீர்களா? என்று கேட்டதற்கு ' நல்ல கதாபாத்திரங்கள் வந்தால் கண்டிப்பாக நடிப்பேன்.

மேலும், என் கணவர் என்னை நன்றாக பார்த்து கொள்கிறார், அதனால் நடிக்கின்ற எண்ணம் எனக்கு வரவில்லை, அப்படியே நடித்தாலும் சொந்த தயாரிப்பில் தான் நடிப்பேன் என்று கூறியுள்ளார்.



ஆவனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org